
கல்கி



KALKI 13.8.1967 40 காசு





அவனுக்கு ஒவ்வொரு நாளும் இன்க்ரிமின்* கொடுங்கள்

தீவிரமான பசியைத் தூண்டவும், படிப்படியாக எடையை அதிகரிக்கவும்

இன்க்ரிமின்* செரி பழத்தின் மணம் நிறைந்தது. l-லைசின் என்ற இன்றியமையாத பொருள் அடங்கியது. இந்தப் பொருள் உடல் நலத்திற்கு உகந்த பசியைத் தூண்டி, உணவின் முழுப்பயனையும் சிறந்த முறையில் பெற உடலுக்கு உதவுகிறது. இன்க்ரிமின்* சாப்பிட்டு வந்தால் உங்கள் குழந்தை வயிறாரச் சாப்பிடுவான். அவனுடைய எடையும் படிப்படியாக அதிகரிக்கும். ஒவ்வொரு நாளும் அவனுக்கு இன்க்ரிமின்* கொடுங்கள்—அவன் மனமாரச் சாப்பிடுவதையும் வளர்ச்சியடைவதையும் கண்டு மகிழுங்கள் !



இன்க்ரிமின்* வளரும் குழந்தைகளுக்கெனவே உண்டாக்கப்பட்ட ஒரு லெடர்லி தயாரிப்பு.

இன்க்ரிமின்*... வளர்ச்சிக்கு மிகவும் சிறந்தது

நாள் ஒன்றுக்கு:
இன்க்ரிமின்* ட்ராப்ஸ்: 10-20 துளிகள்.
இன்க்ரிமின்* ஸிரப்: ஒரு தேக்கரண்டி.


* ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்

Lederle லெடர்லி* டிவிஷன். ஸயனமிட் இந்தியா லிமிடெட் CYANAMID

CHCI-35 TAM

கல்கி

பொருளடக்கம்









பிலவங்க, ஆடி 28 - ஆகஸ்ட் 13

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

உலக பாங்கு முன்னிலையில்!   ராஜ்ய சர்க்கார்களின் முன்னிலையில்!





தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 ❋ இதழ் 2

தன்னம்பிக்கை இழந்தது யார்?

காங்கிரஸ் மேலிடத்தில் எல்லாம் சீராக இருப்பதாகவும், மக்கள் தன்னம்பிக்கை இழந்திருப்பதுதான் இன்றையக் கோளாறு என்றும் பிரதம மந்திரி அவர்கள் கூறியுள்ளார். ஐந்தே மாதங்களில் அவர் தமது குரலை அடியோடு மாற்றிக் கொண்டிருப்பது விந்தை!

பொதுத் தேர்தல்கள் முடிந்தவுடன் அதுபற்றித் தமது கருத்தை வெளியிட்ட ஸ்ரீமதி இந்திரா அம்மை, மக்கள் சுதந்திரமாகத் தங்கள் தீர்ப்பை அளித்திருப்பதாகவும், பல ராஜ்யங்களில் எதிர்க் கட்சி அரசாங்கங்கள் அமைவது சட்டசபை ஜனநாயகம் வளர உதவி புரியும் என்றும் வரவேற்றுப் பேசினார். ஆனால், அதன் பிறகு ஹரியானா, உத்தரப் பிரதேசம் ஆகிய இடங்களில் காங்கிரஸ் அரசாங்கங்கள் கவிழ்ந்து கடைசியாக மத்தியப் பிரதேசத்திலும் எதிர்க் கட்சிகளின் சர்க்கார் அமைந்தவுடன் பிரதமரின் குரல் மாறிவிட்டது. பொதுத் தேர்தலுக்குப் பிறகு மத்திய சட்டசபையில் ஓரளவுக்கு 'மெஜாரிட்டி' காங்கிரஸ் சர்க்கார் அமைந்தவுடன், எப்படியும் கட்சி பிழைத்துக் கொள்ளும் என்று பிரதமர் நம்பினார் போலும்! அந்த நம்பிக்கையின் மீதே மிகவும் தாராளமாக — தயாளமாக — மக்களின் சுதந்திரத் தீர்ப்பையும் எதிர்க் கட்சி அரசாங்கங்களையும் வரவேற்றுப் பேசிவிட்டார்! ஆனால் இப்போது காங்கிரஸ் ஆட்சி புரியும் ராஜ்யங்களில் 15 கோடி மக்களே இருக்கும்போது எதிர்க் கட்சிகளின் ஆட்சியில் 27 கோடி மக்கள் இருப்பதைப் பார்க்கும்போது — அதாவது தேசத்தின் மக்கட் தொகையில் 64 சதவிகிதம் எதிர்க் கட்சிகளின் ஆட்சியில் இருப்பதைக் காணும்போது — அவரது நம்பிக்கை குலைந்து விட்டது. காமாலைக்காரன் கண்களுக்குக் காண்பதெல்லாம் மஞ்சளாகத் தெரிவது போல், தமது தன்னம்பிக்கையை இழந்துவிட்ட பிரதமரின் கண்களுக்கு மக்கள் தன்னம்பிக்கை இழந்து விட்டதாகத் தோன்றுவது இயல்புதானே!

மக்கள் என்னவோ இன்றுபோல் என்றுமே உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கவில்லை எனலாம். காங்கிரஸ் அரசாங்கங்களை அகற்றும் சக்தி தமக்கு இருக்கிறது என்பதை நிதரிசனமாகக் கண்டு, தங்களது பலத்தில் அவர்கள் புது நம்பிக்கை பெற்றுள்ளனர். காங்கிரஸ் சர்க்கார் அகன்ற பிறகாவது தங்களுக்கு நல்ல காலம் கிடைக்கும் என்று ஆவலுடன் நம்பி வாழ்ந்துவருகிறார்கள். அவர்கள் நம்பிக்கை இழந்திருப்பது தங்களிடமல்ல. 'காங்கிரஸால்தான் தேசத்தில் ஸ்திரமான ஆட்சி நடத்த முடியும்' என்று முன்பு அவர்கள் நம்பி வந்த மாயையைத்தான் இப்போது கைவிட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் தலைவர்களிடம் முன்பு வைத்திருந்த நம்பிக்கையைத்தான் மக்கள் இழந்திருக்கிறார்கள். ஏககட்சி ஏகாதிபத்தியத்தை விரும்பாத எவரும் இந்தப் போக்கினை மனமார வரவேற்கத்தான் செய்வர்.

ஆனாலும் இப்போது தன்னம்பிக்கை இழந்திருப்பவர்களும் இருக்கிறார்கள். முக்கியமாக, பிரதமரும் அவரது சகாக்களும், காங்கிரஸ் ஜமீன்தார்களும் தன்னம்பிக்கை இழந்திருக்கிறார்கள். யதேச்சாதிகாரிகள் தன்னம்பிக்கை இழப்பது தேசத்துக்கு க்ஷேமமே. ஆனால் துரதிருஷ்ட வசமாகத் தன்னம்பிக்கை இழந்த வேறு சில சாராரும் இருக்கின்றனர். நாட்டுப் பொருளாதாரத்தில் மிக முக்கியமான இடம் பெற்ற தொழிலதிபர்களும், வியாபாரிகளும், விவசாயப் பெருங்குடி மக்களும் தன்னம்பிக்கை இழந்துவிட்டார்கள். அரசாங்கத்தின் அவிவேகத் திட்டங்கள் காரணமாக, உற்பத்திக்கு உறுதுணையாக இருக்கும் வர்க்கத்தினர் உற்சாகத்தை முற்றிலும் இழந்து விட்டிருக்கிறார்கள். மக்களுக்கு உணவு படைக்கும் உத்தமத் தொழிலில் ஈடுபட்டுள்ள நில உரிமையாளர்கள்

அனைவரும் நிலைகுலைந்திருக்கிறார்கள். இதனால்தான் நாட்டில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டது. இன்று இம்மந்த நிலை கவலைக்கிடமாகிவிட்டது. அபிவிருத்திக்கு ஆதாரமான பொறி இயல் தொழிலகங்கள் பலவற்றில் பத்துச் சத விதமே உற்பத்தி நடைபெறுகிறது. எங்கு பார்த்தாலும் ஆட்குறைப்பும், கதவடைப்பும், வேலை நிறுத்தமுமாக உள்ளது. 'பொருளாதாரச் சீரழிவு குதி நடை போடுகிறது' என்று இந்நிலை பற்றி 'வீக் எண்ட் ரிவ்யூ' கூறுகிறது. ரூபாயின் நாணய மதிப்பு வீழ்ந்த பின் சலுகைகள் கிடைத்தாலொழிய வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. மொத்தத்தில் உற்பத்தி பெருக வேண்டிய தருணத்தில் பல ஆலைகள் மூடப்பட்டு முன்னிலும் உற்பத்தி குறைய நேர்ந்திருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் இத்தனை காலமாகத் தேசத்தின் மாநிலங்களிலும் மத்தியிலும் ஆட்சி புரிந்த காங்கிரஸின் தவறான கொள்கைகள்தாம். இன்று பல ராஜ்யங்களில் எதிர்க் கட்சிகளின் ஆட்சி ஏற்பட்டுள்ளபோதிலும் தேச வாழ்வை முற்றிலும் சீர்திருத்துவதற்கு மாநில சர்க்கார்களால் அதிகம் எதுவும் செய்ய இயலாது. நிதி, திட்டம், பாதுகாப்பு முதலிய முக்கிய இனங்களில் மத்திய சர்க்காரிடமே லகான் இருக்கிறது. நாட்டு வாழ்வின் சகல அம்சங்களையும் தன் வசமாக்கிக் கொண்டுள்ள மத்திய சர்க்கார் இன்னமும் காங்கிரஸிடமே இருக்கிறது. நாட்டின் நிலைமை திருந்த வேண்டுமாயின் தேசத்தின் பொருளாதார மந்த நிலை மாறி, உற்பத்தி பெருக வேண்டுமாயின் — அதற்குத் தில்லித் தலைமைப் பீடத்தின் சிந்தனை மாற வேண்டியது அத்தியாவசியம். அவ்வாறு மாறுமென்பதற்கான அறிகுறி ஏதும் இன்றளவும் காணப்படவில்லை. சுயமாகக் காங்கிரஸாருக்கு விவேகமோ மனச்சாட்சியோ இல்லாததோடு, கட்சியின் தோல்விகளைக் கண்ட பின்னரும் அவற்றின் பாடத்தைப் புரிந்துகொள்ளும் திராணி அவர்களுக்கு இல்லை. இன்னமும் அவர்களுக்குப் பச்சாத்தாபமோ, அடக்கமோ பிறக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் நாட்டின் பேரறிஞர்களைக் கொண்ட கட்சிப் பற்றற்ற மத்திய சர்க்கார் அமைந்தாலொழிய அரசாங்கக் கொள்கை அடியோடு மாறுவதற்கான வாய்ப்பு இல்லை. இதைத்தான் ராஜாஜி அழுத்தம் திருத்தமாக எடுத்தியம்பி வருகிறார்.

ஃ ஃ ஃ

கட்சிப் பற்றற்ற மத்திய சர்க்கார் அமையவேண்டும் என்று ராஜாஜி கூறியுள்ள யோசனையை ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் நிராகரித்திருக்கிறார். படுகிணற்றில் விழுந்து கொண்டிருக்கும்போதும், கிணற்றின் சுற்றுச் சுவரிலுள்ள தேனடையிலிருந்து சொட்டும் தேனை ருசிப்பவனைப் போல, நெருக்கடி நிலைமையின் விளிம்பில் இன்றைய மத்திய சர்க்கார் உள்ள போதிலும் அதிகாரத் தேனின் சுவையை விடுவதற்கு ஆட்சியாளர்கள் விரும்பவில்லை.

நெருக்கடி நிலைமையின் விளிம்பில் சர்க்கார் இருப்பதாகச் சொன்னதைச் சற்றே விளக்க வேண்டும்:

கோடானு கோடி ரூபாய்கள் தேவைப்படும் பெரும் திட்டங்களை மேற்கொண்டுள்ள இன்றைய மத்திய சர்க்காரின் ஜீவாதாரம் அதன் வருமானம்தான். சர்க்காரின் நிதியம் உருவாவதற்கு நான்கு வழிகள் பொதுவாக உண்டு.

(1) மக்களின் மீது மறைமுக — நேர்முக வரிகள் விதித்தல்.

(2) நாட்டு மக்களிடமிருந்து வட்டிக்குக் கடன் எழுப்புதல்.

(3) அந்நிய நாடுகளிடம் கடன் வாங்குதல்.

(4) ரூபாய் நோட்டு அச்சடித்துப் புழங்க விடுதல்.

மேற்கண்ட நான்கு முறைகளையும் சென்ற பதினைந்து ஆண்டுகளாகக் காங்கிரஸ் ஆட்சி தீவிரமாகக் கடைப்பிடித்து வந்ததால் இன்று அந்த ஊற்றுக் கண்களும் வறண்டுவிட்டன!

மக்களுக்கு இனி வரி போட முடியாத நிலையை அடைந்தாகி விட்டது.

உள்நாட்டில் கடன் எழுப்பினால் பணம் தர இயலாத நிலையைச் சேமிக்கக் கூடிய அனைவரும் அடைந்து விட்டார்கள்.

அந்நிய நாடுகளிடம் சென்ற பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகக் கடன் வாங்கி வந்ததால், அந்த நாடுகளுக்கு அசலையும் வட்டியையும் கொடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. ஆகவே அவற்றிடம் புதிய கடனுக்குப் போக வழியில்லை. நாம் கொடுக்க வேண்டிய வட்டியையும் அசலுக்கான தவணைகளையும் சற்றுக் காலம் தாழ்த்திக் கொடுக்க அவகாசம் கேட்கலாம்; அவ்வளவுதான்.

நோட்டு அச்சடித்துப் புழக்கத்தில் விட்டால், ஏற்கனவே உயர்ந்துள்ள விலைவாசி இன்னும் உயர்ந்து மக்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கக் கூடும்.

ஆகவே இவற்றில் எந்த முறையையும் கடைப்பிடிக்க முடியாமல் இன்றைய அரசாங்கம் திணறிக் கொண்டிருக்கிறது. இதை நெருக்கடி நிலையின் விளிம்பு என்று சொல்வது பொருத்தமேயன்றோ?

நெருக்கடியின் விளிம்புக்குச் சர்க்கார் வந்துவிட்டதைவிடப் பெரிய துரதிருஷ்டம், தேசத்தையும் இந்த விளிம்புக்குக் கொண்டு வந்திருப்பதே! ஒரு கட்சியின் சர்க்கார் கவிழ்வதால் பெரும் தீங்கு இல்லை. ஜனநாயகத்தில் இத்தகைய வீழ்ச்சி நன்மையையே பயப்பதும் உண்டு. ஆனால் தேசம் வீழ்ச்சி அடைய விடக் கூடாது. தேசம் வாழுவதற்கு முழு முயற்சியும் எடுக்க வேண்டும். அதற்கு முதல் படியாகத் தில்லி சர்க்காரை மாற்ற வேண்டும். தேசத்துக்கு அவசியமில்லாத திட்டங்களைத் தீட்டி அதற்காகத் தேசத்தின் சக்திக்கு மீறிச் சர்க்காரின் வருமானத்தைப் பெருக்க முயலும் ஆட்சி தொடங்கி இந்தச்

சுதந்திர தினத்துடன் இருபதாண்டுகள் பூர்த்தியாகி விட்டன. இனியும் இந்த ஆட்சியைப் பரீட்சை பார்க்க வேண்டியதில்லை. இந்திரா அம்மை ஒப்பினாலும் சரி, ஒப்பாவிடினும் சரி, தேசத்தை வாழ்விக்கக் கூடிய புதிய கட்சிப் பற்றற்ற சர்க்கார் ஏற்பட்டேயாக வேண்டும்.

இன்று மக்கள் மாநில அடிப்படையில் பரவலாகப் பெற்றுள்ள தன்னம்பிக்கை அகில தேசியத் தன்னம்பிக்கையாகப் பரிணமிக்க வேண்டுமாயின் — உற்பத்திப் பெருக்கில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர்களும் வியாபாரிகளும் பொதுமக்களைப் போலவே தன்னம்பிக்கை பெற வேண்டுமாயின் — அதற்குக் கட்சிச் சார்பில்லாத மத்திய சர்க்கார்தான் மருந்து. இந்தச் சுதந்திர தினத்தில் ஒவ்வோர் இந்தியனின் சிந்தனையும் இவ்விஷயத்தில் ஈடுபடுமாக!

என்ன சேதி?

- டாக்டர் கோஷின் பதில்
- தில்லி பஸ்
- டிகாலின் விஷமம்

மேற்கு வங்கத்தில் ஐக்கிய முன்னணி மந்திரி சபையில் உணவு மந்திரியாகப் பதவியிலிருக்கும் டாக்டர் பி. சி. கோஷ் தன்னலமற்ற சிறந்த தேச பக்தர் என்று புகழ் படைத்தவர். வங்கம் பிளவுபட்டு, பெருங் கொந்தளிப்பாக இருந்த நிலையில் அதைச் சமாளிக்கும் திறம் படைத்தவர் இவரே என்று கருதி அன்றைய காங்கிரஸ், மேற்கு வங்க முதன்மந்திரி பதவியை டாக்டர் கோஷுக்கு வழங்கியது. காலக்கிரமத்தில் காங்கிரஸில் சுயநலக் கும்பல்கள் அதிகமாகவே அதை விட்டு விலகி விட்டார் ஸ்ரீ கோஷ்.

இன்று மீண்டும் மேற்கு வங்கத்தில் பெருங் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கும் நிலையில் முதன் மந்திரி பதவி ஏற்றுள்ள அஜாய் முகர்ஜி, மிகவும் சங்கடமான உணவு இலாகாவை டாக்டர் பி. சி. கோஷ் அவர்களுக்கே வழங்கியிருக்கிறார். ஸ்ரீ கோஷின் உணவுக் கொள்கையை இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் கண்டித்ததால், அவர் தமது பதவியை ராஜிநாமா செய்தார். முதன்மந்திரி குறுக்கிட்டு வற்புறுத்தியதன்பேரில் ராஜிநாமாவை வாபஸ் பெற்றுக் கொண்டிருக்கிறார். ஐக்கிய முன்னணியின் பதினெட்டு அம்சத் திட்டங்களில் ஒன்றாகிய உணவை அரசாங்க வர்த்தகத் துறையில் கொண்டு வரும் காரியத்தை ஏன் இன்னும் அவர் அமுலுக்குக் கொண்டு வரவில்லை என்று அவரை நிருபர்கள் கேட்டதற்கு, தாம் கோஷங்களுக்கு இரையாகவில்லை என்று பதில் அளித்திருக்கிறார் டாக்டர் கோஷ்.

மக்களுக்கு ரஞ்சகமான கோஷங்களின் மீது வாக்குறுதிகள் அளித்துப் பதவிக்கு வந்துள்ள மந்திரிகளும் சட்ட சபை அங்கத்தினர்களும் டாக்டர் கோஷ் அவர்களின் நேர்மையான நெஞ்சுரத்தைப்பெற முயல வேண்டும்.

முன்னால் போகிறவன் இடறி விழுந்தால் பின்னால் வருகிறவனுக்கு விளக்குப் பிடித்த மாதிரி என்று ஒரு பழமொழி தமிழ் மொழியில் உண்டு. அந்தப் பழமொழி இன்று ஆட்சிபீடத்திலுள்ள தமிழ்ப் பற்று மிக்க அமைச்சர்களுக்குத் தெரிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

பாரதத் தலைநகராகிய ஸ்ரீ தில்லியில் பஸ் போக்குவரத்து அரசாங்க உடைமையிலிருந்து வருகிறது. அதனால் தில்லி மக்களுக்கு ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலைத் தாங்க முடியவில்லை என்பதால் சில குறிப்பிட்ட ரூட்களைத் தனியார் துறைக்கு ஒதுக்கி, அதில் 200 பஸ்கள் விட அனுமதித்துள்ளது அரசு. மாதம் குறிப்பிட்ட ஒரு தொகையைத் தில்லி அரசாங்க பஸ் போக்குவரத்து நிறுவனத்துக்குத் தனியார் செலுத்திவிட வேண்டும் என்பது ஒப்பந்தத்தின் ஒரு ஷரத்தாகும். தில்லி மக்கள் இப்பொழுது பெரும் ஆறுதல் அடைந்திருக்கின்றனர்.

பஸ்போக்குவரத்தைத் தனியார் துறையிடமிருந்து பறித்து, சர்க்கார் உடைமையாக்குவதில் தீவிரம் காட்டும் தமிழக அரசு மேலே சொன்ன பழமொழியை நினைவுகூர வேண்டும்.

அரசாங்கம் மக்கள் நன்மைக்காகச் செயல்படவேண்டுமே தவிர, தாம் பேசிவந்த கொள்கையை அமுல்படுத்த வேண்டுமே என்ற காரணத்துக்காக மட்டும் இயங்குவது விரும்பத்தகாத விளைவுகளை உண்டாக்கலாம்.

கனடா நாட்டில் ஆங்கிலம் பேசும் மக்களும் பிரெஞ்சு மொழி பேசும் மக்களும் வாழ்ந்து வருகிறார்கள். பிரெஞ்சு மொழி பேசும் மக்கள் க்விபெக் என்ற மாகாணத்தில் பெருவாரியாக வசிக்கிறார்கள். அவர்களில் ஒரு கோஷ்டியினர் மொழி அடிப்படையில் நாட்டின் பிரிவினையைக் கோருகின்றனர். கனடா நாட்டுக்கு விஜயம் செய்த பிரெஞ்சு ஜனாதிபதி டிகால் அந்தப் பிரிவினை உணர்ச்சிக்குத் தூபம் போடும் வகையில் பேசியிருக்கிறார். தாம் வகிக்கும் பதவிக்கும் தேச நாடுகளுடன் நடந்து கொள்ள வேண்டிய சம்பிரதாய முறைகளுக்கும் புறம்பாக ஜனாதிபதி டிகால் நடந்து கொண்டது கண்டிக்க வேண்டியதொன்றாகும்.

அருணகிரிநாதர் திருவிழா

பக்திச் சுவை ததும்ப முருகன் புகழ் பாடிய அருணகிரிநாத சுவாமிகளின் விழா திருவண்ணாமலையில் 15—8—1967 சுதந்திர தினத்தன்று நடைபெறுகிறது. முருக பக்தர்கள் திரளாக விஜயம் செய்து புனிதம் பெறவேணும்.



ராஜாஜியின் கருத்துக்கள்

உத்தரப் பிரதேசத்தில் ஸ்ரீ சரண் சிங்கின் சர்க்காரைக் கவிழ்ப்பதற்குக் காங்கிரஸ் செய்த முயற்சி தோற்றுவிட்டது. இது காங்கிரஸ் தானாகவே வலிய ஏற்படுத்திக்கொண்ட தோல்வி. இதேபோல் மேற்கு வங்கத்தில் சர்க்காரை அகற்றுவதற்காகக் காங்கிரஸ் செய்த பெருமுயற்சிகளும் பலன் தரவில்லை.

மத்தியப் பிரதேசத்திலும் காங்கிரஸுக்கு எதிராகவே சம்பவங்கள் முடிந்துள்ளன. ஸ்ரீ மிச்ராவின் காங்கிரஸ் சர்க்கார் விழுந்து விட்டது. மீண்டும் பொதுத் தேர்தல் நடத்த வேண்டும் என்று வாதம் செய்தார் ஸ்ரீ மிச்ரா. தேர்தல் வெற்றிகளுக்குத் தேவைப்படும் ஏராளமான பொருட்செலவைக் காங்கிரஸைத் தவிர மற்ற கட்சிகளால் தாக்குப் பிடிக்க முடியாது என்று கருதியே அவர் இவ்வாறு வாதம் செய்தார் போலும்! எனினும் சட்டசபையைக் கலைத்துப் புதுத் தேர்தல் நடத்துவதைக் காங்கிரஸின் தலைமை எஜமானர்கள் ஆதரிக்கவில்லை. எதிர்க் கட்சிக்கூட்டணி அங்கத்தினர் சிலரைக் காங்கிரஸுக்கு இழுப்பது பொதுத் தேர்தல் நடத்துவதை விட எளிய உபாயம் என்று அவர்கள் கருதியிருக்கக் கூடும்!

ஃஃஃ

கேரளத்தில் மீண்டும் கள்ளுக்கடைகளைத் திறந்துவிட்ட புதிய சர்க்கார், அங்கு கள்ளுக்கடை லைசென்ஸ் பெற்றவர்கள் நன்றாக வியாபாரம் செய்ய இயலவில்லை என்பதைக் கண்டு வருகிறது. காரணம், மக்கள் கள்ளை விரும்பி வாங்காததே! கள்ளுக் குடியில் உள்ள நாட்டத்தை விட்டுவிட்ட மக்களை வாழ்த்த வேண்டும். இவ்வாறு மக்கள் தங்களுக்கு நன்மை செய்து கொள்வதைக் கண்டு ராஜ்யத்தின் சர்க்கார் வருத்தப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறதெனில் அது எவ்வளவு பரிதாபமான விஷயம்!

ஃஃஃ

ஆட்சி அதிகாரம் பெற்ற ஒரு கட்சி நில உரிமையாளருக்கும் தொழிலாளருக்குமிடையே துவேஷத்தை மூட்டி வோட்டு அறுவடை செய்யலாம்; அல்லது அவ்விருவரையும் அமைதியுடன் ஒத்துழைக்குமாறு செய்து உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கலாம். இவற்றில் — காங்கிரஸ் சர்க்காரைப் போலில்லாமல் — திரு அண்ணாதுரை ஒத்துழைப்பு வழியை மேற்கொண்டிருப்பதில் மகிழ்கிறேன். உழவுத் தொழிலாளர், உரிமையாளர் இருவருக்குமே அவர் ஒத்துழைப்பின் அவசியத்தை எடுத்துக் கூறி வருகிறார். பூசலை விதைப்பதில் அவருக்கு நாட்டமில்லை. பரஸ்பர நல்லெண்ணமும் சகாயமும் ஏற்பட வேண்டும் என்றே அவர் விரும்புகிறார்.

ஃஃஃ

லண்டனில் பத்திரிகை நிருபர்களிடம் ராஷ்டிரபதி ஜாகிர் ஹுஸைன் அவர்கள் சர்ச்சைக்குரிய விஷயங்களைத் தெரிவிக்கக் கூடாது என்ற எண்ணத்தின்பேரில் நமது தாற்காலிக ஹைகமிஷனர் நடந்துகொண்ட விதத்தைப் பற்றி பார்லிமெண்டில் விவாதம் நடந்திருக்கிறது. விவாத விவரங்களைப் படிக்கும்போது, இந்திய ராஷ்டிரபதியை ஏதோ ஒரு விதத்தில் பிரிட்டிஷ் ராணிக்குச் சமமாக ஹைகமிஷனர் கருதியதாகத் தோன்றுகிறதெனினும், அதே சமயத்தில் பிரிட்டிஷ் ராணியிடம் அவரது அரசாங்க அதிகாரிகள் காட்டும் ஆழ்ந்த மரியாதையிலும், கட்டுப்பாட்டிலும் சிறிதளவைக்கூட நம் ராஷ்டிரபதி விஷயத்தில் ஹைகமிஷனர் காட்டவில்லை என்பதும் தெரிகிறது.

தேர்தல் மூலம் பதவியைப் பெறும் இந்திய ராஷ்டிரபதியைப் பாரம்பரியத்தின் மூலம் பதவி பெறும் பிரிட்டிஷ் மன்னருடன் சமமாக வைக்கலாமா என்று அடிப்படைக் கேள்வியும் உள்ளது. இது சட்ட நிபுணர்கள் விவாதிக்க வேண்டிய விஷயம். இதெப்படியாயினும், ஸ்ரீ சாக்ளா நமது பிரிட்டிஷ் ஹைகமிஷனரை ஏன் கண்டிக்கவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. 'பிரிட்டிஷ் பத்திரிகைகள் இந்தியத் துவேஷம் கொண்டவை' என்ற தமது நினைப்பை ஸ்ரீ சாக்ளா வெளியிட்டுவிட்டதால் அவர் இந்த விவகாரத்தை முற்றிலும் விளக்கிவிட்டதாகாது.

தேசத்தின் தலைமைப் பதவி வகிப்பவரது ஸ்தானத்தைப் பற்றித் தாற்காலிக ஹைகமிஷனரின் கருத்து யாதாயினும் சரி, அவர் ராஷ்டிரபதியிடம் நடந்து கொண்டதுபோல் எந்தப் பிரிட்டிஷ் அதிகாரியும் நடந்துகொள்ள மாட்டார்.

ஃஃஃ

ஆட்சிமொழி மசோதாவின் தலைவிதி எப்படி இருக்குமோ? அது எப்படி முன்னேறுமோ? இதெல்லாம் எப்படி இருப்பினும், ஆங்கிலத்தின் ஸ்தானத்தைச் சொல்லும்போது கூட்டு மொழி, உப மொழி என்பது போன்ற பெயருரிச் சொற்களைத் தவிர்ப்பது நல்லது. இவ்வாறு அடைமொழி தருவதால் ஆங்கிலத்துக்கு இரண்டாம்பட்சமான இடமே தருவதாக அர்த்தம் தொனிக்கும்.



காக்கை



'காக்கை குருவி எங்கள் சாதி' என்றார் பாரதியார்.

அந்தக் காக்கையைப் பற்றிய தகவல்கள் இதோ :

கே. பாலசுப்பிரமணிய அய்யர்



நம் நாட்டுக் காவியங்களிலும், மற்ற இலக்கியங்களிலும் பக்ஷிகளைப் பற்றியும், அவற்றின் தன்மைகளைப் பற்றியும் ஆங்காங்கே உவமை வாயிலாகவும் வர்ணனைகள் மூலமாகவும் பல விவரங்கள் வருகின்றன.

இவ்விதமே அழகில்லாததும், குரலில் சிறிதும் இனிமை யற்றதுமான காக்கையைப் பற்றியும் நம் நூல்களில் பல இடங்களில் வர்ணனைகள் வருகின்றன.

வேப்பம்பழத்தை ரசித்துத் தின்று திருப்திகொள்ளும் ஜந்து ஒன்று உண்டானால் அதுதான் காக்கை என்று ஆச்சரியப்படுகிறார் கவி, 'குவலயாநந்தம்' என்ற நூலில்.

அம்பாளின் குரலைக் கேட்கும்போது, குயிலின் குரல் இனிக்கவில்லை. இதற்குக் காரணம் குயில் முட்டையிட, காக்கை அதை அடை காத்துக் குஞ்சு பொரிப்பதனால் இந்த இயற்கை சம்பவத்தைக் கொண்டு காக்கையுடன் சம்பந்தப்பட்டு விட்ட குயிலின் குரலை ரஸிக்க முடிய வில்லை என்று காளிதாஸ மகாகவி குமார ஸம்பவத்தில் அழகாகக் கூறுகிறார்.

காக்கையும் குயிலும் முட்டையிடும்போது உறவு அதிகம். அந்த முட்டைகளைத் தன்னுடையதாகவே காக்கை பாவிக்கும். பிறகு குயிலின் குஞ்சு சப்தித்துக் கொண்டு, பறந்து சென்றுவிடும். இதைக்கொண்டே, 'காக்கைக்கும் குயிலுக்கும் என்ன வித்தியாசம்? இரண்டும் கருநிறம் கொண்டுள்ளனவே?' என்று சந்தேகிப்பவர்கள், வசந்த காலம் வந்தால் அவற்றின் சப்தத்தைக் கொண்டு உண்மை விளங்கிக் கொள்வர் என்று மற்றொரு கவி பகர்ந்தார்.

காக்கையின் கருமையைப் பார்த்தால், கிருஷ்ணனின் ஞாபகம் வருகிறது என்று கண்ணன் பாட்டில் பாரதியார் கூறுகிறார்.

காக்கையிடம் உள்ள ஐந்து நற்செயல்கள் கவனத்துக்கு உரியவை. அதாவது — மிகவும் தனிமையில் ஆண் பெண் உறவு கொள்வது, நேரத்துடன் செயற்படுவது, குறிப்பிட்ட காலத்தில் (ஆனி ஆடி மாதங்களில் என்பர்) தன் கூட்டைக் கட்டிக்கொள்வது, எப்பொழுதும் விழிப்புடன் இருப்பது, சோம்பலின்மை ஆகிய ஐந்து குணங்களைக் காக்கையிடமிருந்து நாம் கற்க வேண்டும்.

காக்கையிடமுள்ள மேலும் சில நல்ல குணங்களும் புகழப் பட்டுள்ளன. தாயுமான ஸ்வாமிகள், 'காகம் உறவு கலந்துண்ணக் கண்டீரே' என்று கூறி, தாம் பேரானந்தத்தை அடைந்துள்ளபோது மற்றவர்களும் அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமே என்ற தம் ஆசையைக் காக்கையின் உதாரணம் கூறிவிளக்குகிறார். காக்கையின் பயந்த சுபாவம் அவரால் ஓரிடத்தில் கூறப்பட்டுள்ளது, 'காகமானது கோடி கூடி நின்றாலும் ஒரு கல்லின்முன் எதிர் நிற்குமோ' என்று.

காக்கைக்கு 'பலிபுக்' என்று பெயர். இன்றும் நாம் அதற்கு அன்னமிட்டு உண்பது பழக்கத்தில் காண்கிறது. சிராத்தத்தில் அதற்குப் பலியிடுவது மிகவும் அவசியமான காரியமாக விதிக்கப்பட்டுள்ளது. 'வாயஸபிண்டம்' என்றே அதற்குப் பெயரும் உள்ளது. காக்கை பலியைச் சாப்பிட்டால்தான் பித்ருக்களுக்குத் திருப்தி என்றும் கருதப் பட்டு, அது எந்தத் திக்கை நோக்கிக் கொண்டு அந்தப் பிண்டத்தைப் புசிக்கிறது என் பதையும் கூட ஆஸ்திகர்கள் கவனிப்பர். 'க்ருஹ பலிபுக்' என்றே மகாகவி காளிதாஸர் காக்கையைக் குறிக்கிறார்.

ஸ்ரீமத் ராமாயணத்தில் உள்ள சம்பவம் நாம் அறிந்ததே. இந்திரனின் புத்திரனை ஜயந்தன் காக்கை உருவில் வந்து சீதாதேவியைச் சீண்டி, அது காரணமாக ராமனின் கோபத்துக்கு ஆளாகி, பிரும் மாஸ்திரத்தை ராமன் பிரயோ





லிக்க, ஒரு காதையும் கண்ணையும் இழந்தான். *இதையே பின்பற்றி அருணகிரிநாதர் திருப்புகழில் 'காதுமொரு விழி காகமுற அருள் மாயன்' என்று பாடுகிறார். காகாக்ஷ்ரன் என்று கூட இதைக் கூறுவது அசுர குணம் மேலோங்கியதனால் போலும்.

காக்கை சனி பகவானின் வாகனம்.



இவ்வாறெல்லாம் புகழ்ச்சி, இகழ்ச்சி இரண்டுக்குமே இலக்காகியுள்ளது காக்கை நம் நூல்களில்.

ஓர் இனத்தில் இழிவாகவோ அல்லது சிறியதாகவோ உள்ளதைக் கூறும்போது, 'காக்கை' என்ற சொல் சேர்த்துக் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். தக்காளி மூன்று விதம். சீமைத்தக்காளி, நாட்டுத் தக்காளி என்று இரண்டு வகை. தக்காளியில் மிகச் சிறியது மணத்தக்காளி என்ற மூன்றும் வகை. இது சிறிதாக உள்ளதைக் கொண்டே ஸம்ஸ்கிருதத்தில் இதற்குக் 'காகமாசி' என்ற பெயர் வந்துள்ளது.

இவ்வாறே 'கொஞ்சம் பொன்' என்ற இடத்தில் 'காக்கைப் பொன்', சிறிய சோள தானியத்தைக் 'காக்கைச் சோளம்' என்றெல்லாம் வழங்குகிறார்கள்.

'காக்காய் பிடிப்பது' என்று வெகு நாட்களாகச் சொல்லப்படுவது நம் பழக்கத்தில். இதை அப்படியே ஆங்கிலத்திலும் 'க்ரோ காச்சிங்' (Crow catching) என்று கூறி வருகிறார்கள். காக்காய் பிடிப்பது என்பது எப்படி வந்தது என்பது தெரியவில்லை. *

'கடவுள் நமக்கு நல்ல உடலை அளித்து, அதனுள் தாமே வந்திருந்து நம் உள்ளத்தில் குடிபுகுந்து நம்மை அருளக் காத்திருக்கிறார். இவ்வளவு கருணை கொண்ட கடவுளை நினையாமல் என் மனம் வேறு எங்கெல்லாமோ நாடுகிறதே!' என்பதை எண்ணி வெதும்புகிறார் அப்பர் சுவாமிகள், திருவாரூர்ப் பதிகத்தில். இதைச்சொல்லுமிடத்து 'வேட்டைக்குப் போன இடத்தில் முயலை விட்டுக் காக்கையின் பின் போவது எவ்வளவு குறைவோ அது போல' என்ற உவமையைக் கொண்டு ''முயல் விட்டுக் காக்கை பின் போனவாறே'' என்கிறார்.

இதிலிருந்து உணர முடிவதாவது — உலகில் எல்லாப் பிராணிகளிடத்திலும் நல்லவை கெட்டவை கலந்து காண்கின்றன என்பதே.

[நன்றி: 'காமகோடி ப்ரதீபம்']

* சீதையும் ராமனும் கருணை காட்டி ஜயந்தனை மன்னித்து அருளினர். அப்போது, ''சீதைக்கு இணை எவள்? (கா?) ராமனுக்கு இணை எவன்? (க:?'' என்று ஜயந்தன் கூறியதாலேயே 'காக:' என்ற பெயர் ஏற்பட்டதாகச் சொல்வதுண்டு.

* காலையும் கையையும் பிடித்துக் கெஞ்சுவதே, 'கால் + கைபிடிப்பது' என்றாகி, பிறகு 'காக்கை பிடிப்பது' என்று திரிந்திருக்கக் கூடும்.

மகா பண்டிதர் மறைவு


ஸம்ஸ்கிருத மொழியில் ஈடிணையற்ற புலமை வாய்ந்த போலகம் ஸ்ரீ ராமசாஸ்திரிகளின் மறைவு கேட்டு வருந்துகிறோம். சிறு வயதிலேயே தம் தந்தை சுந்தரசாஸ்திரிகளிடம் காவிய நாடகங்களைப் படித்த ஸ்ரீராம சாஸ்திரிகள் பிறகு சிதம்பரத்தில் மகா வித்வான்களான ஹரிஹர சாஸ்திரிகள், சிவகண்ட பாணி ஸ்வாமி தீக்ஷிதர் இவர்களிடமும், பிறகு கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகளிடமும் சாஹித்ய, நியாய வேதாந்த சாஸ்திரங்களைக் கற்றுப் பாண்டித்தியம் பெற்றார். கும்பகோணம் அத்வைத சபையின் முக்கியமான பண்டிதர்களில் இவர் ஒருவர். திருவானைக்காவில் ஜகத்குரு வித்யாஸ்தானத்தில் பிரதான அத்யக்ஷராக இருந்து பல சிஷ்யர்களுக்கு "வேதாந்த பாடம் போதித்துள்ளார். கடந்த இருபத்திமூன்று ஆண்டுகளாகச் சென்னை சம்ஸ்கிருதக் கலாசாலையில் அத்யாபகராக இருந்து அருந்தொண்டாற்றியுள்ளார். பெரும் பாண்டித்தியம் படைத்த போதிலும் எளிய ஸ்பாவம் உள்ளவர் ஸ்ரீ சாஸ்திரிகள். அத்வைத சாஸ்திரத்தில் பல நூல்களை இயற்றியுள்ளார். சிறந்த ஆராய்ச்சியாளர். ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் 'சாஸ்திர ரத்னாகரம்' என்ற பிருதை சாஸ்திரியாருக்கு அளித்து அனுக்கிரஹித்துள்ளார்கள். சாஸ்திரிகளின் பிரிவினால் ஸம்ஸ்கிருத உலகமும், குறிப்பாகத் தென்னாடும் பெரும் அறிவுப் பொக்கிஷத்தை இழந்து விட்டதாகவே கூறலாம்.



விபரீதம் விளைவித்த வைர நெக்லஸ்

கே. ராஜாராமநாதன்

அண்மையில் ஸ்ரீமதி இந்திரா காந்தி, விலையுயர்ந்த ஒரு வைர நெக்லஸைப் பெற்றுக் கொண்டதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு மறுப்புக் கூறி மீள வேண்டியிருந்தது. இதுபோலவே வைர நெக்லஸ்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் உலக சரித்திரத்தில் பல உண்டு. இதோ ஓர் உதாரணம் :



பாரீஸில் ஒரு நிறுவனம். பிரபல நகைத் தயாரிப்பாளர்கள். பல வருஷங்களாக விலை உயர்ந்த கற்களைச் சேகரித்து அற்புதமான ஒரு நெக்லஸை உருவாக்கினார்கள். பதினைந்தாம் லூயியின் அன்புக்குரியவளான மாடம் பேரிக்கு இதனை விற்கலாம் என்ற நோக்கத்தில் நகை தயாராகி வந்தது. ஆனால் அது முழுமை பெறு முன்னரே லூயி மன்னன் இறந்து விட்டான். ஆகவே, அறுபத்து நாலாயிரம் பவுன்கள் பெறுமானமுள்ள அந்த நகையை அரசி மேரி அன்டோய்நெட்டுக்கு விற்க நினைத்தான் நகை வியாபாரி.

பதினாறும் லூயி பட்டத்துக்கு வந்ததும் அரசவையில் இருந்தோரில் ஒருவர் அரசிக்கு இந்த நகையைக் காண்பித்தார். அரசியின் கண்கள் அகல விரிந்தன. அதனை அணிய அவளுக்கு ஆசைதான். ஆயினும் அமெரிக்காவுடன் அப்போது நடைபெற்று வந்த யுத்தத்துக்குக் கையிலிருந்த ஒவ்வொரு 'பைசா'வும் தேவைப்பட்ட காலம் அது. ஆகவே அரசி நகையை வாங்க மறுத்து விட்டாள்.

இதனால் நகை வியாபாரிக்குப் பெரிய பிரச்னை ஏற்பட்டது. இத்தனை விலை உயர்ந்த நகையை யார் தலையில் கட்டுவது ? என்பதுதான் அந்தப் பிரச்னை. அத்தனை விலை கொடுத்து வாங்க யாரால் முடியும் ?

அப்போது பிரான்ஸ் தேசத்தில் பிரதான அரசியல் ஆலோசகராக விளங்கிய கார்டினல் ரோஹனைப் பல காரணங்களால் அரசி மேரி அன்டொய்நெட்டுக்குப் பிடிக்காது. அவரை வெறுத்து ஒதுக்கி வந்தாள். ரோஹன் அரசியின் நல்லெண்ணத்தை மீண்டும் எப்படிப் பெறலாம் என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

இந்தச் சமயத்தில்தான் சீமாட்டி லாமோட்டி ரோஹனை அணுகினாள். தான் அரசியுடன் நெருக்கமான நட்புக் கொண்டிருப்பதாகவும் ரோஹன் மீது அரசிக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்படத் தன்னால் உதவ முடியும் என்றும் கூறினாள். ரோஹன் அவளை முழுமையாக நம்பி விட்டார். லாமோட்டி சீமாட்டி அரசி எழுதியது போலவே பல கடிதங்களை ரோஹனுக்கு எழுதினாள். ஆரம்பத்தில் இந்தக் கடிதங்கள் ரோஹனை மன்னித்து விட்டது போலவும் அவருடன் நட்புரிமை பாராட்ட விரும்புவது போலவும் அமைந்திருந்தன. படிப்படியாகக் கடிதங்களில் ஓர்

அந்தரங்க பாவம் ஏறி, இறுதியில் அரசி கார்டினல் ரோஹனிடம் அடக்க முடியாத காதல் கொண்டிருப்பதுபோல் தொனிக்க ஆரம்பித்தன. இப்போதும் ரோஹன் இதெல்லாம் சூது என்று சந்தேகிக்கவேயில்லை! 1784ஆம் ஆண்டில் ரோஹனுக்கும் வெள்ளை உடை உடுத்தியிருந்த ஒரு பெண்மணிக்குமிடையே ஒரு சந்திப்பு நிகழ்ந்தது. இது சீமாட்டி லாமோட்டியால் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பு. இருளில் வெர்ஸெய்ல்லஸ் தோட்டத்தில் தான் நெருங்கி அளவளாவி மகிழ்ந்த, முகத்திரையிட்டிருந்த அந்தப்பெண் அரசியேதான் என்று கார்டினல் ரோஹன் உறுதியாக நம்பினார். பேசி முடிந்து வீடு திரும்பும்போது அரசி தம்மிடம் மட்டில்லாக் காதல் கொண்டிருப்பதாக ரோஹன் நிச்சயித்தார்.

1785, ஜனவரி 21ஆம் நாள் லாமோட்டி சீமாட்டி ரோஹனுக்கு அரசி எழுதுவது போல் ஒரு கடிதம் எழுதினாள். அதில் குறிப்பிட்ட அந்த நகை வியாபாரியிடம் உள்ள அந்த நெக்லஸை வாங்கத் தான் பிரியப்படுவதாகத் தெரிவித்தாள். ஆனால் இது பற்றி யாரேனும் வீண் பண விரயம் செய்வதாக அவதூறாகப் பேசுவார்கள் என்பதால் ரோஹன் மூலமாக இந்தக் காரியத்தை ரகசியமாகச் சாதித்துக் கொள்ள விரும்புவதாகக் குறிப்பிட்டிருந்தாள்.

ரோஹன் நகைக்கடைக்குப் போனார். ஆறு மாத தவணைகளில் பணத்தைத் தருவதாகக் கூறி நெக்லஸை வாங்கி வந்தார். நகை வியாபாரிகளும் அரசியின் கடிதமே அது என்று நம்பிக் கொடுத்தார்கள். அதோடு அரசியின் சார்பில் வந்து கேட்பது பிரான்ஸ் நாட்டின் மிகப் பெரிய பதவியை வகிக்கும் கார்டினல் ரோஹன் அல்லவா?

ரோஹன் நகையை வாங்கிக் கொண்டு போய் லாமோட்டியின் இல்லத்தை அடைந்தார். அங்கே அரசியின் அந்தரங்கத் தாதிப் பெண்களில் ஒருத்தி என்று தமக்குத் தோன்றிய ஒரு நங்கையிடம் பெட்டியைக் கொடுத்துப் பத்திரமாக லாமோட்டி சீமாட்டியிடம் சேர்ப்பித்து விடுமாறு கூறினார்.

கொஞ்ச நாளைக்குப் பிறகு ஒரு பெரிய கொண்டாட்டத்தில் அரசி பங்கு கொள்வதாய் இருந்தது. ரோஹனும் நகை வியாபாரியும் அரசி அந்த நெக்லஸை விழாவின்போது அணிந்து வருவாள் என்றுஎதிர்பார்த்தார்கள். ஆனால் என்ன ஏமாற்றம்? அரசி தான் "வாங்கிய" நெக்லஸை அணிந்து கொள்ளவில்லை. அரசி இதனை ரகசியமாகவே வைத்திருக்க விரும்புகிறாள்போலும் என்று அவர்கள் முடிவு செய்தனர்.


அதே சமயத்தில் லண்டனில் லாமோட்டி சீமாட்டியின் கணவர் அந்நகையிலிருந்த வைரங்களைத் தனித்தனியே பிரித்தெடுத்து விற்றுக் கொண்டிருந்தார்! இது ரோஹனுக்கோ நகை வியாபாரிக்கோ எப்படித் தெரியும்?

நகைக்கு முதல் தவணையாகப் பணம் கட்ட வேண்டிய தருணம் வந்தது. நகை வியாபாரி அரசியைப் பணம் எப்படிக் கேட்பது என்று யோசித்தார். அரசி இதனை ரகசியமாக வைத்துக் கொள்ள விரும்புவதாய்த் "தன்" கடிதத்தில் எழுதியிருந்தாளே! ஆகவே, மர்மமான முறையில், "வைரங்களில் சிறந்த வைரங்கள், அரசியருள் சிறந்த அரசியின் கழுத்தை அலங்கரிக்க வேண்டும்" என்று ஒரு குறிப்பு எழுதி அனுப்பினார்.

அரசி மேரி அன்டொய்னெட் இதைப் படித்துப் பார்த்துப் பயந்து போய் அந்தத் தாளை நெருப்பில் போட்டு விட்டாள், வீண் வம்பு எதற்கு என்று!

ஜூலை 9ஆம் நாள் நகை வியாபாரி, அரசியை நேரடியாகவே கேட்டுவிட்டார், பணத்தை. அரசிக்குத் தூக்கிவாரிப் போட்டது. நடந்ததை எழுதிக் கொடுக்குமாறு கேட்டாள். ஜூலை 14ஆம் நாள் அரசன் பதினாறும் லூயி விஷயமறிந்து தமது மந்திரிகளின் ஆலோசனையைக் கேட்டான்.

ஆகஸ்டு 15ஆம் நாள் கார்டினல் ரோஹனும் லாமோட்டி சீமாட்டியும் கைது செய்யப்பட்டார்கள். ஒன்பது மாதங்களுக்கு விசாரணை நீடித்தது. ரோஹன் குற்றமற்றவர் என்று பின்னர் விடுவிக்கப்பட்டார். சீமாட்டி லாமோட்டி சிறையில் அடைக்கப்பட்டாள். ஆனால் மிகப் பொல்லாதவளான அவள், சிறையிலிருந்து எப்படியோ தப்பி ஓடி விட்டாள்!



காமகோடியின் கருணைமொழி

நமது மனம் நமக்கு வசமாக வேண்டும். மனம் அடங்கிவிட்டால் பின்னர் வேறொன்றும் தேவையில்லை. ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது மனத்தை அமைதியாக வைத்துக்கொண்டு, புலன்களைக் கண்ட வழியில் சிதற விடாமல், தியானத்தில் அமர வேண்டும். அப்படித் தியானம் செய்வதால் புத்தி தெளிவடையும். ஆசையையும் கோபத்தையும் அடக்குவதற்கு இது ஒப்பற்ற சாதனம். சித்தத்தை இவ்விதம் சுத்தம் செய்து கொண்டாலே ஆத்ம ஞானம் உண்டாகும்.



காதல் பறவை

''காதல் பறவை'' என்ற தலைப்பு வெறும் கூத்தும் கும்மாளமும் விரஸக் காட்சிகளாகவே முடிந்துவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தினாலும், அவற்றோடு நல்ல கதையும் கருத்தும் கூட இருக்கின்றன என்ற ஆறுதல் படத்தைப் பார்த்தபோது ஏற்படுகிறது.

பாரதப் பண்பாட்டைச் சிறப்பாக வலியுறுத்த வேண்டும் என்பது ஒரு கருத்து. சிநேக தர்மத்தின் உயர்வை வலியுறுத்த வேண்டும் என்பது மற்றொரு கருத்து. இவ்விரண்டினையும் ஓரளவு வெற்றிகரமாகவே சாதித்து விட்டிருக்கிறார்கள்.

கல்லூரிப் படிப்புப் படித்தவனாயினும், பழைய ஹிந்துப் பண்பாட்டில் நம்பிக்கை கொண்டவன் வெங்கிட்டு — ஜயசங்கர். அவன் வகுப்பிலேயே படிக்கும் வஸந்தி மேனாட்டு நாகரிக மோகத்தில் மூழ்கியவள். இருவருக்குமே கல்லூரி நாட்களில் பலத்த கருத்து வேறுபாடுகளும் சர்ச்சைகளும் எழுந்து அதனை யொட்டி பரஸ்பரம் வெறுப்பும் வளர்ந்து வந்தது.

ஆனால் இவர்களைப் பெற்ற தந்தைமார்களோ பரஸ்பர அத்யந்த நண்பர்கள். வஸந்தியின் (பாரதி) தந்தை மேஜர் மகாலிங்கம் (சுந்தரராஜன்) வஸந்தியைத் தம் நண்பர் பாட்டு வாத்தியார் சாம்பசிவ பாகவதர் (டி. ஆர். ராமச்சந்திரன்) புதல்வன் வெங்கிட்டுவுக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதாய் இருவரும் தாயக்கட்ட விளையாட்டின்போது உடன்படிக்கை செய்து கொண்டிருக்கின்றனர். இதை இப்போது அமுல் நடத்தப் பெற்றோர் உறுதி பூணுகின்றனர். பரஸ்பரம் ஒருவரையொருவர் வெறுக்கும்போது எப்படி இதற்கு ஒப்ப முடியும்?

இந்த வெறுப்பு படிப்படியாக மாறிக் காதல் கனியாக உருவெடுக்கிறது. இதற்கு உதவுபவர் வில்லனாக வரும் மனோகர்.

படத்தில் தேங்காய் சீனிவாஸன் — மனோரமா இவர்களின் ஹாஸ்யம் சக்கைப் போடு போடுகிறது. பட்டிக்காட்டு அசட்டுப் பிராமணப் பெண்ணாக மனோரமா வந்து வயிறு குலுங்க நகைக்க வைக்கிறார்! அவளுடைய தாயாராக வரும் சுந்தரி பாய் தாம் ஒரு தேர்ந்த நடிகை என்பதை நிரூபிக்கிறார்.

ஒலிப் பதிவு, ஒளிப்பதிவு எடிட்டிங் ஆகிய எல்லாமே பல குறைகளுடன் இருந்தாலும் படத்தின் முடிவில் ஏதோ ஒரு மனநிறைவு ஏற்படத்தான் செய்கிறது.

ராஜா வீட்டுப் பிள்ளை

அவரவர்கள் தங்கள் காரியங்களைப் பார்த்துக் கொண்டு போனால் ஓர் உபத்திரவமும் இல்லை. இது சினிமாப் படக் கதாநாயகனுக்குப் பொருந்துமா?

டாக்ஸி டிரைவர் ஜெய்சங்கர் வெறுமனே டாக்ஸி ஓட்டினால் போதுமா? குத்துச் சண்டை, அடிதடி, காதல், மோதல், அபவாதம் எல்லாம் அவர் பெற்றால்தானே அவரைக் கதாநாயகனாகச் சொல்ல முடியும்? பணக்காரர் வி. எஸ். ராகவனுக்கு உதவி புரியச் சென்ற டாக்ஸி டிரைவர் ஜெய்சங்கர் கொள்ளைக் கூட்டத்தினரின் கோபத்துக்கு ஆளாகிப் பல சிக்கல்களில் மாட்டிக்கொண்டு பல அபவாதங்களுக்கு ஆளாகிக் கடைசியில் தப்புகிறார்.

டாக்ஸி டிரைவர் ஜெய்சங்கரின் காதலியாகப் பூக்காரி ஜெயலலிதா வருகிறார். சண்டையில் பிறந்த நேசம் இது! முதல் சந்திப்பு இயற்கையாக உள்ளது. ஆனால் அவரோடு ஆடும் 'சிக்' உடை நடனங்களில் ஆங்கில வாடை வீசுகிறதே! நம் பண்பு காற்றில் பறந்து விடுகிறதே, என்ன செய்ய?

பைத்தியம் ஸ்ரீகாந்திடம் புஷ்பலதா அவஸ்தைப்படுகிறார். பைத்தியம் தெளிந்த முறை நம்மை 'ஷாக்' அடிக்க வைக்கிறது!

ஆபாசம் இப்போது நடனங்களில் மட்டும் அல்ல; பாட்டுக்களிலும் புகுந்துவிட்டது! இந்தப் படத்தில் எது புதிசு என்று பூதக் கண்ணாடி போட்டுப் பார்க்க வேண்டியது தான்! இதற்கு ஆராய்ச்சிக்குழு நியமிக்கலாம்!



காட்சி ஒன்று

(பொழுது புலர்ந்த நேரம். பக்கத்து வீட்டு மாடியிலிருந்து இரண்டு கத்துக்குட்டிகள் மிருதங்கம் வாசித்துப் பழகும் ஒலி கேட்டுக் கோபத்தோடு கண் விழிக்கிறார், சங்கரன்.)

சங்கரன் (இரைந்து): கற்பகம்.....ஏய், கற்பகம்....!

கற்பகம் (ஆத்திரத்துடன்): எல்லாம் இங்கே இதோதான் இருக்கேன். வீடே அதிர்கிற மாதிரி கத்துகிறீர்களே, என்ன கூப்பாடு இப்போ?

சங்கரன் (போர்வையால் உடலைச் சுற்றிக் கொண்டு, மாடிப் படிகளில் இறங்கியபடியே) காதில் விழுகிறதா, அந்த நாராசம்?...மண்டையைப் பிளப்பதைப் போல் பொடேர், பொடேர் என்று வாத்தியத்தை உடைக்கிறான்கள்!... ஏதடா, காலை வேளையாயிற்றே; அக்கம் பக்கத்தில் எல்லோரும் தூங்குவார்களே என்று மனுஷனுக்குக் கொஞ்சமாவது 'இது' வேண்டாம்?



தலைவலி

கற்பகம்: என்னிடம் எரிந்து விழுந்து என்ன பிரயோசனம்? அப்படியே இதே கோலத்தில் பக்கத்து வீட்டுக்குப் போய், மாடிப் படி ஏறி, அந்த 'அகில உலக மிருதங்கச் சக்கரவர்த்தியை'யே ஒரு கேள்வி கேட்டுவிட்டு வாருங்கள்: 'என்ன ஸ்வாமி! நீர் இப்படிச் செய்வது நியாயமா' என்று.

சங்கரன் (ஏகத்தாளமாக): அந்த மனுஷன் இதற்கெல்லாம் அசைந்து கொடுக்க மாட்டார். வாத்தியத்தைத் தநிங்கிணை, தநிங்கிணை என்று அறைந்து அறைந்து பழக்கப்பட்ட கை அது!... அவருடைய சம்சாரத்திடம் நாசுக்காக விஷயத்தைச் சொல்லும்படி உன்னிடம் கூறியிருந்தேனே? சொன்னாயா?....



கற்பகம்: சும்மாவா சொன்னேன்? டிபன் காப்பி எல்லாம் கொடுத்து, ஒரே புகழாய்ப் புகழ்ந்து விட்டுக் கடைசியில் சொன்னேன்.

சங்கரன்: என்னவென்று சொன்னாய்?

கற்பகம்: 'என் வீட்டுக்காரருக்கும் சங்கீதத்துக்கும் பதினெட்டுப் பொருத்தம். அத்துடன், இரவு வெகு நேரம் சென்று படுப்பவராதலால், காலை ஏழு மணிவரையில் தூங்குவார். ஆனால் நான் தவறாமல், காலை ஆறு மணிக்கெல்லாம் கன்னத்தில் அறைகிறாற்போல், மிருதங்க நாராசம் ஆரம்பமாகி விடுகிறது. உங்கள் வீட்டுக்காரரிடம் சொல்லி சிட்சை சொல்லிக் கொடுக்கும் நேரத்தை மாற்றி வைத்துக் கொள்ளச் சொல்லுங்கள்..'

சங்கரன்: பேஷ், பேஷ்! பலமாகத்தான் ஒரு போடு போட்டிருக்கிறாய்!

கற்பகம்: ஆனால், அந்த அம்மாள் இதை விடப் பலமாக என்னைத் தாக்கிவிட்டாள்.

சங்கரன்: என்ன, என்ன?

கற்பகம்: அந்தத் தாள, லய மாமன்னரிடம் இன்னும் இரண்டு பேர்கள் சிட்சை சொல்லிக் கொள்கிறார்களாம். நாம் இந்த வீட்டுக்கு வந்த இந்த ஒரு வார காலமாய் அவர்கள் சிட்சைக்கு வரவில்லையாம்.

சங்: குருவின் அடி தாள மாட்டாமல் ஓடிப்போய் விட்டார்களாமா?



கற்: அப்படிப் போயிருந்தால்தான் தேவலையே! ஒருவன், அண்ணனின் கல்யாணத்துக்குப் போனவன் நாளைக்கு வருகிறானாம்.

அவனுக்குத் தினந்தோறும் நண்பகலிலிருந்து பிற்பகல் ஒரு மணி வரை பயிற்சியாம்!

சங்: அட ராமா!

கற்: அவனை மட்டும் கூப்பிட்டுப் பயவில்லை. கிருஷ்ணனையும் நீங்கள் கூப்பிட வேண்டியிருக்கும்!

சங்: அது என்ன கூத்து?

கற்: ஆமாம்!... இரண்டாவது சிஷ்யப் பிள்ளை இன்னும் நாலு நாட்களில் வருவானாம். அவன் எங்கோ உத்தியோகம் பார்க்கிறவன். தினமும் இரவில் எட்டு மணிக்கு மேல் வந்து சாதகம் செய்வானாம்!....

கற்: குடிக்கூலிக்கு இருந்தாலாவது வேறே வீடு பார்த்துக் கொண்டு போய் விடலாம். இப்போ என்ன செய்கிறது?

சங்: நம்ம விதியை நினைச்சு அழறது!... இப்படி விடியற்காலே, மத்தியானம், இரவு என்று தொடர்ந்து சாதகம் பண்ணுகிற சிடங்களையும் குருநாதனையும் வாய் கொண்ட மட்டும் சபிக்கிறது!...

சந்துரு: ஐடியா, அப்பா.

கற் (உற்றுக் கேட்டு): சரி, சரி. எல்லோரும் போய்ப் படுத்துத் தூங்கிவிடலாம். தாளச் சத்தம் இப்பத்தான் ஓய்ந்திருக்கு.

போய்...?

டி.எஸ்.கே



— ஓரங்க நாடகம் —

சங் (பல்லை நறநறவென்று கடித்து): நாம், வீட்டில் நிம்மதியாய், இருந்து கிழித்தாற் போலத்தான் போ.... (உற்றுக் கேட்டு) அதைக் கேளு..... மிருதங்கத்தை உண்டு இல்லை என்று பண்ணிவிடுகிறேன் என்கிறாற் போல் துவம்சம் செய்கிறான் பயல்! கஷ்டம், கஷ்டம்....

(தலையில் அடித்துக் கொண்டே போகிறார்)

காட்சி இரண்டு

(ஒரு வாரம் சென்று, ஓர் இரவு. சுமார் எட்டு மணி. சங்கரனின் குழந்தைகள் சந்துருவும் அகிலாவும் மாடிப் படியில் ஓட்டமாய் இறங்கி வருகிறார்கள்.)



சங் (சினந்து): ஏய், என்ன ஓட்டம்? ஊம்? புத்தகத்தைப் படிக்கச் சொன்னால், அதை விட்டு விட்டு என்னடா விளையாட்டு?

சந்துரு: இல்லேப்பா. மாடியிலே எங்களாலே படிக்க முடியல்லேப்பா.

அகிலா: ஆமாம்பா. வந்து பக்கத்து வீட்டிலேயிருந்து ஒரே சத்தம் — ஜொணக், ஜொணக்-குனு!

சந்துரு: ...படங் .... படங் .... கும்கு... கும்கு — அப்படீன்னு காதைத் துளைக்கிறது, அப்பா! (கற்பகம் வருகிறாள்.)

கற்: ஹ்ஊம்ம்... இது என்ன வீடோ, என்ன வாசலோ?.... எப்போ பார்த்தாலும் யாரோ வெளிப்புறத்திலேயிருந்து சுவரைக் கடப்பாரையாலே பெயர்க்கிற மாதிரி, கும் கும்மென்று சத்தம்!...

சங்: என்ன பண்ணுவது கற்பகம்? வாடகை கொடுத்துக் கொடுத்து அலுத்துப் போய், ஊருக்கு ஒதுக்குப்புறமாய் இந்த வீட்டை விலை கொடுத்து வாங்கினோம். ஊம், சொந்த வீட்டிலாவது நிம்மதியாக இருக்க முடியாதா என்று எண்ணிக் கொண்டிருந்தோம். கடைசியிலே, அது என்னடான்னு....



காலேயில் மறுபடியும் சத்தம் கேட்பதற்குள்ளே ஒரு தூக்கம் போட்டாகணும்.

(சங்கரன் சிரிக்கிறார்)

கற்: ஏன் சிரிக்கிறீர்கள்?

சங்: அழுது என்ன பயன் கற்பகம்? அதுனால்தான் சிரிக்கிறேன்! (மனம் நொந்து) சரி, போகலாம், மாடிக்கு.

கற் (மாடியில் ஏறிக்கொண்டே): பக்கத்து வீட்டின் சொந்தக்காரர்தான் உங்களுக்கு ஏதோ உறவு என்று சொன்னீர்களே? துர்க்காபூரில் இருக்கும் அவருக்குக் கடிதம் எழுதி இந்த மிருதங்கத்தைக் ஒப்பிவிடுங்களேன்.

சந்துரு: ஐடியா, அம்மா! எனக்குக்கூடப் பக்கத்து வீட்டு ரகுவைப் பிடிக்கவேயில்லே. எப்போ பார்த்தாலும் சண்டைக்கு வரான். சண்டை போடாத பையன் இருக்கிற குடும்பமாகப் பார்த்துக் குடி வைக்கணும்.

சங்: போடா, அரட்டைக்கல்லி. படுக்கையிலே விழு. சத்தமில்லாதபோது தூங்கித் தொலையலாம்.

காட்சி மூன்று

(ஒரு மாதத்துக்குப் பின் ஒரு நாள் காலே சங்கரன் தினசரியைப் படித்துக்கொண்டிருக்கிறார். வாசலில் 'சார்' என்ற குரல் கேட்கிறது.)

சங் (எழுந்து): யாரு?... அட, ராமச்சந்திரனு? வாங்கோ, என்ன லீவா இப்போ?

ராமச்: ஆமாம், சார். இந்தப் பக்கம் வந்து நாளாச்சு. ஒரு மாசம் லீவு போட்டு விட்டேன்.

சங்: பேஷ், பேஷ்!... (உள் பக்கம் திரும்பி) பக்கத்து வீட்டு ராமச்சந்திரன் வந்திருக்கிறார், துர்க்காபூரிலிருந்து. காப்பி கொண்டு வா. (திரும்பி) உட்காருங்கோ, ராமச்சந்திரன்.

ராமச் (உட்கார்ந்துகொண்டே): மத்தியானம் வண்டிக்குப் போகணும். சும்மா வீட்டைப் பார்க்கலாமென்று வந்தேன். பார்த்தாயிற்று. எல்லாம் கைகூடி வந்தால், ஒரு வழியாய் விற்று விடலாமென்று யோசனே. நீங்கள்தான் உதவி செய்யணும்.

சங் (அழுக்கத்துடனும் முன்யோசனேயுடனும்): கட்டாயம்! ஆனல் பாருங்கள், ராமச்சந்திரன், அது ஒன்றும் சுலபமில்லே. வீடு இருப்பதோ ஊரின் எல்லேயில். என்னேப் போல் நிம்மதிக்காக ஆசைப்பட்டவர்கள் வேண்டுமானுல் இந்தப் பக்கத்தில் வீடு பார்ப்பார்களே தவிர, சௌகரியத்தை எதிர்பார்ப்பவர்கள் இங்கே வரமாட்டார்கள் இல்லேயா?

ராமச்: வாஸ்தவம். உடனேயே வீட்டை விற்றுவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லே. விஷயத்தை உங்கள் காதில் போட்டு வைத்தேன். அப்போ, நான் வரட்டுமா?

சங் (உரிமை தோன்ற): என்னது? இன்னும் காப்பி சாப்பிடவில்லே? அப்புறம் மத்தியானச் சாப்பாடும் உங்களுக்கு இங்கே தான்! உங்கள் மறுப்பை யெல்லாம் நான் கேட்கப் போவதில்லே. ஆமாம், சொல்லி விட்டேன்!...

காட்சி நான்கு

(சில நாட்களுக்குப் பின்னர் ஒரு ஞாயிற்றுக்கிழமை. திடீரென்று பக்கத்து வீட்டிலிருந்து ஜினுக்கு, ஜினுக்கு என்ற ஒலி பாய்ந்து வருகிறது.)

அலிவா: அச்சச்சோ!

சந்துரு: போச்சு! எல்லாம் போச்சு!

அலிவா: சிஷ்யப் பிள்ளேங்க வந்துட்டாங்க போலிருக்கே? மத்தளத்தை உடைக்க ஆரம்பிச்சுட்டா!

சந்துரு (குமுறியபடி): என்கிட்ட மட்டும் அந்த மிருதங்கக்காரர் ஒரு நாள் மாட்டிக் கொள்ளட்டும். அப்படியே கை இரண்டையும் குதறி, விரல்களே நசுக்கிப்பிடுவேன். அப்புறம் மூணு ஜன்மத்துக்கு மிருதங்கம் வாசிக்க முடியாது!

சங் (வந்துகொண்டே): யாரையடா சபிக்கிறே?

சந்துரு: வேறே யாரை, அப்பா? நம்ம பிடரியிலேயே அடிக்கிறாப்பிலே, மத்தளத்தோடு சண்டை போட்டுக் கொண்டிருக்கிறாரே, அவரைத்தான்.

அலிவா: ஏம்ப்பா, இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமைதானே? இன்னிக்காவது லீவு கொடுக்கப்படாதா, அந்தச் சிஷ்யங்களுக்கு?

சங்: அதை நாம் சொல்ல முடியுமா? இருக்கட்டும், இருக்கட்டும். இன்னும் சில நாட்கள்தான்!

அலிவா: சந்துரு, அப்பா மனசுக்குள்ளே பெரிய திட்டம் வைத்திருக்கிறார் போல் இருக்கு. இல்லே?

சந்துரு: ஆமாம். இருக்கும்.

காட்சி ஐந்து

(மூன்று மாதங்களுக்குப் பிறகு ஓர் இரவு. சங்கரனின் குடும்பம் உறங்கப் போகும் வேளே)

கற்பகம் (உள்ளடங்கிய உற்சாகத்தில்): இப்போதெல்லாம் வரவர எனக்குத் தூக்கம் வரமாட்டேன் என்கிறது.

சங்: அது என்ன வியாதி?

கற்: நோயில்லே!... மிருதங்க சத்தத்தைக் கேட்டுக் கேட்டுப் பழகிப்போன செவிகளுக்கு இப்போது அந்தச் சத்தம் இல்லாமல் நிம்மதியே போய்விட்டது!

சங்: போட்டாயே, ஒரு போடு! நான் என்னமோ, ஏதோவென்று பயந்துவிட்டேன். அப்பா! இப்போது எவ்வளவு சாந்தமாய் இருக்கிறது!

சந்துரு: இருந்தாலும் எனக்கும் அலிவாவுக்கும் இனிமேல் கஷ்டம்தான், அப்பா.


கற்: ஏன்டா?

சந்துரு: 'இனிமேல் புஸ்தகத்தைப் படிடா'ன்னு அப்பா சொன்னு, மிருதங்கத்தின் மேல் பழியைப் போட முடியாதோன்னு!

அலிவா: அடுத்தபடியா, ஒரு டான்ஸ் காரரைக் குடி வச்சுடுங்கோ, அப்பா.

சங்: ரொம்ப அழகா யிருக்கு! அந்த ராமச்சந்திரனே நைச்சியம் பண்ணி, வீட்டு விலேயைக் குறைத்து, அதையும் மாதத் தவணேயாகக் கொடுப்பதாகச் சொல்லி, நோட்டமல் விட்டு, மிருதங்கக்காரரைக் கிளப்பின

பூரணமான இருமல் கட்டுப்பாட்டுக்கு



க்ளைகோடின்

பெர்ப் வசாகா

க்ளைகோடினுடைய மருந்துக்கு அங்கீகாரம் பெற்ற பார்முலா, இருமலால் பாதிக்கப்பட்ட பல இடங்களிலிருந்தும் இருமலை விரட்டியடித்துவிடுகிறது. க்ளைகோடினின் செயல் திறன் ● மூளையில்—க்ளைகோடின், தன்னியல்பாக வரும் இருமலைத் தூண்டும் இருமல் கேந்திரத்தை சரியான சமபத்தில் பத்திரமாகவும், பயனுள்ள முறையிலும் கட்டுப்படுத்துகிறது ● தொண்டையில்—க்ளைகோடின் அடைப்பை அகற்றி எரிச்சலையும் வலியையும் ஆசுவாசப்படுத்தி, தொண்டையின் மென்மையான பகுதிகளை, கிருமிகள் பாதிக்காமல் பத்திரமாகப் பாதுகாக்கிறது ● மார்பில்—க்ளைகோடின், சுவாசக் குழாய்கள் மற்றும் மார்பின் இறுகிய தசைகளைத் தளர்த்தி, கஷ்டமின்றி சுவாசிக்க உதவுகிறது ● நுரையீரல்களில்—மூச்சுத் திணறலைக் கும் சளியைக் கரைத்து, 'ஆழப் படிந்த' சளியை அகற்றி, அடைப்பை நீக்குகிறது.

எப்பொழுதும் க்ளைகோடின் கைவசம் இருக்கட்டும்.



க்ளைகோடின்—30 வருடங்களுக்கு மேலாக
மிகவும் அதிகமாக விற்பனையாகும் கைகண்ட வீட்டுநிவாரணி

4 அளவுகளில் கிடைக்கிறது • அலெம்பிக் தயாரிப்பு Alembic

everest/363 i/Acw tm

தெல்லாம் என்ன சும்மாவா? கடந்துபோன மூன்று தலைமுறைகளுக்கும் வரப்போகிற மூன்று தலைமுறைகளுக்கும் சங்கீதத்தோடு எள்ளத்தனை தொடர்பும் இல்லாத குடும்பமாகப் பார்த்துத்தான் குடி வைப்பேன்!

கற்பகம்: நம்ம வீட்டுக்குக் கிழக்கண்டையில் இருக்கிற மாதிரி மேலண்டைப்புறத்திலும் ஒரு சாலை இருந்தால் நமக்கு இதைப்போல் அநாவசியச் சங்கடம் வராது. இல்லையா?

சங்: வராது. அப்போ பக்கத்து வீடும் நம் கைக்கு வராது கற்பகம்!

கற்: அதென்னவோ உண்மைதான்.

காட்சி ஆறு

கற்: யார் அவர், வந்துவிட்டுப் போகிறவர்?

சங்: வீடு விஷயமாகத்தான்! பக்கத்து வீட்டுக்குக் குடி வரணுமாம்.

கற்: குடும்ப விவரம் விசாரித்தீர்களோ?

சங்: பின்னே, விசாரிக்காமல்? மூன்று குழந்தைகளாம். மூத்ததுக்கு ஆறு வயசு. புருஷன் — பெண்டாட்டி. அவ்வளவுதான் குடும்பம். தாயார், தகப்பனுரெல்லாம் கிராமத்தில் இருக்கிறார்களாம்.

கற்: தேவலை. எல்லாம் நமக்கு ஒத்து வருகிற மாதிரிதான் இருக்கு. குழந்தைகள் போடுகிற சத்தத்தைத் தவிர வேறு சத்தம் இருக்காது என்று தோன்றுகிறது.

சங்: 'ரேடியோ இருக்கிறதா?' என்று கேட்டேன். 'வீட்டு வேலை செய்வதற்கே அவளுக்கு நேரம் போதவில்லை. ரேடியோவை வைத்து யார் கேட்டுக் கொண்டிருப்பது?' என்று பதில் சொன்னார்.

கற்: அப்போ, இவர்களுக்கே வீட்டைக் கொடுத்துவிட வேண்டியதுதான்... என்ன யோசனை?

சங்: ஊ... ஒன்றுமில்லை. நான் சொன்ன வாடகை அதிகமாகப் படுகிறதாம், அவருக்கு. ஐந்து ரூபாய் குறைத்துக்கொள்ளச் சொல்கிறார்.

(கையில் ஒரு திருமண அழைப்புடன் சந்துரு உள்ளே நுழைகிறான்.)

கற்: என்ன அது? கல்யாணப் பத்திரிகையா?

சந்துரு: ஆமாம்மா. தபால்காரர் கொடுத்தார். இந்தா அப்பா.

சங் (பத்திரிகையைப் படித்துவிட்டு): அட! நம்ம கமலத்துக்குக் கல்யாணம்!

கற்: உங்கள் பெரியப்பா பெண்ணுக்கா? கட்டாயம் போய் வரவேண்டிய கல்யாணம்.

சங்: ஆமாம். போய், பெரியப்பாவுக்கு ஒத்தாசை செய்யணும். போவதற்குள்...

கற்: பக்கத்து வீட்டில் குடி வைத்துவிட வேண்டும். பார்த்தீர்களா சகுனத்தை? வந்து கேட்டுப் போனவருக்கே வீட்டை இப்போது கொடுத்து விடுங்கள். பதினைந்து நாட்கள் லீவு போட்டு விட்டுக் கல்யாணத்தை முடித்துக் கொண்டு வரலாம். என்ன?

சங்: நானும் அப்படித்தான் எண்ணினேன்.

காட்சி ஏழு

(பிரயாணத்தை முடித்துக் கொண்டு ஊருக்குத் திரும்புகிறது, சங்கரனின் குடும்பம்.)

கற்: ஊூம்...என்ன குப்பை?... வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்வதற்கே அரை நாள் ஆகும் போலிருக்கு.

சங்: பதினைந்து நாட்கள் வீட்டைப் பூட்டி வைத்திருந்தால் அப்படித்தான் ஆகும்... டேய் சந்துரு, தோல் பெட்டியை மாடிக்குக் கொண்டுபோ.

(சந்துரு மாடிக்குப் போகிறான். சற்றைக்கெல்லாம் வாய்ப்பாட்டு ஸ்வரம் கேட்கிறது. கீழே ஓடிவருகிறான்)

சந்துரு: பக்கத்து வீட்டிலே ஒரு தாத்தா உட்கார்ந்திருக்கா. எதிரே நாலு ஷெயப் பிள்ளைகள்! சிட்சை சொல்லிக்கிறப்பிலே இருக்கு. நான் ஜன்னல் வழியா பார்த்தேன்.

சங்: என்ன சங்கீத சிட்சையா?... நாராயணன் அதைப்பற்றிச் சொல்லவில்லையே?...

(மாடிப் பக்கத்திலிருந்து நாலு குரல்கள் சப்த ஸ்வரங்களை அள்ளி வீசுகின்றன.)

ஐயோ! இப்பவே தலைவலி ஆரம்பிச்சுடுத்தே.

கற் (வந்துகொண்டே): எனக்கு மண்டைக் குடைச்சலே உண்டாயிடுத்து!

அகிலா: நான் எப்படி இந்தச் சத்தத்திலே புஸ்தகம் படிக்கிறது?

கற்: நீங்கள் உடனே போய், அந்த நாராயணனிடம் ஒரு வார்த்தை கேட்டு விட்டு வாருங்கள். யார், அந்தக் கிழவர், குடிக்குள்ளே உள் குடியா? இல்லை...

(வாசலில் அழைப்புக் குரல் கேட்கிறது.)

சங்: நாராயணன் குரல்தானே?

சந்துரு: அவரேதான், அப்பா.

நாராயணன் (வாசலில் நின்றுகொண்டே): என்ன ஸார், ஊரிலிருந்து வந்தாயிற்றா? பேச்சுக் குரல் கேட்டதே என்று எட்டிப் பார்த்தேன்.

சங் (கோபத்துடன்): அதெல்லாம் இருக்கட்டும் முதலில் என்கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்: யார் அந்தப் பாட்டுக்காரக் கிழவர்?

நாரா: ஓ! அவரா? அவர் என் தகப்பனார். மகா சங்கீத வித்வான். நீங்கள்கூடக் கேள்விப்பட்டிருப்பீர்களே, சொரக்குடி சுந்தரேச பாகவதர் என்று? 'வயதாகிவிட்டதே; என்னோடு வந்து இருங்கள்' என்று சொன்னேன். வந்தார். வந்தது தெரிந்ததுமே நாலைந்து பையன்கள் சிட்சைக்குச் சேர்ந்து விட்டார்கள். இன்னும் நாலு பேர்கள் நச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சங்: மிஸ்டர் நாராயணன்! நீங்கள் இவ்வளவு அழுத்தமான ஆசாமி என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. முன்கூட்டியே திட்டமிட்டு என்னை மோசம் செய்து விட்டீர்கள். என் வீட்டை ஒரு சங்கீதப் பள்ளியாக மாற்றுவீர்கள் என்பது தெரிந்திருந்தால் வீட்டை உங்களுக்கு விட்டிருக்கவே மாட்டேன். தயவு செய்து நீங்கள் உடனே வேறு வீடு பார்த்துக் கொள்ளுங்கள்.

நாரா (அழுத்தலாக): ஹை!... நான் அரசாங்க உத்தியோகஸ்தன் சார். என்னைக் காலி செய்யச் சொல்வதற்கு ஆறு மாத நோட்டீஸ் கொடுக்க வேண்டும் தெரியுமா?

கற் : (கதவுக்குப் பின்னிருந்தபடி): என்ன? ஆறுமாசமா? தலை சுற்றுகிறதே!

யாரோ இவர் யாரோ?



'சோ'

அத்தியாயம் 2

ரவி செய்வதறியாமல் தவித்தான்.

டிக்கட் பரிசோதகர் மீண்டும் ''டிக்கட்டைக் கொடு, ஐயா!'' என்றார்.

''எதுக்கு என் டிக்கட்டைக் கேட்கிறீங்க? உங்ககிட்ட டிக்கட் இல்லையா?''

''என்னய்யா விளையாடறே? ரயில் என்ன உங்க மாமாவுடையதா?''

இதைக் கேட்டவுடன் ரவியின் மூளையில் மின்னலென ஒரு யோசனை பளிச்சிட்டது. ''எங்க மாமாவை உங்களுக்குத் தெரியுமா ஸார்?''

''என்னது?''

''ஸதர்ன் ரயில்வே ஜெனரல் மானேஜரை உங்களுக்குத் தெரியுமா?''

''அவர் உங்க மாமாவா?''

''பின்னே உங்க மாமாவா?''

''ஜெனரல் மாமா உங்கள் மானேஜரா?'' — டிக்கட்டுப் பரிசோதகருக்கு நாக்கு நானூறு பல்டி அடிப்பதுபோல் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. கஷ்டப்பட்டு நாக்கைப் புரள விடாமல் தடுத்து நிறுத்தினார். அவரையே கவனித்துக் கொண்டிருந்த ரவி, அவருடைய தொண்டை எழும்பி, அமுங்கியதிலிருந்து தொண்டையின் வழியே ஏதோ பிரயாணம் செய்கிறது என்று புரிந்து கொண்டான். எச்சிலை விழுங்கினார் டிக்கட் பரிசோதகர்.

''உங்க மரனேஜர் மாமா ஜெனரலா?...ஐமீன்...உங்க மாமா ரயில்வே ஜெனரல் மானேஜரா?''

''ஆமாமாம்! அதைப் பத்தி இப்ப என்ன ஸார்... உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமோன்னு கேட்டேன். அவ்வளவுதான்!''

''தெரியாது ஸார்!'' — அவர் முகத்தில் அசடு வழிந்தது. ''தெரிஞ்சிருக்கணும் என்கிற நினைப்பு உண்டு!''

''ஒரு நாள் வீட்டுக்கு வாருங்களேன். நான் அவரை அறிமுகப்படுத்தறேன்.''

''தாங்க்யூ ஸார்.''

''டிக்கட் கேட்டீங்க இல்லே?.... இங்கேதான் பெட்டியிலே வெச்சிருக்கிறேன். இதோ எடுத்துத் தரேன்!'' ரவி பெட்டியை எடுக்க முயலுவது போல் பாவனை செய்தான். ரயில் ஒரு ஸ்டேஷனில் நின்றது.

''வேண்டாம் ஸார்! சிரமப்படாதீங்க... ஒண்ணும் அவசரமில்லே.... நான் அடுத்த ஸ்டேஷனிலே வந்து பார்க்கிறேன்'' என்று கூறி டிக்கட் பரிசோதகர் இறங்கி விட்டார்.

ரவி ஸீட்டுக்கடியில் கையை விட்டு முத்துவை இழுத்தான்.

''எங்கிட்டே டிக்கட் இல்லே ஸார்! நான் மூணும் கிளாஸ்லே போறேன்னேன். ரவிதான் என்னை மாட்டி விட்டுப்பிட்டான்!'' உள்ளேயிருந்தவாறே உளறிக் கொட்டினான் முத்து.

''முட்டாள், டிக்கட் எக்ஸாமினர் போய்விட்டார். — வாடா வெளியிலே'' என்று கத்தினான் ரவி.

ஆமை தன் மேல் ஓட்டுக்குள்ளிருந்து தலையை நீட்டிப் பார்ப்பது போல், தலையை மட்டும் வெளியே நீட்டிப் பார்த்து, உண்மையிலேயே அவர் போய்விட்டார் என்று நிச்சயப்படுத்திக்கொண்டு வெளியே வந்தான் முத்து.

ரவி பெருமிதத்தோடு, ''எப்படிச் சமாளித்தேன் பார்த்தியா?'' என்றான்.

''உங்க மாமாதான் ஜெனரல் மானேஜர்னு நீ எங்கிட்டே சொல்லவே இல்லையே?''

''எங்க மாமாகிட்டவே அவர்தான் ஜெனரல் மானேஜர்னு சொன்ன தில்லையே!''

''என்ன சொல்றே நீ? டிக்கட் எக்ஸாமினர்கிட்டே பொய் சொன்னியா?''

''பொய், சொன்னியானு பல்லை உடைச்சுப்புடுவேன். நம்ம நாடு ஜனநாயக நாடு. எல்லோரும் இந்நாட்டு மன்னர். எல்லாரும் மன்னர்களாகவே இருக்கும்போது எல்லோரும் ரயில்வே ஜெனரல் மானேஜரா இருக்கக் கூடாதா?''

முத்து பதில் சொல்வதற்குள், டிக்கட் பரிசோதகர் மீண்டும் வந்தார். ஆமை தனது ஓட்டினுள் புகுந்தது.

டிக்கட் பரிசோதகர் ரயில் நிற்கும் போதெல்லாம் வந்து ரவியுடன் பேசிக் கொண்டிருந்தார். டிக்கட்டைத் தவிர மற்ற விஷயங்கள் பற்றியெல்லாம் பேசித் தீர்த்தார்கள். இப்படிப் 'போர்' அடிப்பார் என்று தெரிந்திருந்தால் இவரிடம் இப்படி ஒரு பொய்யையே சொல்லியிருக்க வேண்டாமே என்று நினைத்தான் ரவி. டிக்கட் பரிசோதகரோ ''என் தலைவிதி இவனோடெல்லாம் பேச வேண்டியிருக்கிறது. இவனே இப்படி 'போர்' அடிக்கிறானே, இவன் மாமா ஜெனரல் மானேஜர் எப்படி போர்' அடிப்பாரோ!' என்று அடிக்கடி நினைத்துக் கொண்டார். ஆமை வீட்டுக் கடியில் அடைபட்டு அவதியுற்றது.

இப்படியாகத்தானே ஒரு வழியாக ரயில் சென்னை எழும்பூருக்கு வந்து சேர்ந்தது. அவசரம் அவசர



மாக முத்துவும் ரவியும் தங்கள் பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு இறங்கினார்கள்.

''கொடு ஸார் பொட்டியை இப்டி!'' ஏதோ தனது பெட்டி போல் போர்ட்டர் ஒருவன் வந்து மிரட்டினான்.

''டாய் சோமாறி!'' என்று கூவிக் கொண்டே இன்னொரு போர்ட்டர் வந்தான். ''நீ யாண்டா இங்கே வர்ரே?. நீ கொடு ஸார் பொட்டியை!''

''சோமாறி கிமாறின்னுதே — அப்பாலே....'' அப்பாலே என்ன செய்வது என்று புரியாததாலோ என்னவோ முதல் போர்ட்டர் மேலே ஒன்றும் சொல்லவில்லை.

இரண்டாவது போர்ட்டர் விடுவதாக இல்லை. ''அப்பாலே இன்னாடா செய்வே? — சோமாறி!'' என்று கூறி முத்துவைப் பார்த்தான்.

''இன்னா ஸார் நீ ஆந்தை கணக்கா முனிக்கிறே...பொட்டியைக் கொடு.''

''எவ்வளவு கூலி?''

''பொட்டியைக் கொடு ஸார்!''

''கூலியை முதலிலேயே சொல்லிடு. அப்புறம் தகராறு வேண்டாம்.''

''இன்னா ஸார் நீ! தகறுல் செய்யற ஆளா நானு? பட்ணத்துக்குப் புச்சா நீ......?''

இந்தப் பேச்சே முத்துவுக்குப் 'புச்சா' கத்தானிருந்தது.

''டேய் முத்து! போர்ட்டரும் வேண்டாம் ஒண்ணும்





வேதாந்தி: சுகத்திலேயே ஆசைப்படக்கூடாது. சுகம், துக்கம் இரண்டையுமே வரவேற்க வேண்டும்!

மற்றவர்: கரெக்ட்! நான் இப்ப என் மாமியாரை ஸ்டேஷனிலிருந்து வரவேற்கத்தான் போறேன்!

வேண்டாம். வாடா, போகலாம்'' என்று அவனைப் பிடித்து இழுத்தான் ரவி.

''ஏனா வவுத்லே அடிக்காதே, ஸார்!'' என்று போர்ட்டர் தொழிலாளர் பிரச்னையில் புகுந்தான்.

ரவி அதைக் காதில் போட்டுக்கொள்ளாமல் புறப்பட்டான்.

போர்ட்டர் தலைப்பாகையைக் கழற்றி உதறித் துண்டாகத் தோளில் போட்டுக் கொண்டான். ''இன்னு, ஸார்! இந்தப் பன்னண்டணாவிலே தான் நீ ஊடு கட்டிக்கப் போறியா?'' என்று முதலாளித்துவத்தைச் சாடி விட்டு, முதல் போர்ட்டரைப் பார்த்து, ''டாய், நீயே பிடிச்சுக்கடா இந்தக் கிராக்கியே. சாவுக் கிராக்கி!'' என்று தீர்ப்பளித்து நகர்ந்தான்.

ரவியோ சுற்று முற்றும் பார்த்து முத்துவைக் காணாமல் திகைத்து நின்று கொண்டிருந்தான். தூரத்தில் கூந்தல் தைல விளம்பரம் போல் கட்டுக் கூந்தலோடு கூடிய தலை தெரிந்தது. முத்துவைக் கண்டுபிடித்த மகிழ்ச்சியில் 'முத்து' என்று கூவினான் ரவி. முத்துவோ அதைச் சற்றும் கவனிக்காமல் முதல் வகுப்புப் பெட்டி ஒன்றிலிருந்து இறங்கிக்கொண்டிருந்த பெண்களின் கூட்டத்தையே கவனித்துக் கொண்டிருந்தான். உண்மையைச் சொல்லப் போனால் எழும்பூர் ஸ்டேஷனிலிருந்த சகல ஜீவராசிகளும் அங்கு தான் கவனித்துக் கொண்டிருந்தன.

பேச்சை விடச் சிரிப்பே அதிகமாக இருந்ததால் அது கல்லூரி மாணவிகளின் கூட்டம் என்று ரவி சுலபமாக ஊகம் செய்தான். அதில் ஒரு பெண்ணையே சுற்றி மற்ற மாணவிகள் வட்டமிட்டதால், அந்தப் பெண் ஒரு செல்வந்தருடைய மகளாகத்தான் இருக்க வேண்டும் என்பது நிச்சயமாகத் தெரிந்தது.

முத்துவை நெருங்கி, ''வாடா, போகலாம்!'' என்றான் ரவி.

''டேய் ரவி, அந்தப் பெண்ணைப் பாரேன்!''

''எனக்கு இதுதான் வேலையா?''

''எவ்வளவு அழகா இருக்காடா அந்தப் பொண்ணு'' என்று மெய் மறந்து நின்றான் முத்து.

கூட்டத்தில் அப் பெண் 'இக்கிக்கிக்' என்று கல்லூரி மாணவிகளுக்கே உரித்தான முறையில் சிரித்தாள்.

''எப்படிச் சிரிக்கிறா பாரேன்!'' என்று முத்து வியந்தான்.

''சேர்ந்தாப்பலே பத்துப் பேருக்கு விக்கல் வந்த மாதிரி இருக்கு.''

''அவளைப் பத்தி அந்த மாதிரி பேசாதேடா. அங்கே பாரேன்!''

ரவியும் பார்த்தான்.

அப்போது அந்த நாகரிக யுவதி, ''இக்கிக்கிக்... அந்தப் பட்டிக்காட்டைக் கிக்கிக்கி.. பாரேன்... இக்கிக்கிக்'' என்று சிரிப்போடு கலந்து முத்துவைச் சுட்டிக் காட்டினாள். மற்றப் பெண்களுக்கு அவள் பேசியது எப்படிப் புரிந்ததோ? எல்லோருமாக ஒரு கோரஸ் சிரிப்பொலி எழுப்பி நகைத்தார்கள். அவளுடைய பேச்சில் சிரிப்பொலியைக் கழித்தால் மிஞ்சுவது ''அந்தப் பட்டிக்காட்டைப் பாரேன்'' என்ற தன்னைப் பற்றிய வர்ணனைதான் என்பதை அறியாத முத்துவும் மகிழ்ச்சி பொங்க அவளையே பார்த்து நின்றான்.

''ஒவ்வொண்ணுத்துக்கும் டிரஸ்ஸைப் பாரேன்'' என்று ரவி அலுத்துக் கொண்டான். ''இதுங்களெல்லாம் சினிமா போஸ்டரா இருந்திருந்தால் ஆபாசம்னு கிழிச்சுப் போட்டிருப்பாங்க.''

''ரவி! அவளைப் பத்தி இந்த மாதிரி யெல்லாம் பேசாதேன்னு முதல்லேயே சொன்னேன்!''

''உனக்கென்னடா அதிலே?''

''எனக்கு நீ அந்த மாதிரி பேசறது பிடிக்கலே.''


''ஏன்?''

''அவ ரொம்ப நல்ல பொண்ணு.''

''எப்படித் தெரியும்?''

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்!'' என்று இழுத்தான் முத்து.





"அப்பா! இதுதான் உங்க சோஷலிஸத்தின் லட்சணமா? எனக்கு ஒரு சாக்லேட்தானே கொடுத்தாய். அவனுக்கு மட்டும் மூன்று சாக்லேட்டுகள் தந்திருக்கிறயே!"

"அது அந்தக் காலம். இப்ப அகத்தின் அழகு தெரிய, முகத்திலே பவுடரை அழிக்கணும்."

"சரி.... சரி..... வாடா!" என்று ரவியின் பேச்சைக் கேட்க விரும்பாமல் முத்து கையில் தன் பெட்டியோடு நகர்ந்தான்.

ஸ்டேஷன் வாசலில் டிக்கட் பரிசோதகரிடம் அந்தப் பெண்கள் கூட்டம் நின்றது. ரவி முத்துவின் காதோடு, "டேய்! இவங்க கும்பலாக நிக்கறபோதே நாம் நைஸா நழுவிடணும். இல்லாட்டி டிக்கட்டில்லாமெ மாட்டிக்குவோம்" என்று ரகசியமாகக் கூறி அவனையும் இழுத்துக் கொண்டு டிக்கட் பரிசோதகரைத் தாண்டி இழுத்துச் சென்றான்.

"டிக்கட் ப்ளீஸ்" என்றார் அவர்.

ரவி பின்னல் கையைக் காட்டி, "அதோ அவரிடம் கேளுங்கள்" என்று யாரோ பின்னல் வந்து கொண்டிருந்தவரைக் காட்டிவிட்டு, வேகமாக நடந்தான். முத்துவும் கீழே வைத்த பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு, அந்தப் பெண்ணைப் பார்த்தபடியே ரவியைப் பின்தொடர்ந்து வெளியேறினன்.

இந்தச் சமயத்தில் ரவியால் சுட்டிக் காட்டப்பட்ட நபர் டிக்கெட் பரிசோதகரிடம் தம் டிக்கெட்டைக் கொடுத்து விட்டு வெளியேற முயன்றபோது, டிக்கெட் பரிசோதகர், "மத்த ரெண்டு டிக்கெட்டும் எங்கே?" என்றார்.

அந்த நபர், "ஒரு ஆளுக்கு எத்தனை டிக்கெட் ஸார் வாங்குவாங்க?" என்று எரிச்சலோடு கேட்டார்.

"இப்ப போனங்களே ஸார் ரெண்டு பேர். அவங்க டிக்கெட் ரெண்டும் எங்கே?" என்று அதட்டினர்.

"என்ன ஸார், இது? ஊரிலே இருக்கிறவங்களுக்கெல்லாம் நான்தான் டிக்கெட் வாங்கணுமா? நல்லாயிருக்குதே நியாயம்!" என்று அலுத்துக் கொண்டார் அந்த மனிதர்.

இந்த மாதிரி அவர் தவித்துக் கொண்டிருந்தாலும், நமக்கு அந்த நபரைப் பற்றிய கவலை வேண்டியதில்லை. அவர் எப்படி நிலைமையைச் சமாளித்தார் என்பது நமக்குச் சம்பந்தமில்லாத பிரச்னை. சம்பந்தமில்லாத பிரச்னைகளில் தலையிட நாம் அரசியல்வாதிகள் அல்ல. ஆகையால் ரவியையும், முத்துவையும் பின்தொடர்ந்து செல்வோம்.

ஸ்டேஷன் வாயிலுக்கு வந்து சேர்ந்த முத்துவும் ரவியும் உடனே ஒரு டாக்ஸியைப் பிடித்து ரவியின் சென்னை வீட்டை நோக்கிப் புறப்பட்டனர். 'உடனே டாக்ஸியைப் பிடித்தார்கள்' என்ற கூற்றை நம்புவது வாசகர்களுக்குக் கடினமாக இருக்கலாம். ஆனல் டாக்ஸியைப் பிடிக்கும் படலம் முழுவதும் விவரிப்பது என்று ஆரம்பித்தால் அதற்கென்று ஒரு காவியம் எழுத வேண்டியிருக்கும். தவிர, டாக்ஸி பிடிக்கும் அநுபவம் எவருக்கும் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. சென்ட்ரல், எழும்பூர் முதலிய ஸ்டேஷன்களில் பெட்டி படுக்கையோடு தவம் கிடக்கும் எந்த ஒரு மானிட ஜன்மத்தின் முன்னாலும் கடவுள் தோன்றி, "பக்தா! என்ன வரம் வேண்டும்? கேள்!" என்று சொன்னல், "பிரபோ! ஒரு டாக்ஸி வேண்டும்" என்றுதான் அந்த மானிடன் கேட்பான். வந்த சுவடு தெரியாமல் திரும்பிப் போவதைத் தவிர, கடவுளுக்கே வேறு வழியிருக்காது. ஆகையால் 'உடனே' என்ற வார்த்தையைக் கவனக் குறைவாகக் கூறப்பட்ட

தாக எண்ணி மன்னிக்க வேண்டியது வாசகர்கள் கடமை.

ஃ ஃ ஃ

ரவியும், முத்துவும் விடு வந்து சேர்ந்தனர். ரவியின் தகப்பனார் சபாபதி வசதியாகவே வீட்டைக் கட்டியிருந்தார்.

''எப்படிரா முத்து விடு?'' என்றான் ரவி.

''அந்தப் பொண்ணு எப்படி?''

''இன்னும் அதிலேயே இருக்கியா நீ? உனக்கென்ன அவ பேர்லே காதலா?''

''உனக்கெப்படிரா தெரியும்?''

'' அடப் பாவி ! நிஜமாகவே காதலா ? ஏன்டா டேய்! நான் கிராப் அடிச்சுக்கிட்டிருக்கேன். நானே இன்னும் காதலை ஆரம்பிக்கலே ! நீ குடுமி ! உனக்கென்னடா வந்ததும் வராததுமா காதல்?''

''டேய்! நான் கல்யாணம் செய்துக்கிட்டா அவளைத்தான் செய்துப்பேன். எவ்வளவு அழகா இருக்கிறு ?''

''பெரிய ஆளுடா நீ? எனக்கு மேலே இருப்பே போலிருக்குதே ?''

''நீதான் ரவி, எனக்கு உதவணும்.''

''உனக்கு எப்படித் திடீர்னு காதல் வந்தது ?''

''திடீர்னு வந்ததிலிருந்தே அது காதல்னு தெரியலையா? ரவி, அந்தப் பொண்ணு யார்ரா ?''

''உன் காதலி!''

''என் காதலி யாரு?''

''அந்தப் பொண்ணு.''

'' என்னடா, இப்படிப் பதில் சொல்றே? ஒண்ணுமே புரியலையே?''

'' காதலைப் பத்தி யாருக்காவது புரியுமா? ஆமாம்! அந்தப் பொண்ணு யாருன்னே தெரியலையே!''

''அவளை எப்படியாவது நான் பார்க்கணும்.''

''நீயாவது கொஞ்சம் புத்திசாலித்தனமா நடந்துக்கிட்டிருக்கணும்.''

''என்ன செய்திருக்கணும்?''

''பெட்டியை மாத்திக் கொண்டு வந்திருக்கணும். உன் பெட்டியை அவகிட்ட விட்டுட்டு, அவள் பெட்டியை நீ எடுத்துக்கிட்டு வந்திருக்கணும். அப்பறம் அவள் வீட்டுக்குப் பெட்டியைக் கொண்டு கொடுக்கப் போகிற மாதிரி காதலை ஆரம்பிச்சிருக்கலாம்.''

''பெட்டியிலேயா காதல் ஆரம்பம் ஆகும்?''

''யெஸ்!''

''தெரிஞ்சிருந்தா ஸ்டேஷனிலேயே பெட்டியை மாத்தியிருப்பேனே!''

''நீதானே? அய்யோ ! பயந்து செத்திருப்பே. உனக்கு ஏதுடா, அவ்வளவு தைரியம் ?''

''எனக்காக நீயாவது பெட்டியை மாத்தியிருக்கக் கூடாதா?''

''அந்தப் பொண்ணு விலாசத்தைக் கண்டுபிடிக்கணும். அதுக்கு என்ன வழின்னு யோசிப்போம்.''

''விலாசத்தை எப்படிக் கண்டு பிடிக்கிறது?''

''அந்தப் பொண்ணையே பார்த்துக் கேட்டுடலாம்!''

''அந்தப் பொண்ணை எப்படிப் பார்க்கிறது?''

''அவ விலாசத்திலே போய்ப் பார்ப்போம் ! போடா, முட்டாள். ஏதாவது ஐடியாத் தோணும். பேசாமல் இரு !'' என்றான்.

ரவியின் வார்த்தையில் முத்துவுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. சோகமே உருவாக அமர்ந்தான். ஓர் அன்னமோ கிளியோ அப்போது அவன் எதிரில் இருந்திருந்தால் நிச்சயமாக ஒரு பாட்டே பாடியிருப்பான். ரவியோ இதைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல் சட்டையைக் கழற்றிக் கோட் ஸ்டாண்டில் மாட்டிவிட்டு, நிஜார்ப் பைக்குள்

கைவிட்டுப் பர்ஸை எடுத்தான். அதிலிருந்த சின்னதுரை மகள் சித்ராவின் படத்தை மீண்டும் பார்த்தான். உண்மையிலேயே அவள் ரொம்பவும் அழகாகத்தான் இருந்தாள்.

ரவி, முத்துவிடம் படத்தைக் காட்டினான். ''டேய், அந்தப் பெண்ணைப் பத்திப் பிரமாதமா பேசறியே, என் சித்ராவைப் பார்ரா! இவ அழகுக்கு எதிரே அந்த எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன் பொண்ணு, என்னடா செய்ய முடியும்?''



''அடி என்னடி இது? ரம்பங்களைத் தூக்கிகிட்டு ஏழும் பட்ட பேர் வராங்க?''

''அரசமரத்தைச் சுற்றுவதுகூட ஆபத்துன்னு கருத்தடை அமைச்சர் முடிவு கட்டிவிட்டாரோ என்னவோ?''

''அவ ஒண்ணும் எழும்பூர் ஸ்டேஷன் பொண்ணு இல்லே. அவ அப்பா பேரு தான் நமக்குத் தெரியலே!''

''நீயே சொல்லு, சித்ரா அழகா, அவ அழகா?''

''நீ சித்ராவை நிஜமாவே காதலிக்கிறியா?''

''கண்டிப்பா!''

''எப்ப அவ பொட்டியைத் திருடப் போறே?''

''என் காதல் வேறே டைப்! என் 'பர்ஸனலிடி'யைப் பார்த்தால் சித்ராவாலே என்னைக் காதலிக்காமல் இருக்க முடியாதுடா.''

''நீ அவளைக் காதலிக்கிறியான்னு எனக்குச் சந்தேகமா இருக்குது. உங்க குடும்பத்தையும், சின்னதுரை குடும்பத்தையும் ஒண்ணு சேர்க்கிறதுக்காகத்தான் சித்ராவைக் கல்யாணம் செய்துக்கப் பார்க்கிறே! இல்லேயா?''

''அப்படியும் ஒரு ஐடியா இருக்குது. ஆனால் பேப்பர்லே அவள் படத்தைப் பார்த்த உடனே எனக்குக் காதல் வந்துட்டுதுடா!''

''என்னடா இந்தச் சனியன் பிடித்த காதல் பேப்பர்லேயும் வருது, ஸ்டேஷன்லேயும் வருது!''

''சரி... சரி... குளிச்சிட்டு ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிடுவோம்.''


முத்து பரிதாபமாக, ''அந்தப் பொண்ணைப் பார்க்காமல் எனக்குச் சாப்பாடே வேண்டியிருக்காது!'' என்றான்.

''கவலைப்படாதே. நான் எப்படியாவது அவளைத் தேடிக் கண்டுபிடிக்கிறேன்'' என்று ஆறுதல் கூறிய ரவி, ''நீ மட்டும் முதல்லேயே சொல்லியிருந்தால் அவள் பெட்டியை மாத்திக் கொண்டு வந்திருக்கலாம். பரவாயில்லே, பார்க்கலாம்'' என்று முடித்தான்.

இவர்கள் பேசியதையெல்லாம் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்த ஜீவனில்லாத ஒரு வஸ்து ''ஐயோ! மானிடனே? இவ்வளவுதானா உன் புத்தி!'' என்று சிரித்துக் கொண்டது. ஆம், அதுதான் ஒரு மூலையில் கேட்பாரற்றுக் கிடந்த பெட்டி. முத்து ஸ்டேஷனிலிருந்து எடுத்து வந்த பெட்டி. ''இதோ நான் கண்ணெதிரே இருக்கிறேன். அந்தப் பெண்ணினுடைய பெட்டி நான். ரயில்வே ஸ்டேஷனில் உண்மையாகவே கைமாறி உங்களிடம் வந்து சேர்ந்திருக்கிறேன். என்னைப் பார்க்காமல் நீங்கள்பாட்டுக்குப் பேசிக் கொண்டே போகிறீர்கள். பேசிப் பேசிப் பொழுதைக் கழிக்கும் மனிதர்களே, சற்று என்னிடம் வாருங்கள். நான்தான் அந்தப் பெண்ணின் பெட்டி என்பதை அறியுங்கள்! உம்! என்னுள்ளே அந்தப் பெண்ணின் பெயர், விலாசம் எல்லாம் இருக்கிறதடா, மூட ஜன்மங்களே!'' என்று கூவிக் கொண்டிருந்தது.

ஆனால் அந்தப் பெட்டி சொல்வதைக் கேட்காமலே முத்துவும், ரவியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

தான் சொல்வதைக் கேட்காத ரவியையும், முத்துவையும் பார்த்து இடம் மாறி வந்துவிட்ட அந்தப் பெட்டி, ''சீ! எக்கேடு கெட்டுப் போங்கள். உங்களை விட அந்தப் பெண்களே தேவலை!'' என்று அலுத்துக் கொண்டு தன் சிந்தனையை நிறுத்தி விட்டது. (தொடரும்)



உருகாத வெண்ணெயும் உருக்கு இரும்பும்...!

"கதிர்"

எழுச்சி நாளைக் கொண்டாடிய பிறகாவது தமிழகத்தில் சேலம் உருக்காலை உருவாகுமோ, இல்லையோ?... எப்படியானாலும் இரும்புக் கனிப் பொருள் ஏராளமாகக் கிடைக்கும் கஞ்சமலைப் பகுதி பற்றித் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லதல்லவா?



சேலம் விக்டோரியா மார்க்கெட் பஸ் நிலையம். பஸ்கள் வந்து சென்றவண்ணமாக இருக்கின்றன. எங்கும் ஒரே கசமுசவென்று சந்தடி. பயணிகள் நடமாடும் நெருக்கடி.

சேலம் கஞ்சமலை இரும்புக் கனியை உருக்கும் திட்டம் கனிந்திடும் நாள் எப்போது? இவ்வாறு ஒரு கேள்விச் சுமையை ஏற்றுத் திணறும் என் நெஞ்சுக்கு ஆறுதல் பகர்கிறது ஓர் அசரீரி வாக்கு. "சீக்கிரம் வந்துவிடும்!" "சீக்கிரம் வந்துவிடும்" என்ற சொல் பஸ்ஸைத்தான் குறிக்கும் என்று நான் அதை உதறித் தள்ளிவிடவில்லை. உருக்காலைத் திட்டத்துக்கே அதை அன்பளிப்பாக வழங்கிவிட்டுச் சற்று முன்னேறி நடந்தேன்.

அப்போது எதிரே ஒரு பஸ் பணியாளர் "இளம்பிள்ளை! இளம்பிள்ளை!" என்று குரல் எழுப்பியவாறு எல்லோரையும் தள்ளிக் கொண்டு வந்தாரே பார்க்கலாம். நான் திகைத்தேன். "இளம்பிள்ளையாவது?"

அந்தப் பணியாளர் விடவில்லை. என்னைச் சுற்றி நின்று கொண்டிருந்தவர்களில் ஒவ்வொருவரையும் பார்த்து "நீங்கள் இளம்பிள்ளையா?" என்று கேட்டார்.

"ஆமாம் ஐயா. நான் இளம் பிள்ளைதான்!" என்று சொல்லிக் கொண்டு கீழே அமர்ந்திருந்த ஒரு தொண்டு கிழவர் எழுந்து நின்றார்.

"நானும் இளம்பிள்ளை" என்று ஒரு பாட்டியம்மாள் கூடவே எழுந்து நின்றாள்.

ஒரு சிறு பொடிப் பையன் "நான் இளம் பிள்ளை" என்று சொல்லிக் கொண்டு முன் வந்தான். தாத்தா, பாட்டி முதலியவர்கள் தங்களை இளம்பிள்ளைகள் என்று சொல்லிக் கொண்டதையும், இதைக் கேட்ட பிறகும் சிறுவன் தன்னை இளம்பிள்ளை என்று சொல்லிக்கொண்ட தைரியத்தையும் பார்த்து நான் வியந்தபோது, என்னையும் விடவில்லை அந்த ஆசாமி. "சார்! நீங்க இளம் பிள்ளையா?"

"நாற்பதுக்கும் ஐம்பதுக்கும் இடையில் சிறிது மீதி இருக்கிறது. நான் இளம் பிள்ளையோ, வயதான பிள்ளையோ தெரியவில்லை. ஆனால் அந்தத் தொண்டு கிழவரைப் பார்த்தால் எனக்கும் உடல் துள்ளுகிறது...!" என்று நான் சொல்லி முடிக்கவில்லை, அந்தப் பணியாளர், "அந்தக் கணக்கிலே இறங்கிவிட்டீங்களா? நீங்க போறது எங்கே?" என்று இடைமறித்தார்.

"சித்தர் கோவிலுக்கு. அங்கே கஞ்சமலை ஸ்டீல் பிளாண்ட்..."

"சரிதான். சித்தர் கோவிலா? அப்படீன்னு நீங்களும் இளம் பிள்ளைதான். இளம்பிள்ளைங்கற ஊருக்குப் போற பஸ் அதோ நிற்கிறது. அதிலே ஏறிக்கிங்க. சித்தர் கோவில் தாண்டித்தான் இளம்பிள்ளை... போய் டிக்கட்டு எடுங்க...!"

பஸ், சேலம் நகர எல்லையைக் கடக்கும் போதே கஞ்சமலைக் காட்சி எதிர்கொண்டு அழைக்கிறது. மலையடிவாரத்தில் உள்ள சாலையில் பஸ் செல்லும் போது வலதுபுறம் ஓரிடத்தில் சிறு அறிவிப்புப் பலகையை ஒட்டியிருக்கிறார்கள். அதில் "கஞ்சமலைக் காட்சி — நெய்வேலி, சேலம் ஸ்டீல் பிராஜக்ட்" என்ற குறிப்புக்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. பஸ் செல்லும் வேகத்தில் சிலர் இதைக் கவனிக்காமல் நழுவி விடுவதும் உண்டு.

மலைமீது அப்போது ஆராய்ச்சி வேலைகள் நடந்து கொண்டிருந்தன. மின்சாரத் துளை விடும் கருவிகளைக் கொண்டு பல இடங்களில் ஆழத் துளைகள் போட்டுக் கற்களைக் குச்சிகளாகவும், சிறு கட்டிகளாகவும் வெளியே எடுத்துக் கொண்

இருந்தார்கள். வெடி வைத்தும் பாறைகளை உடைத்துக் கொண்டிருந்தார்கள். மலை மீது செல்லக் கரடு முரடான பாதை ஒன்று போடப் பட்டிருக்கிறது. அதிலும் சிறிது தூரம்தான் ஜீப் காரில் செல்ல முடியும். அதற்கும் மேலே இந்தக் கஞ்சமலை மீது செல்ல வேண்டுமானால், கால்களின் உதவியையே அவரவர்களும் கெஞ்ச வேண்டும்.

மலையின் நீளம் சுமார் ஆறு மைல். உயரம் சுமார் எண்ணூறு அடி. சித்தர் கோவில் கஞ்சமலையின் நடு மையத்தில் அமைந்திருக்கிறதென்று கூறலாம். மலை அடிவாரத்தில் கோவில். கோவிலுக்குப் பின்புறமும் முன்புறமும் மரங்கள் அடர்ந்த சோலைகள் காட்சி தருகின்றன. முருகன் கோவில் ஒன்றும் சந்நிதித் தெருவில் நுழையும்போதே தோற்றமளிக்கிறது.

சித்தர் கோவிலின் மகிமையைப் பற்றிப் பல பிரமிப்பூட்டும் வரலாறுகள் கூறப்படுகின்றன. தமிழ் முறை மருத்துவக் கலையை அருளிச் செய்த அகத்திய முனிவரின் சீடரே அங்கு கோயில் கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. ''தமிழ் வைத்தியர்களுக்கு இந்தக் கோயில் புனிதமானதாகும். ஆண்டுதோறும் அகஸ்தியர் விழா இங்கு நடைபெறுகிறது'' என்று கூறுகிறார்கள் கோவிலைச் சேர்ந்தவர்கள். கோவிலிலுள்ள விக்கிரகமும் சித்தர் ஒருவர் யோக நிலையில் அமர்ந்திருப்பது போலவே காட்சியளிக்கிறது.

கோவிலுக்கு அருகே, மலையடிவாரத்தில் சிறு ஓடை ஒன்று சலசலத்துச் செல்வதைக் காணலாம். கடும் கோடையிலும் இதில் நீரோட்டம் இருந்து கொண்டே இருப்பது ஒரு விந்தை. இந்த ஓடை எங்கிருந்து உற்பத்தியாகி வருகிறதென்றே தெரியாமல், மலையில் மண்டிக் கிடக்கும் செடி கொடிகள் புதர்களின் இடையே பிருந்து வந்துகொண்டிருக்கிறது. எனவே, இந்த ஓடையில் மூலிகைகளின் மருத்துவத் தன்மையும் கலந்திருப்பதால் இதில் நீராடுவதால் உடலுக்கு ஆரோக்கியம் ஏற்படுவதாகவும் கூறுகிறார்கள்.

சித்தர் கோயில் பகுதியில்தான் கஞ்சமலை மீது ஓர் அபூர்வமான நெல்லி மரம் இருந்ததென்றும், அந்த மரம் ஈந்த ஒரே நெல்லிக் கனியை அவ்வையாருக்குத் தமிழ் வேந்தன் அதிகமான் அன்புக் காணிக்கையாக அளித்துப் புசிக்கச் சொல்லி, மூதாட்டியார் நீண்ட காலம் வாழ்ந்திருக்கச் செய்





தார் என்றும் சித்தர்கோவில்வாசிகள் பெருமிதத்துடன் கூறுகிறார்கள். இந்த வரலாறுகளைக் கேட்கும்போது கேட்பவர்கள் மட்டுமில்லை, அங்குள்ள கஞ்சமலையும் அசைவற்றுக் கேட்பது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது.

''சித்தர் கோயிலுக்கு நேர், எதிரேயுள்ள பரந்த புஞ்சை நிலப் பரப்பிலேதான் உருக்காலைத் தொழிற்கூடங்கள் தோன்றவிருக்கின்றன. சுமார் 37 சதுரமைல் பரப்புள்ள நிலம் இதற்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். சேலம் ஜங்ஷன்வரை இந்த உருக்குத் தொழிற்கூடம் இடம்பெறவிருக்கிறது. இவையெல்லாம் ஒன்றும் இரகசியமல்ல. நில ஆர்ஜிதம் செய்யப் போவதாக அரசாங்கம் அறிவித்த விஷயம் தான்!'' என்றார் சித்தர்கோவில் -ஊர்க்காரர் ஒருவர்.

''கஞ்சமலையைக் கொஞ்சம் கொஞ்சமாக உடைக்கும்போது சித்தர் கோவில் பகுதி பாதிக்கப்படுமா என்று கவலைப்படத் தேவையில்லை. கோவில் பகுதிக்கும் ஊருக்கும் இடையூறு ஏற்படாத வகையில் இடம் விட்டு வைத்துப் பாதுகாப்புத் தருவதாக அரசினர் வாக்களித்திருக்கிறார்கள். இது இந்த ஊர்க் கோவிலின் மகிமை அறிந்தவர்களுக்குக் களிப்பூட்டும் செய்தியாகும்!'' என்கிறார் வேறு ஒருவர்.

ஆண்டுதோறும் முதலில் 5 லட்சம் டன் உருக்குத் தயாரிக்கத் திட்டம் வகுத்திருக்கிறார்கள். கஞ்சமலைப் பகுதியில் கனி வெட்டும் வேலை மூன்று இடங்களில் நடைபெறவிருக்கிறது. முதல் கட்டத்தில் மட்டும் 12 கோடியே 22 லட்சம் டன் கனி வெட்டி எடுக்கலாம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். கனி என்பது இரும்பும் கற்பாறையும் கலந்த நிலையைக் குறிக்கும். இந்தக் கனியில் அடங்கியிருக்கும் இரும்பு 36 சதவிகிதமாகும். ஐந்து லட்சம் டன் உருக்குத் தயாரிப்பதற்குச் சுமார் 8,15,000 டன் இரும்பு தேவையென்றும் மனக் கணக்குப் போட்டுப் பார்த்தால்கூட மலையின் முதல் கட்டத்திலிருந்து கிடைக்கும் இரும்புக் கனியை வைத்துக் கொண்டு சுமார் 70 ஆண்டுகள் வரை உருக்குத் தயாரித்துக் கொண்டிருக்கலாம். அதன் பிறகு மலையின் இரண்டாவது கட்டத்தை வெட்டிக் கனி எடுக்கலாம். அதன் பிறகு மூன்றாவது கட்டம் என்று இப்படியே நீடித்துக் கொண்டு செல்லலாம்.

கஞ்சமலைப் பகுதியைத் தவிர சேலத்துக்குச் சுற்று வட்டத்தில் இன்னும் பல இரும்புக் கனி மலைகளும் இருக்கின்றன. திருச்சி

மாவட்டத்திலும் இரும்புக் கனிகள் இருக்கின்றன. எல்லாமாகச் சேர்ந்து 37 கோடி டன் இரும்புக் கனி ஒரு கட்டத்தில் கிடைக்கும் என்று நிபுணர்கள் ஆராய்ந்து கணக்கு வெளியிட்டிருக்கிறார்கள். ஆமாம்; பிரசித்தி பெற்ற தஸ்தூர் கமிட்டி அறிக்கையில் இந்த விவரங்கள் அளிக்கப் பட்டிருக்கின்றன. எனவே இரும்புக் கனிக்குப் பஞ்சமில்லை என்பது தெளிவாகும்.

சேலம் இரும்புக் கனி தரத்தில் மிக உயர்ந்ததாகும். இந்த இரும்பிலிருந்து தயாரித்த உருக்கு வெளிநாடுகளில் 150 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே புகழ் பெற்று வந்திருக்கிறது. இந்த இரும்பைக் கொண்டு மிக நுட்பமான உருக்குக் கருவிகள் தயாரிக்கலாம். அந்தக் கருவிகள் தயாரிக்கும் இயந்திரங்களும் தயாரிக்கலாம். இவ்வாறெல்லாம் சிறப்புப் பெற்றிருந்தும் இந்த உருக்குத் தொழிற்சாலைத் திட்டம் ஏன் உருவாகவில்லை? வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய் தயாரிக்க இயலவில்லை என்று நீண்ட காலமாக எல்லோரும் ஏன் பேசாமல் இருந்தார்கள்? வெண்ணெயை உருக்குவதற்கு அருகில் எங்குமே அடுப்புக் கரி கிடைக்கவில்லை என்று பதில் சொன்னால் எப்படி இருக்கும்? நிலைமையும் இந்த உருக்கு விஷயத்தில் அவ்வாறுதான் இருந்து வந்தது. சேலம் இரும்பை உருக்கவேண்டுமென்றால் அதற்குச் கட்ட கரி அருகில் எங்கும் கிடைக்கவில்லை. வங்காளம், பீகார் இங்கிருந்து கரி கொண்டு வந்தால்தான் இங்குள்ள இரும்பை உருக்க முடியும். அப்படிக் கரி கொண்டு வருவது சுண்டைக்காய் கால் பணம் சுமைகூலி முக்கால் பணம் என்றவாறுதான் நஷ்டத்திலே முடிவடைவதாக இருக்கும். ஆகவே, நீண்ட காலமாக உருக்க முடியாமலே வெண்ணெய் இருந்து வந்தது. பிறகு சில ஆண்டுகளுக்கு முன் இதோ நெய்!.... நெய்! நெய்வேலி....! திட்டம் தோன்றிற்று. சேலம் இரும்பை உருக்கக் கரியும் கிடைத்து விட்டது!

இவ்வாறு மனத்தில் பலப் பல உருக்குச் சம்பவங்களையும் புள்ளி விவரங்களையும் நினைத்தவாறு சித்தர்கோவில் சாலைக்கு வரும்போது, சொல்லி வைத்தாற்போல் இளம்பிள்ளை பஸ்ஸும் வந்து கொண்டிருந்தது. சேலம் திரும்ப, அதில் எனக்கு இடமும் கிடைத்து விட்டது!

பஞ்சாமிர்தம்

'கொக்கி'

"குவெபெக் நீடூழி வாழ்க" என்ற சுலோகத்தைப் பிரஞ்சு அதிபர் டிகாலே கானடாவில் முழங்கியது உலகெங்கும் பரபரப்பை உண்டாக்கி விட்டது." —செய்தி



"ஏன்? அந்தச் சுலோகத்தைக் கானடாவில் சொல்லாமல், அடாணாவில் சொல்லியிருந்தால் பரபரப்பு ஏற்பட்டிராதோ?" என்று கேட்கிறார் ஓர் அப்பாவி வித்வான்.

ஃ ஃ ஃ

"சுரு வடிவில் இருந்து வரும் சிறிய கார் உற்பத்தித் திட்டம் கைவிடப்படவில்லை. சீக்கிரமே அது குட்டி போடும்."
- யூனியன் உதவித் தொழில் மந்திரி



குட்டி போடட்டும். ஆனால் அது தெருவில் குட்டிக்கரணம் போடாமல் போகுமா?

"டேக்ஸியில் நாலு பேர் செல்ல அனுமதிப்பது பற்றி, நன்கு ஆராய்ந்தே அரசு முடிவு செய்யும்." - அமைச்சர் கருணாநிதி



ஆமாம்! ஆராய வேண்டியது தானே. நான்கு பேர்கள் சம்பந்தப்பட்ட விஷயம் ஆயிற்றே!

ஃ ஃ ஃ



"பல வண்ணங்கள் நிறைந்த, ஆனால் மழையில் நனையாத பிளாஸ்டிக் தினசரிப் பத்திரிகை ஒன்று பிரஞ்சு நாட்டிலிருந்து வெளியாகி வருகிறது."

இரவல் கேட்பவர்கள்தான் பொதுவாகப் பத்திரிகைக்கும், குடைக்கும் வித்தியாசம் காட்டுவதில்லையே!

ஃ ஃ ஃ

"பள்ளிகள் திறந்து 2 மாதங்களாகியும் அரசாங்கம் அச்சிடும் 8ம் வகுப்பு ஆங்கிலப் பாட புத்தகம் இன்னும் இங்கு கிடைத்தபாடாயில்லை!"
- ஒரு குடந்தைச் செய்தி



"அரசாங்கப் பாடத்தில் 2 மாதம் என்பது எவ்வளவு விநாடிகள் என்று அர்த்தமோ?" என்று சந்தேகம் எழுப்புகிறார் ஒருவர்.

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!




ஏனெனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் கிரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

கால்கேட்டின் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்!

நீங்கள் பற்பொடியை விரும்பினால் இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம்.
நீல டப்பி பல மாதங்களுக்கு வரும்.



பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல்துலக்குங்கள்

...உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டெண்டல் கிரீமையே வாங்குகிறார்கள்.

புதியது!

வசதியானது

வைடமின் ஸி செறிந்துள்ள

இனிப்பான பானம்!



நாசூக்கான வாழ்வைச் சுவைக்க இன்றைய நவீன வழி பால்டாப். அது அலாதியான சுவையுள்ள இனிப்பு பானம். பாட்டில்கள் இல்லை. சேமிப்புத் தொல்லைகளும் இல்லை. ஒரு தம்ளர் குளிர்ந்த நீரில் ஒரு பால்டாப் வில்லையைப் போட்டாலே போதும்! தயாராகிவிடும்! புத்துணர்ச்சியூட்டும் பானம்! அதி உன்னதம்!

மறவாதீர்கள், சர்க்கரை கலவாத பால்டாப். உடம்பைப் பெருக்கவைக்கும் தாதுப்பொருள்கள் இல்லாதது. அருந்தி, அருந்தி, மகிழுங்கள் ஆசை தீர!


பால்டாப்

இனிப்பான பான வில்லைகள்

எல்லா முக்கிய கடைகளிலும் கிடைக்கிறது

உங்கள் நம்பிக்கைக்குகந்த Boots பூட்ஸ் தயாரிப்பு

MAS 5474



ஜப்பானியக் குட்டிக் கதைகள்

தொகுப்பு: கு. அழகிரிசாமி

இங்கே காணப் படுகிறவை ஜப்பானில் வழங்கும் நாடோடிக் கதைகளாகும்



நீ...ள...மா...ன நா...ய்.!

ஒரு தெருவில் இரண்டு நாய்கள் படுத்துக் கொண்டிருந்தன. இரண்டுக்கும் இடையே சுமார் பத்து அடி தூரம் இருக்கும். அந்த வழியே நடந்து வந்த ஒரு குருடன் ஒரு நாயை மிதித்து விட்டான். அது கோபம் கொண்டு அவனைப் பார்த்துக் குரைத்தது. குருடன் உடனே பின் வாங்கி, வலது பக்கமாக ஒதுங்கி நடந்து வந்தான். அப்போது மற்றொரு நாயையும் அவன் மிதித்து விட்டான். அதுவும் அவனைப் பார்த்துக் கோபமாகக் குரைத்தது.

குருடனுக்கு ஆச்சரியமாய் விட்டது.

''என்னடா இது! இவ்வளவு நீளமாகவா ஒரு நாய் இருக்கும்!'' என்று சொல்லிக் கொண்டு நடந்தான்.



ரொட்டிக்குப் பயந்தவன்!

ஒருவன் தெரு வழியாகக் கூடையில் ரொட்டிகளை வைத்து விற்றுக் கொண்டு போனான். அவனைப் பார்த்த ஓர் இளைஞன், ''ஐயையோ! ரொட்டிகளைக் கொண்டு வருகிறானே! என்ன செய்வேன்?'' என்று அலறிப் புடைத்துக் கொண்டு தெரு வழியாகத் திடுதிடுவென்று ஓடினான். ஒரு சிறு தொழுவம் கண்ணில் பட்டது. உடனே அதில் போய் ஒளிந்து கொண்டான். அவனைப் பார்த்த ஒரு தமாஷ்காரன், ''இப்படியும் ஒரு பைத்தியக்காரன் இருப்பானா? ரொட்டிக்குப் பயந்து இப்படி ஒருவன் ஓடுவானா?'' என்று சொல்லிக் கைகொட்டிச் சிரித்தான். அத்துடன் நில்லாமல் அந்த ஒரு கூடை ரொட்டிகளையும் தமாஷ்காரன் விலைக்கு வாங்கினான். இளைஞனைப் பயமுறுத்தி வேடிக்கை பார்க்க நினைத்து, ஒவ்வொரு ரொட்டியாக எடுத்து அவன் இருக்கும் இடத்தை நோக்கிக் குறி வைத்து எறிந்தான். தொழுவுக்குள் ரொட்டி வந்து விழும்போதெல்லாம் இளைஞன் பயங்கரமாகக் கூப்பாடு போட்டான். சிறிது நேரம் கழிந்த பிறகு அவனுடைய கூப்பாடு நிசரென்று நின்று விட்டது. அங்கே கூடியிருந்தவர்கள் பயந்து விட்டார்கள். 'அவனை அளவுக்கு மீறிப் பயமுறுத்திச் சாகடித்து விட்டோமோ' என்று நினைத்துத் தொழுவுக்குள் வந்து பார்த்தார்கள். அந்த இளைஞனோ அத்தனை ரொட்டிகளையும் விழுங்கி விட்டு நாக்கைச் சப்புக்கொட்டிக் கொண்டிருந்தான். கூட்டத்தைப் பார்த்ததும், ''இப்பொழுது எனக்கு, ஒரு கோப்பைத் தேநீரை நினைத்தால் பயமாக இருக்கிறது'' என்றான் அந்த இளைஞன்!



பெற்றோர்கள் !

பெற்றோர்களுக்கு அடங்காமல் ஊர் சுற்றிக் கொண்டு திரியும் ஓர் இளைஞனை அவனுடைய மாமா ஒருநாள் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து புத்திமதி சொல்லலானார்: ''பெற்றோர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அவர்கள்தான் கண்கண்ட தெய்வங்கள். கோடி கொடுத்தாலும் அப்பாவையும் அம்மாவையும் விலைக்கு வாங்க முடியுமா? அதனால் நீ அவர்களை மதித்து நடக்க வேண்டும்.''

புத்திமதியைக் கேட்ட மருமகன், ''நீங்கள் சொல்வது உண்மைதான். பெற்றோர்களை விலைக்கு வாங்க முடியாதுதான். ஆனால் அதே சமயத்தில் அவர்களை விலைக்கு விற்கவும் முடியாதே! எவன் வாங்குவான்?'' என்று கேட்டான்.

● இவ்வாண்டு மாஸ்கோ சர்வதேச திரைப்பட விழாவில் தடை செய்யப்பட்ட திரைப்படம் பற்றிய கட்டுரை இது. ஹாலிவுட் நட்சத்திர தம்பதி
● நடித்த படம். அண்மையில் எகிப்து அரசாங்கம் எலிஸபெத் டெய்லர், ரிச்சர்ட் பர்ட்டன் நடித்த திரைப்படங்களை அவர்கள் இஸ்ரேல்
● நாட்டுக்கு ஆதரவாக 15 நிமிடங்களில் 65 லட்சம் ரூபாய்கள் நிதி திரட்டிய காரணத்தால் தடை செய்து விட்டது. ●

தணிக்கையாளர்களைத் திணற வைத்த திரைப்படம்

அ. இராமதுரை

"வர்ஜீனியா உல்ஃபைக் கண்டு யார் பயந்தது?" (Who is afraid of the virginia woolf) என்ற திரைப் படம் சென்ற ஆண்டில் தயாரான திரைப் படங்களுள் மிகவும் குறிப்பிடத் தக்க ஒன்று என்று கூறினால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. அமெரிக்காவில் திரைப் படங்களுக்காக ஆண்டு தோறும் வழங்கப்படும் 14 "ஆஸ்கார்" பரிசுகளில் 13 பரிசுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட திரைப்படம் இதுவரை இது ஒன்றுதான். ஹாலிவுட்டின் முடிசூடா மகாராணியாகத் திகழும் எலிஸபெத் டெய்லர் நடித்த பாத்திரங்களில் இப்படத்தில் உள்ள "மார்த்தா" என்ற பாத்திரம்தான் மிகவும் கஷ்டமானதாகும். அப்பாத்திரத்தை முழு மனத்துடனும் மிகக் கவனத்துடனும் சிறப்புற நடித்ததால்தான் எலிஸபெத் டெய்லருக்கு இந்த ஆண்டில் சிறந்த நடிகைக்காக வழங்கப்படும் "ஆஸ்கார்" பரிசு கிடைத்தது. இதைத் திறமையாக நெறிப்படுத்திய இயக்குநர் மைக்கேல் நிக்கோலாஸ் என்பவருக்கும் இதைத் தயாரித்த தயாரிப்பாளர் எர்னஸ்ட் லேமன் என்பவருக்கும் இந்தப் படம்தான் 'கன்னி முயற்சி'. இவை எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம் என்னவென்றால் இப்படத்தின் காரணமாகத்தான் அமெரிக்கத் தணிக்கைக் குழுவும் இந்தியத் தணிக்கைக் குழுவும் தங்களது நடைமுறை விதிகளையே மாற்ற நேரிட்டது.

எட்வர்ட் ஆல்பி என்பவர் எழுதிய நாடகம்தான் "வர்ஜீனியா உல்ஃப்". நியூயார்க் நகரில் உள்ள புகழ்பெற்ற பிராட்வே கலை அரங்கத்தில் வெற்றி முரசு கொட்டிய இதைக் கண்ட புகழ்பெற்ற வார்னர் பிரதர்ஸ் என்ற திரைப்பட நிறுவனம் இந்த நாடகத்தைத் திரைப்படமாக்க எண்ணியது. நாடகத்தைத் திரைப்படமாக்கும் உரிமையைப் பெறுவதற்காக மட்டும் அந்நிறுவனம் ஆசிரியர் எட்வர்ட் ஆல்பிக்குச் சுமார் 36 லட்ச ரூபாய்கள் கொடுத்தது!

"இசையின் நாதம்" (The sound of music) என்ற உலகப் பிரசித்தி பெற்ற திரைப் படத்துக்குச் சுவையான வசனங்களை எழுதிப் பாராட்டுப் பெற்ற எர்னஸ்ட் லேமன் என்பவரை வார்னர் பிரதர்ஸ் நிறுவனம் தயாரிப்பாளராகப் பணித்தது. வசனகர்த்தா லேமன் முதன் முதலாகத் திரைப் படத் தயாரிப்பாளர் ஆனார். லேமன் ஆல்பியின் நாடகத்தைத் திரைப்படமாக்கத் தயங்கினார்.

காரணம்? ஆல்பியின் நாடகம் மற்ற அமெரிக்க நாடகங்களைப் போல இல்லை. நடைமுறையில் உலகில் வழக்கிலிருக்கும் ஆபாசம் எனக் கருதப்படும் பல சொற்களைக் கொண்டிருந்தது. சான்றாக "வர்ஜீனியா உல்ஃப்" திரைப் படத்தில் பதினொரு முறை "நாசமாய்ப் போன கடவுள்", ஏழு முறைகள் "விபசாரி மகனே", ஐந்து முறைகள் "நாய் மகள்" இன்னோரன்ன வசனங்கள் இருப்பதைக் குறிப்பிடலாம். அருவருப்பு மிக்கதாகக் கருதப்படும் இந்த வசனங்களை அகற்றி விட்டால் நாடகத்தின் அஸ்திவாரமே சிதைந்துவிடும் என லேமன் கருதினார். ஆனால் "வசனங்கள்" திரைப் படத்தில் இடம் பெற்றாலோ கண்டிப்பாக அமெரிக்கத் தணிக்கைக் குழு அனுமதிக்காது எனப் பயந்தார்.

"இரு தலைக் கொள்ளி எறும்பு போல"த் தவித்த லேமன் நாடகத்தின் வசனங்களைப் பற்றி இயக்குநர் மைக் நிக்கோலாசுடன் 180 நாட்கள் விவாதித்தார்! இறுதியில் லேமனும் நிக்கோலாசும் ஆல்பியின் வசனங்களை மாற்றாமல் அப்படியே படமாக்குவதாக முடிவு செய்தார்கள். உடனே வார்னர் பிரதர்ஸ் நிறுவனம் எலிஸபெத் டெய்லரையும் ரிச்சர்ட் பர்ட்டனையும் திரைப் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்தது.

இதிலும் ஒரு சங்கடம் ஏற்பட்டது. ஏனெனில் முப்பத்தைந்து வயதான எலிஸபெத் டெய்லர் பார்வைக்கு (மேக் அப் இல்லாமல்) 25 வயது பருவ மங்கை போலத் தோற்றமளித்தார். ஆனால் அவர் நடிக்க வேண்டியதோ "மார்த்தா" என்ற நாற்பது வயது குடிகாரியின் பாத்திரம். இதற்காக எலிஸபெத் டெய்லரின் தலை அலங்காரத்தை மாற்ற நேரிட்டது. எலிஸபெத் மருத்துவர் ஒருவரிடம் ஆலோசனை பெற்று, சுமார் மூன்று மாதங்களில் இருபது பவுண்ட் எடையைக் கூட்டிக் கொண்டார். இனிய குரலைக் கொண்ட அவர், குடிகாரியைப் போல் கரகரத்த குரலில் பேசப் பழகிக் கொண்டார்.



இத்தனை இன்னல்களையும் சமாளித்த பிறகு ''வர்ஜினியா உல்ஃப்'' திரைப்படமாக்கப்பட்டது. இதற்கு ஆன செலவு சுமார் ஆறு கோடி ரூபாய்கள்! சாதாரண சமூகப் படம் ஒன்றுக்கு — அதுவும் வண்ணப் படமல்லாத ஒன்றுக்கு இவ்வளவு பெருந் தொகை செலவழிக்கப்பட்டது திரையுலகின் வரலாற்றிலேயே இதுதான் முதல் முறை.

திரைப்படத்தைப் பார்வையிட்ட நிறுவன நிர்வாகிகள் அதைக் கண்டதும் பயந்தனர். திரைப் படத்தில் எந்த இடத்தை வெட்டுவது என்பது அவர்களுக்கே புரியவில்லை. இயக்குநர் நிக்கோலாசும் தயாரிப்பாளர் லேமனும் திரைப் படத்தின் மேல் கத்தரிக்கோல் படக் கூடாது என்று இறுதியாகக் கூறிவிட்டனர். படத்தை வெட்டாமல் திரையிட்டால் சக்தி மிகுந்த தேசியத் திரைப்பட கத்தோலிக்க சங்கம் கடுமையாக எதிர்க்கும் என்ற பயம் நிறுவன நிருவாகிகளுக்கு இருந்தது.

இறுதியில் ''வர்ஜினியா உல்ஃப்'' திரைப் படம் தேசிய கத்தோலிக்கத் திரைப்பட சங்க உறுப்பினர்கள் எண்பத்தொரு நபர்களுக்கு மட்டுமே முதலில் திரையிட்டுக் காண்பிக்கப்பட்டது. திரைப் படத்தை ஒரு முறைக்கு மேல் மீண்டும் பார்த்த உறுப்பினர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

''இத்திரைப் படத்தில் அருவருக்கத்தக்க, ஆபாசமாக உள்ள வசனங்கள் பல இருந்த போதிலும் இது ஒரு திரைக் காவியம் என்பதை மறுக்க முடியாது. இப்படத்தை அனுமதிப்பதால் வரும் அபாயத்தை விட அனுமதிக்காமல் இருந்தால் வரும் அபாயம் தான் பயங்கரமானது.''


அமெரிக்கத் திரைப் பட உலகையே ஆட்டி வைக்கும் தேசிய கத்தோலிக்கத் திரைப்படச் சங்கம் ''வர்ஜினியா உல்ஃப்'' படத்தைத் திரையிட அனுமதி தந்த போதிலும், அமெரிக்கத் திரைப்படக் கழகம் தனது அனுமதியைத் தரவில்லை. அக்கழகத்தின் தலைமைத் தணிக்கையாளராக இருந்த ஜியாப்ரே ஷர்லாக் படத்தைப் பார்த்த பின் ''இப்படம் ஓர் அற்புதமான திரைப்படமாகும். இப்படத்துக்கு ''ஆஸ்கார்'' பரிசு நிச்சயம் கிடைக்கும். இருந்த போதிலும் இதனைத் திரையிட நான் அனுமதிக்க முடியாது. ஏனெனில் தணிக்கை விதிகளையே தகர்த்தெறிகிறது இத் திரைப் படம்'' என்றார். அதுமட்டுமின்றி அப்பொறுப்பை அமெரிக்கத் திரைப்படக் கழகத்தின் தலைவரான ஜேக் வாலண்டி என்பவரிடம் ஒப்படைத்து விட்டார். வாலண்டி ''வர்ஜினியா உல்ஃப்''பைப் பார்த்தவுடன் அப்படத்தை மிகவும் விரும்பினார். இப்படத்துக்கு அனுமதி அளிப்பதற்காகத் திரைப்படத் தணிக்கை முறைகளைப் பற்றிய புஸ்தகங்களைப் படித்து இறுதியில் அனுமதி தந்தார்.

அண்மையில் ''வர்ஜினியா உல்ஃப்'' இந்தியத் தணிக்கை அதிகாரிகளிடம் தணிக்கைக்குச் சமர்ப்பிக்கப்பட்டபோது பல புகார்கள் அவர்களுக்கு வந்தன, இப்படத்தைத் தடை செய்ய வேண்டுமென்று. ஆனால் நாளுக்கு நாள் ஆபாசம் எது என்பது பற்றிய அபிப்பிராயங்கள் மாறி வருவதைப் பார்த்த இந்தியத் தணிக்கைக் குழு ஐந்து 'ஆஸ்கார்' பரிசுகளையும் நியூயார்க் நாடகத் திரைப் பட விமரிசகர்களின் பரிசுகளையும் பெற்ற இத்திரைப் படத்தை ஒரு அடிகூட வெட்டாமல் திரையிட அனுமதித்தனர்.

கலை வேறு, ஆபாசம் என்பது வேறு என்ற உண்மையை இந்தியத் தணிக்கைக் குழு உணர ஆரம்பித்திருக்கிறது.

கல்லுக்குள் ஈரம்

ர.சு.நல்லபெருமாள்



வெள்ளி விழா இரண்டாவது பரிசு நாவல்

அத்தியாயம் 31

அரசியல் நாடகம்

ரங்கமணியைக் கிராண்ட் ஹோட்டலில் இறக்கிவிட்டு உஸ்மானும், தேவிகாவும் சென்று விட்டார்கள். மறுநாள் மத்தியானம் ரங்கமணியைத் தேடிக் கொண்டு உஸ்மான் கிராண்ட் ஹோட்டலுக்கு வந்து விட்டார். சாதிக்காய்ப் பலகையில் செய்திருந்த பெட்டியையும் கொண்டு வந்திருந்தார்.

''இதைப் பத்திரமாக வைத்திருங்கள். உங்கள்மீது யாருக்கும் சந்தேகம் வந்திருக்காது. ஊருக்குத் திரும்பும் வரை நிருபராகவே நடித்துக் கொண்டிருங்கள். அந்த அமெரிக்க நிருபருடனேயே சுற்றிக் கொண்டிருங்கள். அப்போதுதான் உங்கள்மீது சந்தேகம் எழாமல் பார்த்துக்கொள்ள ஏதுவாயிருக்கும்'' என்றார் உஸ்மான். பிறகு, ''இன்று இரவு தேவிகாவின் மாடிக்கு வாருங்கள். முக்கியமான செய்தி கிடைக்கும்'' என்று கூறிவிட்டு வெளியேறினார்.

அன்று இரவு சௌரிபஜாரில் தேவிகாவின் மாடியில் புதிதாக நாலைந்து பேர்கள் வந்திருந்தார்கள். அவர்களை ரங்கமணிக்கு அறிமுகப்படுத்தினாள் தேவிகா. மணி எட்டரை ஆனதும் ரேடியோப் பெட்டியின் விசையைத் திருகினார் ரஜீந்திர சென்குப்தா.

''ஜப்பானிலிருந்து முக்கிய செய்தி வரப் போகிறது. டோக்கியோவிலிருந்து ராஷ் பிஹாரி போஸ் நமக்குச் செய்தி கூறுவார்'' என்றார் குப்தா.

சிறிது நேரத்தில் ரேடியோப் பெட்டியிலிருந்து ஒரு விசித்திர ஒலி கேட்டது. அதைத் தொடர்ந்து ஒருவர் பேசும் குரல் கேட்டது.

''சகோதரர்களே! பாரதத்தின் சுதந்திர ஒலி பரவத் தொடங்கிவிட்டது. டோக்கியோவில் நேற்றும் இன்றும் இந்திய விடுதலை மகாநாடு நடந்தது. இன்றோடு மகாநாடு முடிவுற்றது. மகாநாட்டின் தீர்மானத்தின்படி

இந்திய விடுதலைக்காக ஜப்பானில் 'இந்திய தேசிய ராணுவம்' உருவாகிறது. கேப்டன் மோஹன் சிங் தலைமையில் இந்த ராணுவம் செயல்படும். சிங்கப்பூர் வீழ்ந்தபோது, பிரிட்டிஷாரிடமிருந்து ஜப்பான் கைப்பற்றிய



நாற்பதினாயிரம் இந்திய வீரர்களை ஜப்பான், நமக்குக் கொடுத்து விட்டது. இந்தப் படை விரைவில் பாரதத்தின் அடிமை விலங்கை முறித்தெறியும். சுபாஷ் சந்திரபோஸையும் ஜப்பானுக்கு வருமாறு அழைத்திருக்கிறோம். இனி நமக்கு வெற்றிதான். ஜூன் மாதத்தில் இன்னொரு மகாநாடு பாங்காக் நகரத்தில் நடக்கும். அதுபற்றிப் பின்னும் தகவல் கொடுக்கிறேன். வந்தே மாதரம்!''

ராஷ்பிஹாரி போஸின் பேச்சைக் கேட்டு எல்லாரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர். ரங்கமணி உணர்ச்சி வசப்பட்டிருந்தான்.

''ராஷ் பிஹாரி போஸ் யார் ?''—தேவிகா ஆவலோடு கேட்டாள்.

''பெரிய தியாகி. பயங்கர இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டவர். முப்பது வருஷங்களுக்கு முன்னால், ஹார்டிஞ்ச் என்ற வைஸிராயைக் குண்டு வீசிக் கொல்லச் சதி செய்தார். ஆனால் வைஸிராய் சொற்பக் காயத்துடன் உயிர் தப்பி விட்டார். பிறகு, இந்திய ராணுவத்தையே பிரிட்டிஷாருக்கு எதிராகத் தூண்டிச் சுதந்திரப் போருக்குச் சதி செய்தார். ஆனால் துரோகிகள் காட்டிக் கொடுத்து ' விடவே, சதி ஒன்றும் வெற்றி பெறவில்லை. கடைசியில் இவர், இந்தியாவிலிருந்து தப்பி ஜப்பானுக்குச் சென்று விட்டார். அங்கிருந்து கொண்டே தாய்நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடுகிறார். இவருடைய முயற்சியால்தான் இந்திய தேசிய ராணுவம் உருவாகிறது'' என்றார் குப்தா உற்சாகத்துடன். ராஷ்பிஹாரி போஸின் தீரத்தையும், ஆற்றலையும் எண்ணி மலைத்தான் ரங்கமணி.

சிறிது நேரத்தில் எல்லாரும் விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டார்கள். கடைசியில் ரங்கமணியும் போவதற்காக எழுந்தான்.

''நீங்களே போய் விடுவீர்களா? அல்லது நான் துணைக்கு வரட்டுமா?'' என்று கேட்டார் குப்தா.

ரங்கமணி அவரை உற்றுப் பார்த்தான்.

''ஒரு சந்தேகம்'' என்றான்.

''என்ன ?'' — குப்தா கேட்டார்.

''உஸ்மான் யார் ?'' என்று சந்தேகத்துடன் கேட்டான் ரங்கமணி.

இதைக் கேட்டுக் குப்தாவும் தேவிகாவும் சிரித்தார்கள்.

''நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அது சரிதான்'' என்றார் குப்தா.

''நீங்கள் முஸ்லிம் தொப்பியும் மீசையும் வைத்திருந்தபோது டில்லி போலீஸ்காரர்களாலேயே உங்களை அடையாளம் கண்டு

பிடிக்க முடியவில்லையே. உங்கள் குரலைக் கொண்டுதான் சந்தேகப்பட்டேன்'' என்றான் ரங்கமணி வியப்புடன்.

''வியாழக்கிழமை நிருபர்களுக்குப் பேட்டி அளிப்பதாக கிரிப்ஸ் அறிவித்திருக்கிறாரே. நாம் அங்கு சந்திக்கலாம்'' என்றார் குப்தா.

''உங்களை உஸ்மானாக அங்கு சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சிரித்துக்கொண்டு மாடியிலிருந்து இறங்கினான் ரங்கமணி.

''துணைக்கு வர வேண்டுமா? அல்லது தனியாகப் போய் விடுவீர்களா?'' என்று கேட்டார் குப்தா.

''வேண்டாம். தனியாகவே போய் விடுவேன்'' என்று கூறிவிட்டுக் கீழே இறங்கிச் சென்றான் ரங்கமணி.

* * *

தில்லியில் கிரிப்ஸின் திட்டத்தைக் காங்கிரஸ் காரியக் கமிட்டி காரசாரமாக விவாதித்தது. காங்கிரஸ் கட்சித் தலைவர் கிரிப்ஸை முதலில் சந்தித்தபோது கிரிப்ஸ் நம்பிக்கை அளித்திருந்தார். ஆனால் காங்கிரஸ் தலைவர் இரண்டாவது முறை, ஏப்ரல் முதல் தேதியன்று கிரிப்ஸைச் சந்தித்தபோது கிரிப்ஸின் பேச்சில் முரண்பாடு இருப்பதை உணர்ந்தார். முந்திய சந்திப்பில் அளித்த வாக்குறுதிகளை மழுப்பத் தொடங்கினார்.

இந்த ஏமாற்றம் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் எதிரொலித்தது. கிரிப்ஸிடம் அவருடைய திட்டம் பற்றி விளக்கம் கோரினார்கள். கிரிப்ஸின் திட்டம் திருப்தியாக அமையவில்லை. கடைசியில் கிரிப்ஸின் தூது தோல்வியடையும் கட்டத்தை நெருங்கிவிட்டது. கிரிப்ஸ் இந்தியாவை விட்டுப் புறப்படுவதற்கு முன் நிருபர்கள் அவரைப் பேட்டி கண்டார்கள். அந்தக் கூட்டத்தில் மில்லரும் ரங்கமணியும் இருந்தார்கள். ஓர் ஓரத்தில் ரவீந்திர சென் குப்தா முஸ்லிம் வேஷத்தில் உஸ்மானாக அமர்ந்திருந்ததை ரங்கமணி கவனித்துக் கொண்டான். கிரிப்ஸ் பேச ஆரம்பித்தார்.

''நம்பிக்கையோடு வந்தேன்; ஏமாற்றத்துடன் போகிறேன். இந்தியத் தலைவர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுத்தேன். அவர்கள் பயன்படுத்தத் தவறிவிட்டார்கள். இந்தத் தூதின் தோல்விக்கு அவர்கள்தாம் பொறுப்பு. இப்போது என்னுடைய திட்டத்தை இந்தியத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் பிறகு. இது பற்றி மீண்டும் சிந்திக்க நேரமும் சந்தர்ப்பமும் கிடைக்காது. போர் முடிந்தபிறகுதான் இது பற்றி யோசிக்க வேண்டியிருக்கும்'' என்றார் கிரிப்ஸ் சற்றுக் கடுமையாக.

''இந்திய ஆட்சிக் குழுவை நிறுவிய பிறகு அதிகாரம், ஆட்சிக்குழுவிடம்தான் இருக்கும்; வைஸ்ராய் பெயரளவுக்கு இங்கிலாந்து மன்னர் மாதிரி ஒரு தலைவர்தான் என்று அன்று சொன்னீர்கள். இன்று வைஸ்ராயின் அதிகாரம் பழைய மாதிரிதான் இருக்கும் என்கிறீர்களே?'' என்று கேட்டான் ரங்கமணி.

''அதில் சட்ட நுணுக்கமான சிக்கல்கள் இருக்கின்றன. வைஸ்ராயின் அதிகாரங்களைத் தற்போது மாற்ற இயலாது. இதற்கான திருத்தும் வேலைகளைச் செய்ய இப்போது அவகாசம் போதாது!'' என்றார் கிரிப்ஸ். பிறகு சொன்னார்: ''நான் சொல்லுவதை இந்தியத் தலைவர்கள் ஏற்றுக் கொண்டால் நல்லது. என்னை நம்பி ஏற்க வேண்டும். வைஸ்ராயின் அதிகாரம் பற்றிய மாற்றம் எதுவும் ஏற்படாவிட்டாலும்கூட இந்திய ஆட்சிக் குழு பொறுப்புள்ள மந்திரி சபையாகவே செயல்பட முடியும்.''

''ஆனாலும் பூரண அதிகாரம் ஆட்சிக் குழுவுக்கு இல்லையே. ஏதாவது ஒரு விஷயத்தில் வைஸ்ராய்க்கும், ஆட்சிக் குழுவுக்கும் அபிப்பிராய பேதம் வந்தால் சிக்கல் ஏற்படுமே?'' என்று கேட்டான் ரங்கமணி.

இதைக் கேட்டு கிரிப்ஸ் முகத்தைச் சுளித்தார். பிறகு சிரிப்பை வலிய வரவழைத்துக் கொண்டார்.

''இந்தியாவின் நண்பன் என்ற முறையில் நான் சொல்கிறேன்; புதிதாக ஏதாவது கேள்விகளை எழுப்பிப் புதுப் பிரச்னைகளை ஏற்படுத்திவிட வேண்டாம். என்னுடைய திட்டத்தை அப்படியே இந்தியா ஏற்றுக் கொள்ளுமானால் போர் முடிந்த பிறகு இந்தியாவுக்கு நிச்சயம் சுதந்திரம் கிடைக்கும் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. மேலும் உங்களுடைய இனப் பிரச்னைக்கு நீங்கள் முடிவு கண்ட பிறகுதான் உங்கள் அரசியல் பிரச்னைக்கு முடிவு காண முடியும். எப்போது இந்து–முஸ்லிம் பிரச்னைகளைத் தீர்க்கிறீர்களோ, அந்தக் கணமே இந்திய சுதந்திரம் பற்றிய பிரச்னையைத் தீர்க்க நாங்கள் தயார்'' என்றார் கிரிப்ஸ்.

''நீங்கள் வந்த புதிதில் பேசிய விதத்துக்கும் தற்போது பேசும் விதத்துக்கும் காரணம் கூற முடியுமா?'' என்று கேட்டார் மில்லர்.

''நீங்கள் சொல்வது சரியல்ல. என்னுடைய பேச்சில் எந்த வித்தியாசத்தையும் நான் காணவில்லை. என்னுடைய திட்டத்திலும் எவ்வித மாறுதலையும் நான் செய்யவில்லை'' என்றார் கிரிப்ஸ்.

சிறிது நேரத்தில் பேட்டி முடிந்தது. ரங்கமணியை அழைத்துக் கொண்டு ஜவாஹர்லால் நேரு தங்கியிருந்த மாளிகைக்கு ஒரு டோங்காவில் விரைந்தார் மில்லர்.

''இதென்ன, கிரிப்ஸ் இப்படிப் பல்டி அடிக்கிறார்? வந்த புதிதில் நம்பிக்கை கொடுத்துப் பேசினார். இப்போது வளைந்து கொடுக்காமல் பேசுகிறாரே!'' என்றான் ரங்கமணி.

''பிரிட்டிஷ் அரசாங்கம், கிரிப்ஸின் கையைக் கட்டிவிட்டது. பாவம் கிரிப்ஸ் வேறு வழியின்றி ஊருக்கு மூட்டை கட்டிவிட்டார்'' என்றார் மில்லர்.

''தூது வெற்றி பெறுவதில் பிரிட்டிஷாருக்கே அக்கறை இல்லை என்று நினைக்கிறேன்.''

''உண்மைதான். சர்ச்சிலுக்கு அதில் சம்மதமில்லை. தூது தோல்வியடைந்து, பழியை இந்தியாவின் மீது சுமத்த வேண்டும் என்பதுதான் சர்ச்சிலின் திட்டம். அதனால்தான் கிரிப்ஸின் வாயை அடைத்து விட்டார்.''

என்ன எழுதுகிறீர்கள் அய்யா?

ஒரு செக் எழுதுகிறேன், மகனே.

செக் என்றால் என்ன?


எனது பாங்கை தொகை வழங்கும்படி கேட்கும் உத்தரவு அது. சில புத்தகங்களை வாங்குகிறேன். இதன் கிரயத்தை ரொக்கமாக அனுப்பாமல் ஒரு செக் அனுப்புகிறேன். கடைக்காரர் இதைத் தனது பாங்கில் கட்டுகிறார். அந்த பாங்கு எனது பாங்கிலிருந்து பணத்தை வசூலித்துக்கொடுக்கிறது. பணத்தினால் செய்யக்கூடியதை செக் மூலம் செய்யலாம். எனினும் செக் பணத்தைவிடப் பாதுகாப்பு உடையது. இந்த செக்கைக் கட்டி அந்தக் கடைக்காரர் ஒருவரே தொகை பெற முடியும். செக் தொலைந்து போய் விட்டாலும் என் பணம் போகாது. இது ஆச்சரியமாக இல்லையா?

ஆம், உங்கள் பாங்கு பஞ்சாப் நேஷனல் பாங்கு அப்படித்தானே?

ஆம். அதுதான் எனது பாங்கு. மிகப் பழைய, மிகப் பெரிய பாங்குகளுள் ஒன்றாகும். இதற்கு 490-க்கு மேற்பட்ட கிளைகளுண்டு.

பஞ்சாப் நேஷனல் பாங்க்

PR/PNB/6424 Tam/2



Cenray

FABRICS

Every Beauty is a Queen in exquisite Cenray fabrics



Cenray fabrics a division of **CENTURY RAYON**

Industry House, 159 Churchgate Reclamation, Bombay 1.

''இல்லாவிட்டால்கூட வெற்றி பெற்றிருக்குமா என்ன? மகாத்மாதான் இடையிலேயே வார்தாவுக்குத் திரும்பிப் போய்விட்டாரே?'' என்றான் ரங்கமணி.

''அவருக்குச் சண்டை என்றாலே பிடிக்காது. அதுவும் இந்தியாவைச் சண்டையில் பங்கு கொள்ளச் செய்வதுதானே கிரிப்ஸின் திட்டம். இருந்தாலும், காங்கிரஸ் காரியக் கமிட்டி ஒரு முடிவுக்கு வருவதற்குத் நாம் முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது என்பதற்காக மகாத்மா தில்லியை விட்டுப் போய் விட்டார்..... மிஸ்டர் ரங்கமணி, நீங்கள் காந்தியைச் சந்திக்கவில்லையா?'' — மில்லர் ஆவலுடன் கேட்டார்.

''இல்லையே! நேரம் வாய்க்கவில்லை. நான் போயிருந்தாலும் என்னைச் சந்திக்க மகாத்மாவுக்கு நேரம் இருந்திருக்காது'' என்றான் ரங்கமணி சிரித்துக் கொண்டே.

''நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டீர்களே!'' என்று அங்கலாய்த்தார் மில்லர்.

ஸ்ரீமதி ரமேஷ்வரி நேருவின் வீட்டு வாசலில் டோங்கா நின்றது. அங்குதான் ஜவாஹர்லால் நேரு தங்கியிருந்தார். அவர் முகத்தில் களை இல்லை. கவலை படிந்திருந்தது. ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார்.

''இந்திய ஆட்சிக்குழுவுக்குப் பூரண அதிகாரம் அளிக்க பிரிட்டிஷார் தயாராயில்லையே?'' என்றார் மில்லர்.

''அதனால் என்ன? கொடுப்பதை முதலில் வாங்கிக் கொள்ள வேண்டியதுதான். இப்போது நம்மைப் பற்றியும், நம் நாட்டைப் பற்றியுமே நாம் கவனித்துக் கொண்டிருக்கக் கூடாது. உலகத்தை இன்று யதேச்சாதிகார நெருப்பு சூழ்ந்திருக்கிறது. அதை அணைக்க மற்றவர்களோடு சேர்ந்து நாமும் முயலத்தான் வேண்டும். இந்திய சுதந்திரம் எங்கே போய் விடப் போகிறது? போர் முடிந்த பிறகு அதுபற்றி யோசிக்கலாமே! நம்மைப் பற்றியே எண்ணிக் கொண்டு, உலகத்தைப் பிடித்திருக்கும் சனியைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தால் நாம் சுயநலமிகளாகி விடுவோம்'' என்றார் ஜவாஹர்லால் நேரு மிகுந்த அக்கறையுடன்.

''கமிட்டியில் நீங்கள் இது பற்றி....'' என்று இழுத்தான் ரங்கமணி.

''கமிட்டி, ஒரு மனிதனின் ஏகாதிபத்தியத்துக்கு அடங்கிய விஷயமில்லையே. என்ன செய்ய முடியும்? பொறுத்திருந்து கவனிக்க வேண்டியதுதான்'' என்று கூறி நீண்ட பெருமூச்சு விட்டார் நேரு.

அவரிடம் விடைபெற்றுக் கொண்ட ரங்கமணியும், மில்லரும் வெளியே வந்து டோங்காவில் ஏறிக் கொண்டார்கள்.

''கிரிப்ஸ் திட்டத்தை ஏற்க வேண்டும் என்று நேருவுக்கு எவ்வளவு ஆசை!'' என்று வியந்தான் ரங்கமணி.

''இவரைப் போல் இன்னொரு தலைவரும் இருக்கிறார். அவரும் கிரிப்ஸ் திட்டத்தை ஆதரிப்பவர்தாம்'' என்றார் மில்லர்.

''யார் அவர்?''

''ராஜகோபாலாச்சாரியார்'' என்றார் மில்லர். அவரையும் சந்தித்தார்கள்.

''காரியக் கமிட்டி செய்த முடிவு சரியில்லை. கைக்கு எட்டிய தூரத்திலிருந்த சுதந்திரத்தை வெகு தூரத்தில் தள்ளிவிட்டது கமிட்டி. என்னுடைய மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நான் செயலாற்றியாக வேண்டும். நாட்டுக்கு எது நல்லது என்று தோன்றுகிறதோ அதைத் தெளிவாக நான் சொல்லித்தான் தீர வேண்டும். இந்தக் கடமையிலிருந்து நான் நழுவ முடியாது'' என்றார் ராஜாஜி தீர்க்கமாக.

அவருடைய தீவிரத்தையும், மனத்தில் தோன்றியதைத் துணிவுடன் கூறும் பண்பையும் கண்டு வியந்தான் ரங்கமணி.

ராஜாஜியைச் சந்தித்து விட்டுத் திரும்பிய போது, மாலை ஐந்து மணியாகி விட்டது. வழியிலேயே மில்லர் ரங்கமணியிடம் விடை பெற்றுக் கொண்டார்.

வெள்ளையனே, வெளியேறு!

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் தலைவர்கள் அனல் கக்கும் ஆவேசப் பேச்சுக்களைப் பேசிக் கொண்டு வந்தனர். கேட்பவர்களுக்கு ரத்தம் கொதித்தது.

''வெள்ளையர்கள் நம் நாட்டை விட்டு மூட்டை முடிச்சுக்களுடன் கிளம்பிவிட வேண்டும்'' என்று வீரமுழக்கம் செய்தார் பிபின் சந்திரபால். ''ஏன் மூட்டை முடிச்சுகளுடன் போகச் சொல்கிறீர்கள் அவர்களை?'' கோபமாக எதிர்க் குரல் எழுப்பினார் மௌலானா முகம்மதலி. ஒரு விநாடி அனைவரும் திகைத்து வாயடைத்துப் போயிருக்க, ''மூட்டை முடிச்சுகள் நம்முடையதல்லவா?'' என்றார் அவர்.

- குத்தாலம் வி. சம்பந்தம்



''மிஸ்டர் ரங்கமணி! நான் இன்று இரவே ஆக்ரா போய், அங்கிருந்து பம்பாய் போகிறேன். கூடிய விரைவில் நாம் மீண்டும் சந்திக்கலாம். அடிக்கடி கடிதம் எழுதுகிறேன்'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டார்.

ரங்கமணி டில்லிக்கு வந்து கிட்டத்தட்ட மூன்று வாரங்கள் ஆகிவிட்டன. அவன் வந்த காரியம் நிறைவேறவில்லை. டில்லி நகரத்தில் நிருபர் என்ற வேஷத்தில் மில்லருடன் அலைந்ததால் பொழுது போனதே தெரியவில்லை. இருந்தாலும் ஊரைப் பற்றிய ஞாபகமும் மனத்துக்கு இனியவர்களைப் பற்றிய நினைவும் அவனை அலைக்கழித்தன.

இரவு எட்டு மணி இருக்கும். அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டுக் கதவைத் திறந்தான் ரங்கமணி. வாசலில் முஸ்லிம் வேஷத்தில் ரவீந்திர சென் குப்தா நின்று கொண்டிருந்தார்.

''வாருங்கள் உஸ்மான்!'' என்றான் ரங்கமணி சிரித்துக் கொண்டே.

குப்தா அறைக்குள் வந்ததும், வாசற் கதவைச் சாத்தி உள் பக்கம் தாளிட்டார்.

''ரேடியோ ஒலிபரப்பும் கருவியின் மீதிப் பகுதி இப்போதைக்குக் கிடைக்காது. ஆகஸ்டு மாதம் பம்பாயில் பெற்றுக் கொள்ளலாமாம். அது பற்றிப் பின்னால் தகவல் சொல்லுகிறேன். நீங்கள் நாளைக்கு ஊருக்குத் திரும்பி விடுங்கள்'' என்றார் குப்தா.

தான் வந்த வேலை வெற்றி பெறவில்லையே என்று மனம் குழம்பினான் ரங்கமணி.

''உங்களிடம் கொடுத்த பெட்டியைப் பத்திரமாகச் சர்தாரிடம் சேர்ப்பித்து விடுங்கள். மீதமுள்ள கருவி கிடைத்த பிறகு சேர்த்து இணைத்துக் கொள்ளுங்கள். அது பற்றிச் சர்தாருக்குத் தெரிவித்து விடுகிறேன்'' என்றார் குப்தா.

மறு நாள் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் வண்டியில் ரங்கமணி ஏறிய போது அவனை வழியனுப்பக் குப்தாவும், தேவிகாவும் வந்திருந்தார்கள். குப்தா உஸ்மானாகக் காட்சியளித்தார். தேவிகா முஸ்லிம் பெண் மாதிரி உடை அணிந்திருந்தாள். வண்டி நகர்ந்த போது முஸ்லிம் பாணியில் சலாம் செய்து வழியனுப்பினார் குப்தா. தேவிகா சிரித்துக் கொண்டே கையை அசைத்தாள். ''சீக்கிரம் நாம் சந்திக்கலாம்'' என்று விடை கொடுத்தாள்.

வண்டி வெகுதூரம் சென்ற பிறகு பிளாட்பாரத்தில் தேவிகா நின்று கொண்டு கையை அசைப்பது தெரிந்தது. எவ்வளவோ நினைவுகளை நெஞ்சில் சுமந்தவாறு ரங்கமணி, ரயில் வண்டியின் வாசற்கதவு பக்கத்திலேயே நின்று கொண்டு தூரத்தில் மங்கலாகத் தெரிந்த தேவிகாவின் உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

திருநெல்வேலி ஜங்ஷன் ரயில்வே ஸ்டேஷனில் ரங்கமணி வந்து இறங்கியபோது, அவன் மனம் பரபரப்படைந்திருந்தது. மூன்று வாரங்கள்தாம் என்றாலும் மூன்று வருஷங்கள் வெளியூரில் இருந்த மாதிரி ஒரு பிரமை தட்டியது. திருநெல்வேலி மண்ணை மிதித்த போது அவனுடைய உற்சாகத்துக்கு அளவில்லை. எத்தனையோ ஆண்டுகளாக வெளிநாட்டில் இருந்துவிட்டுத் தாய்நாடு திரும்புபவன் சுற்றுமுற்றும் ஆசையோடு பார்ப்பது போல் பார்த்தான். சொந்த ஊர், சொந்த ஜனங்கள், சொந்தச் சூழ்நிலை இவைகளுக்கு ஒரு தனி சக்தி இருக்கிறது. மனிதன் பூனையைப் போன்றவன்தான். பழகிய இடத்தை எளிதில் மறந்துவிட மாட்டான். அவனுடைய நினைவும், ஆசையும், பழகிய மண்ணையே சுற்றிச் சுற்றி வரும். டில்லியில் அவனுக்குப் பொழுது நன்றாகக் கழிந்தாலும் தாமிரபரணிக் கரையின் நினைவு அவனை விட்டு அகன்றதா என்ன? இப்போது ஜங்ஷன் பிளாட்பாரத்தில் கால் வைத்தபோது அவன் அடைந்த ஆனந்தத்துக்குத்தான் அளவேது? எல்லாவற்றுக்கும் மேலாகச் சர்தார் சொக்கலிங்கம்பிள்ளையைச் சந்திக்கப் போகிறோம் என்ற உணர்வுதான், அவனுடைய பரபரப்புக்கு மூலகாரணம். சர்தாரைப் பற்றிய இரகசியத்தைத் தெரிந்து கொண்ட பிறகு அவரிடம் அவனுக்கு ஏற்பட்டிருந்த மரியாதைக்கும், பக்திக்கும் அளவில்லை. அவனுடைய மன அளவில் மிக உயர்ந்துவிட்ட சர்தாரை உடனே காணத் துடித்தான்.

அவனை வரவேற்க ஸ்டேஷனுக்குச் சோமு வந்திருந்தான். அவனைக் கண்டதும் ரங்கமணிக்கு உற்சாகம் தாங்கவில்லை. சோமுவின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டான்.

''என்ன சௌகரியமாயிருந்ததா?'' என்று சோமு விசாரித்தான். ரங்கமணி தலையை ஆட்டினான்.

''சீக்கிரம் அச்சாபீசுக்குப் போவோம். ஐயா உனக்காகக் காத்திருப்பார்கள். போன காரியம் எப்படி?''

''பாதி வெற்றி !''

''அப்படியென்றால்?''

''பாதிச் சாமான் கிடைத்திருக்கிறது. மற்றப் பாதி ஆகஸ்டு மாதம் பம்பாயில் கிடைக்குமாம்'' என்றான் ரங்கமணி.

ஒரு குதிரை வண்டியில் ஏறிக் கொண்டு புறப்பட்டார்கள். அப்போது மாலை ஐந்து மணி இருக்கும்.

திருநெல்வேலி ஜங்ஷன் கடைத்தெருவில் வழக்கத்துக்கு மாறாகக் கூட்டம் இருந்தது. மக்கள் கூட்டம் கூட்டமாக மீனாட்சிபுரம் மைதானத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

''என்ன விசேஷம்?'' என்று ரங்கமணி கேட்டான்.

''ஆறு மணிக்கு மீனாட்சிபுரம் மைதானத்தில் பொதுக்கூட்டம் நடக்கப் போகிறது. திரிவேணி பேசப் போகிறான்'' என்றான் சோமு.

''எதற்காகப் பொதுக்கூட்டம்?''

''கிரிப்ஸுக்குக் கண்டனம் தெரிவிக்கத்தான்.''

அச்சாபீசுக்குப் போய் விட்டுத் திரும்பும் போது திரிவேணியின் பேச்சைக் கேட்கவேண்டும் என்று முடிவு செய்து கொண்டான் ரங்கமணி.

சர்தார் சொக்கலிங்கம்பிள்ளையிடம் ரங்கமணி பெட்டியை ஒப்படைத்தபோது

சர்தார் உற்சாகத்துடன் அவன் முதுகில் தட்டினார்.

''மந்திரம்! இந்தப் பெட்டியைத் திறந்து பார். பாதி தான் கிடைத்திருக்கிறது'' என்று கூறி ரங்கமணி கொண்டு வந்திருந்த பெட்டியை மந்திரத்திடம் நீட்டினார் சர்தார். மந்திரம் பெட்டியைத் திறந்தான். உள்ளே ரேடியோ ஒலிபரப்பிக் கருவிக்கான நுணுக்கமான பொருட்கள் இருந்தன. கருவியை எவ்விதம் பொருத்தி அமைக்க வேண்டும் என்பதை விளக்கும் ஒரு படமும் இருந்தது. மந்திரம், சாமான்களைச் சரி பார்த்து விட்டு மீண்டும் பெட்டியை மூடினான்.

''இன்னும் முக்கியமான நான்கு சாமான்கள் பாக்கி. அவைகளும் கிடைத்துவிட்டால் எல்லாவற்றையும் நாமே இணைத்துக் கொள்ளலாம்'' என்றான். பெட்டியை வாங்கிப் பாதாள அறையைத் திறந்து உள்ளே பத்திரமாக வைத்தார் சர்தார். பிறகு டில்லியில் நடந்த மற்ற விஷயங்களைப் பற்றிய விவரங்களை ரங்கமணியிடம் கேட்டார். ரங்கமணி எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னான். ஜப்பானில் இந்திய தேசிய ராணுவம் உருவாகி விருப்பதைப்பற்றி அவன் சொன்ன போது, எல்லாரும் உற்சாகத்தால் ஆரவாரம் செய்தார்கள்.

''நம்மால் இயன்ற அளவு சுதந்திரப் படைக்கு ஆட்களைச் சேர்க்க வேண்டும். இந்திய தேசிய ராணுவம் இந்தியாவில் நுழையும்பொழுது நாமும் தயாராக இருக்க வேண்டும். ரேடியோக் கருவி முழுவதையும் ரங்கமணி கொண்டு வந்திருந்தால் உடனுக்குடன் இரகசியத் தொடர்பு கொள்ள வசதியாக இருந்திருக்கும். மந்திரம், இந்தக் கருவிக்கு வேண்டிய சாமான்கள் முழுவதும் வந்து விட்டால் நாம் ஜப்பானுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியுமா ?'' என்று கேட்டார் சர்தார்.

''முடியும். நாம் ஒலி பரப்புவதை ஜப்பானிலிருப்பவர்கள் கேட்க முடியும். எந்த அலை வரிசையில் நாம் ஒலிபரப்பவேண்டும் என்பதைப் பாக்கிக் கருவிகளும், அதற்கான விளக்கப் படமும் வந்த பிறகு தான் நிர்ணயிக்க முடியும். அந்த அலைவரிசையைப் பற்றிய இரகசியத்தை முதலில் ஜப்பானுக்குத் தெரிவித்துவிட வேண்டும். அது நம்மால் முடியுமா?'' என்று கேட்டான் மந்திரம்.

''அதில் கஷ்டம் ஒன்றுமில்லை. ரவீந்திர சென் குப்தா அதைச் செய்து விடுவார் '' என்றார் சர்தார் சொக்கலிங்கம் பிள்ளை.

அச்சகத்தை விட்டு ரங்கமணி புறப்பட்டபோது இரவு மணி ஏழாகிவிட்டது. அவன் ஊரிலிருந்து வந்து விட்டதாக வீட்டுக்குப் போன் செய்தார் சர்தார். ரங்கமணி தன்னுடைய தோல்பெட்டியைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு விரைந்தான். வழியில் மீனாட்சிபுரம் மைதானத்தில் கூட்டம் அலை மோதிக் கொண்டிருந்தது. பெட்ரோமாக்ஸ் விளக்குகளின் ஒளி பல இடங்களில் சிதறிக் கிடந்தது. மைதானத்தின் பக்கத்தில் வந்ததும் ரங்கமணி ஓர் ஒதுக்கமான இடத்தில் மரத்தடியில் நின்று கொண்டு அங்கு நடந்த கூட்டத்தைக் கவனித்தான்.

(தொடரும்)





'மணலின் வழி', 'பொற் பார்வை', 'பனிப் பாடல்', 'நம்பிக்கை விதைகள்' 'நகரின் முகம்'', 'நடமிடும் மழைத் துளிகள்'—இவையெல்லாம் ஏதோ நல்ல நாவல்களின் தலைப்புக்களோ என்று நினைக்காதீர்கள்! சென்ற மாதம் 7ந் தேதியிலிருந்து 14ந் தேதிவரை சென்னை மாவட்ட மத்திய நூலக ஹாலில் நடைபெற்ற இந்திய நவீன பாணி ஓவியக் கண்காட்சியில் இடம் பெற்றிருந்த சில படங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த தலைப்புக்கள்தான் மேலே இருப்பவை. தலைப்புக்களைப் போலவே அந்தக் காட்சியில் இடம் பெற்றிருந்த முப்பத்தியொரு படங்களுமே நவீன பாணி ஓவிய ரசிகர்களுக்கு நல் விருந்தாக அமைந்திருந்தன. இந்தச் சித்திரங்களை வரைந்த ஸ்ரீமதி மாலதி வரதராஜன் அவர்களின் கற்பனைத் திறனையும் கைவண்ணத்தினையும் பாராட்டிப் பேசினார், காட்சியைத் திறந்து வைத்த தலைமை நீதிபதி திரு அனந்தநாராயணன் அவர்கள். தம் கற்பனை வழிப்படி, இந்திய கலாசாரத்தை விட்டு விலகாமல் நவீன பாணி ஓவியத்தில் தமக்கென ஒரு தனிப் பாதையை வகுத்துக் கொண்டுள்ள ஸ்ரீமதி மாலதி வரதராஜன் ஓவியக் கல்லூரிக்குச் சென்று பயிலாதவர். ஓவியம் இவருக்குத் தானாகவே கைவந்ததொரு கலை. இதை மனத்தில் கொண்டு இவர் ஓவியங்களைப் பார்த்தோமானால், வண்ணங்கள் இவரிடம் எப்படியெல்லாம் விளையாடியிருக்கின்றன என்பதைக் காணலாம். மஞ்சளும் பச்சையும் இவரால் லாகவமாகக் கையாளப்பட்ட வர்ணங்கள்.

சிம்லாவில் என் நண்பர் இல்லத்தில் சில நாட்கள் தங்கியிருந்தேன். அப்பொழுது அவர், "நான் இன்னும் இரண்டு நாட்களில் சுமார் ஐந்நூறு மைல் தூரத்தில் இருக்கும் இமயமலைச் சாரலில் ஒரு காட்டுப்பாங்கான இடத்துக்கு 'லோடு' எடுக்கப் போகிறேன். அங்கே பல மலை ஜாதியார்கள் வாழ்கிறார்கள். ஒவ்வோர் இனமும் ஒவ்வொரு கதையைக் கூறுகிறது" என்றார்.

நானும் அவருடன் இமயமலைச் சாரலுக்கு லாரியில் பிரயாணமானேன். "அந்த இமயமலைச் சாரலில் அடிக்கடி லாரி ஓட்டிச் செல்பவர்கள் ஒன்றாகக் கூடுமிடம் வழியில் இருக்கிறது. அங்கு இரண்டு மூன்று நாட்கள் தங்கினால் போதும், எல்லா லாரி டிரைவர்களையும் சந்தித்துப் பேசி விடலாம்" என்று நண்பர் கூறினார்.

அங்ஙனம், 'லாரி சென்டரில்' பேசிக் கொண்டிருக்கும்பொழுது அந்த லாரி ஓட்டிகளின் கூட்டத்தில் இருந்த ஒருவர் தும்மினார். உடனே தும்மினவர்


வடக்கெல்லையில் இமயமலைச் சாரலில் வசிப்போராயினும் சரி, தென் முனையில் கேரள நாட்டில் வாழ்வோராயினும் சரி, ஆதிவாசிகள் கல்யாண விஷயத்தில் பல நூதன பழக்க வழக்கங்களைக் கொண்டுதானிருக்கிறார்கள்.




அதே இடத்தில் நின்று ஒரு சுற்றுச் சுற்றியபின் மறுபடியும் உட்கார்ந்தார். நான், அவர் அப்படிச் செய்ததும் உடனே அதைப் பற்றிக் கேட்டேன். இப்படிச் செய்வதால் தும்மலின் அபசகுனம் மாறிவிடுகிறது என்றார் அவர்.

இந்த இமயமலைவாசிகளிடம் பல அதிசயமான திருமணங்கள் நடைபெறுகின்றன. "பிகோரியா ஹாத்" என்ற பெயரில் வாலிபப் பெண்களும் ஆண்களும் ஒருகூட்டம் கூடுவார்கள். அக்கூட்டம் கூடுமிடத்தைக் கண்டால் பருவமடைந்த ஆண்களையும் பெண்களையும் விற்பனை செய்யும் பண்டைக்கால அடிமைச் சந்தையோ என்று நான் எண்ணம் உண்டாகும். திருமணமாகாத கிழவிகளும்கூடச் சிறு பெண்களைப்போல் அலங்கரித்துக் கொண்டிருப்பார்கள். அங்கே ஆண்களும் பெண்களும் கூடி விளையாடிக் கும்மாளமடிப்பார்கள். ஓர் ஆணுக்கு ஒரு பெண் பிடித்து விட்டால் உடனே அவன் தன்னிடமிருக்கும் வர்ணப்பொடியால் தன் காதலியின் நெற்றியில் திலகமிடுவான். அவளும் அவனைக் காதலித்தால் அந்தச் சம்மதத்தைக் காட்ட அவன் நெற்றியில் திலகமிடுவாள். அவள் திலகமிட்டதும், அவள் கையில் முத்தமிட்டு அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு பக்கத்திலிருக்கும் காட்டில் மறைந்து விடுவான். இரண்டு மூன்று நாட்கள் ஆகாரமில்லாமல் அப்படியே கழிப்பார்கள். "ஆகாரமில்லா விட்டாலும் நீ என் பக்கத்தில் இருந்தால் போதும்" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்வார்களாம்!

கடைசியில் தங்கள் பெற்றோர்களிடம் வந்து நடந்த செய்தியைக் கூறி ஒருவருக்கொருவர் சக்திக்குத் தகுந்தாற்போல் பணம் மாற்றிக் கொள்வார்கள். பணம் மாற்றுவதுதான் திருமணம் செய்வதைப் போலாகுமாம். ஒரு லாரியோட்டி இந்தப் பழக்கத்தைப் பற்றிக் கூறியதும் நான் தென் இந்தியாவில் கேரள நாட்டில் நிலவும் ஒரு பழக்கத்தை-





பகோரியா ஹாத்

பிலோ இருதய நாத்

விவரித்தேன். ''பருவமடைந்த மங்கையைத் திருமணம் செய்து கொள்ள முறையுள்ளவர்கள் சில சமயங்களில் போட்டா போட்டி இடுவதுண்டு. இந்தப் போட்டி ஒருவருக்கொருவர் கொலையில் கொண்டு போயும் விடுவதுண்டு. இந்தச் சிக்கல்கள் உண்டாகாமல் பெண்ணின் பெற்றோர் என்ன செய்வார்கள், தெரியுமா?

''ஆண்டவன் சுயம்வரம் என்ற பெயரில் ஒரு பெரிய குடிசை கட்டுவார்கள். அந்தக் குடிசையின் உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் எப்படிப் பார்த்தாலும் சரி, ஒரு சிறிய துவாரம்கூடத் தெரியாது. அந்தக் குடிசையின் உள்ளே நல்ல நாள் பார்த்து மணப் பெண்ணை மத்தியில் உட்கார வைத்து விடுவார்கள். அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பும் வாலிபர்கள் எல்லோரும் தங்கள் கையில் ஒரு குச்சியுடன் குடிசையைச் சுற்றி ஓடி வருவார்கள். கடைசியில் குடிசைக்குள் இருக்கும் பெண்ணின் தகப்பனார் ஏதாவது ஒரு சைகை காட்டியதும் குடிசையின் வெளியில் சுற்றி வரும் வாலிபர்கள் தங்கள் கையிலிருக்கும் நீண்ட குச்சிகளை, அந்த மணப் பெண் உட்கார்ந்திருக்கும் குடிசைக்குள் செருகுவார்கள். 'உள்ளே இருக்கும் பெண் உடனே காட்டுத் தேவியை நினைத்துக் கொண்டு தன் கண்களை மூடிக்கொண்டு ஏதாவது ஒரு குச்சியைப் பிடித்து உள்ளே இழுத்துக் கொள்ளுவாள். இக்காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த பெண்ணின் தகப்பனார் குடிசையின் உள்ளே குச்சியைக் கொடுத்த வாலிபனின் கையைப் பிடித்துக் கொண்டு போய்ப் பெண்ணிருக்கும் குடிசையின் கதவைத் திறந்து, ''அம்மா! இதோ, உனக்காக ஆண்டவன் கொடுத்த ஆண் துணை'' என்று அறிமுகப்படுத்துவார். பிறகு ஒரு நாளைக்குத் திருமணமாகும்.''

இமயமலைப் பகுதியில் வாழும் லாரி ஓட்டிகள் — தென் இந்தியாவையே பார்த்தறியாதவர்கள் — இதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்தனர்.



பலனைப் பொறுத்தவரை எல்லா தலைவலி மாத்திரைகளும் ஒன்றுதான் என்பது உங்கள் எண்ணமானால், நீங்கள் அவேதன் சாப்பிட்டுப் பார்த்திருக்க மாட்டீர்கள்



அற்புத 'எபேப்'* அடங்கிய அவேதன் துரிதமாக, தீமையற்ற, நிச்சயமான நிவாரணத்தை அளிக்கிறது

'எபேப்' அடங்கியிருப்பதனால், அவேதன், நோவுகளையும், வலிகளையும் உடனடியாக விரட்டியடிக்கும் விசேஷ குணத்தைப் பெற்றிருக்கிறது. அவேதனில் அடங்கியுள்ள 'எபேப்' சில நிமிடங்களில் செயல் புரிகிறது—உடனடியாக நிவாரணமளிக்கிறது! அவேதன், ஒரு விதமான தீமையுமற்ற தலைவலி மாத்திரையாகத் திகழ்வதற்குக் காரணம் 'எபேப்'தான்—இதனால் கெடுதலான விளைவுகள் எதுவும் ஏற்படுவதில்லை. துரிதமான, தீமையற்ற, நிச்சயமான நிவாரணத்திற்கு—அற்புத 'எபேப்' அடங்கிய அவேதன்!

தலைவலி, பல்வலி, முதுகுவலி, தசைநார்களில் வலி, ஜலதோஷம், ஃப்ளூ முதலியவற்றிலிருந்தும், இதர சாதாரண வலிகள் மற்றும் நோவுகளிலிருந்தும், பெண்களின் அசௌகரியமான தினங்களிலும், துரித நிவாரணம் பெற,



அவேதன்®

சாப்பிடும்படி டாக்டர்கள் சொல்லுவதில் வியப்பென்ன !

சாப்பிடும் அளவு: 1—2 டேப்லெட்டுகள்

* என்-அஸெடில்-பி-அமினோ:ஃபெனால்

SQUIBB ஸாராபாய் கெமிகல்ஸ்

® இ. ஆர். ஸ்க்விப் & ஸன்ஸ் அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க். காம்சந்த் பிரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க லைசென்ஸ் பெற்றவர்கள்.

Shilpi SC. 46/67A Tam.





விமானத்துக்கான இந்திய என்ஜின் சர்வீஸ் ஸ்டேஷனை மீனம்பாக்கத்தில் தமிழக முதன் மந்திரி திரு அண்ணாதுரை தொடங்கி வைத்தார்.

திருவல்லிக்கேணி தேசிய உயர்தரப் பெண்கள் பாடசாலையின் வெள்ளி விழா, கவர்னர் உஜ்ஜல்சிங் தலைமையில் நடந்தது. ஸ்தாபகர் திரு திருமலாச்சாரியாருக்குக் கவர்னர் பொன்னாடை வழங்குகிறார்.

குடந்தையில் நடைபெற்ற தமிழ்நாடு வர்த்தகக் கழக பதினொன்றாவது மாநில மாநாட்டில் திரு ம. பொ. சி. உரையாற்றுகிறார்.

□ ■ □

ஜஸ்டிஸ் கே. வீராசாமி அவர்களைத் தலைவராகக் கொண்ட 'அடையாறு கல்சரல் அஸோஸியேஷன்' ஆரம்ப விழாவில் கவர்னர் உஜ்ஜல்சிங் உரையாற்றுகிறார். இவ்விழாவில் ஸ்ரீமதி எம். எல். வஸந்தகுமாரியின் கச்சேரி நடைபெற்றது.







மணக்கோலம்

மூன்றாவது பரிசு நாவல்

அத்தியாயம் 19

"ரகுபதி அந்தப் பெண்ணை அழைத்து வந்து வைத்துக் கொள்ளவில்லையா?" என்று கேட்டான் சந்தானம்.

"ஊஹூம். அப்பா செத்த போது, அவள் நிறைகர்ப்பிணி. பிறந்த வீட்டிலிருந்து அவ ளெம் பறதுக்குள் இவனுக்கு ரொக்கமும் வீடும் கிடைத்து விட்டன. என்னென்னவோ சால்ஜாப்புகளோ சொல்லித்தட்டிக் கழித்தான். அவளும் இலவுகாத்த கிளி மாதிரி, அவன் மாதா மாதம் அனுப்பி வைத்த ஐம்பது ரூபாய் மணியார்டரில் கையெழுத்துப் போட்டுக்கொண்டே காத்துக் கொண்டிருந்தாள். ஏழைப் பெண்.... தைரியமில்லை..... அப்பாவுக்கு வைதிகத் தொழில். என்ன செய்வார்? கோர்ட்டு கீர்ட்டுன்னு ஏறிக் கொண்டிருந்தால், இருக்கிற அமாவாசை வரும்படி கூடப் போய்விடும்."

"நீ போய் அழைத்துக் கொண்டு வந்து விட்டாய்!" என்று ஆச்சரியமும் ஆனந்தமும் ததும்பச் சந்தானம் சேஷன் முதுகில் தட்டினான்.

"எனக்குக் கூட நடுவே ஓர் எண்ணம் உண்டாச்சு. பழைய கலியாணத்தை முகாந்திரமாக வைச்சண்டு, இந்த ரகுபதியை நம்ம கைக்குள்ளே போட்டுண்டு விடலாமான்னு. ஆனா, சீதாவை அன்னிக்குப் பார்த்தபோது எனக்கே, என்னை அறியாமல் ஒரு பச்சாத்தாபம் பிறந்தது. இங்கே ஓர் ஏழைப் பெண் நரகத்திலே விழப் போகிறாள். அங்கே, ஊரிலே ஒரு பெண் ஏற்கனவே விழுந்து வேதனைப்படுகிறாள். இரண்டு பேரையும் ஒரே சமயத்தில் காப்பாத்தினால் என்னன்னு தோணித்து!"


"சேஷன், உன்னால்தான் ரெண்டு பேருக்குமே புது வாழ்க்கை கிடைக்கிறது...."

"எனக்கு அந்தப் பெண் சாரதாவுக்குப் புது வாழ்வு கிடைக்கும்னு தோணலே. அவளை இனிமேல் ரகுபதி ஏறெடுத்துப் பார்க்க மாட்டான். அவளுக்கும் வெறுப்பும், விரக்தியும் வந்தாச்சு. ஏற்கவும் மாட்டாள். தன் பிள்ளைக்கு ஏதாவது சொத்திலே பங்கு கிடைச்சால் அதை வச்சுண்டு அவனை நன்றாகப் படிக்க வைக்கலாமே என்கிற ஆசைதான் அவளுக்கு. அவளுடைய இந்த ஆசையையும் உபயோகப்படுத்திக்கொண்டுதான் அழைச்சண்டு வந்திருக்கேன்..."

"அந்தப் பிள்ளைக்குச் சொத்தை வாங்கிக் கொடுக்கிற பொறுப்பு இனிமேல் உன்னையும் என்னையும் சேர்ந்ததாகிவிட்டது. வக்கீல் ஃபீஸ், கோர்ட் செலவு எல்லாம் நான் தரேன். ஆமாம், அவர்கள் இப்பொழுது எங்கே இறங்கியிருக்கிறார்கள்?"

"நான் இருக்கிற இடத்துக்குப் பக்கத்திலேயேதான். ஒரு அய்யங்கார் இருக்கிறார்... ரொம்ப நல்லவர்... இரண்டு நாள் தம் வீட்டில் தங்க அனுமதி கொடுத்தார்...."

"நீ செய்திருக்கிற இந்தப் புண்ணிய காரியத்துக்கு நானும் சரி, சீதாவும் சரி,



என்ன கைம்மாறு செய்தாலும் போறுது. சேஷா... நீதான் ரியல் ஹீரோ!''

''நீங்கள் என்னை ரொம்பப் புகழ்கிறீர்கள், ஸார்!''

''நோ, நோ.... சத்தியமாகச் சொல்கிறேன்.! என்கிட்டே ஒன்றுமே சொல்லாமல், வெளியே சாது மாதிரி தலையைத் தலையை ஆட்டி என்னைக் கடைசியிலே ஸ்தம்பிக்க வைத்துவிட்டாய். பலே!''

''ஸார், எனக்கு இன்னிக்கு மூணு மணிக்குப் போக அனுமதி தரணும்..''

''அனுமதி இல்லாமலேயே இன்னிக்கு நீ எப்போது வேண்டுமானாலும் போகலாம்.... நானும் போய் எல்லாவற்றையும் இப்போதே சொல்லிவிட்டு வருகிறேன்.''

''நோ பிளீஸ்... கூடவே கூடாது. நீங்க சொன்னப்புறம் அகஸ்மாத்தாக அலமேலு அம்மா அங்கே வந்து அவளுக்கும் தெரிஞ்சு போனா, ரகுபதி மெட்ராஸை விட்டே போய் விடுவான். கொஞ்ச நாட்களுக்கு மறைந்து இருக்கலாம் என்று. என் திட்டம் குலைந்து

பி.வி.ஆர்

போய்விடும். சாரதாவுக்கும் அதிலே பிரயோசனமில்லாமல் போய்விடும்!''

''ஆமாம். நீ சொல்றதும் சரிதான்.''

''நீங்கள் நாலரை மணிக்கே போங்கள். நான் வரும் வரையில் ஒன்றும் தெரியாதது போல் இருங்கள்.''

''அதுதான் நல்லது! சாரதாவையும் அந்தப் பிள்ளையையும் ரயிலேத்திக் கூட்டிக் கொண்டு வந்திருக்கியே, அதற்கான செலவுகளுக்கெல்லாம் என்ன ஆச்சுன்னு சொல்லு .... உன் கையிலிருந்து காலணா செலவாகப்படாது.''

''அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம், சார்.''

சேஷன் போய்விட்டான்.

அவனை, உள்ளமெல்லாம் பிரமிப்பும், பெருமையும், நிரம்பப் பார்த்துக்கொண்டேயிருந்தான் சந்தானம்! சீதாவின் வாழ்க்கைப்



பாதையையே அல்லவா அவன் திசை மாறச் செய்து விட்டான்? இதற்கு, சேஷனுக்குக் கனகாபிஷேகம் செய்தால் கூடப் போதாது.

வெகு நேரம் வரையில் சந்தானம் அன்று கிடைத்த ஆனந்த அதிர்ச்சியிலேயே மூழ்கி யிருந்தான். தன் வாழ்க்கையிலேயே மகத்தான வெற்றி ஒன்று கிடைத்துவிட்டதாக அவன் பூரித்துப் போனான்.

ஃ ஃ ஃ

நாலரை மணிக்குச் சந்தானம் வீட்டை அடைந்தபோது, பெட்டிகள், கூடைகளுடன் படுக்கைகளும் கிடந்தன. கமலா தலை வாரிக் கொண்டிருந்தாள். சந்தானத்தைப் பார்த்ததும், ''எல்லாம் தயார்!'' என்று சொல்லிச் சிரித்துவிட்டு, ''ஜானு, சந்தானம் சார் வந்தாச்சு!'' என்று இரைந்தாள்.

''இதோ வரேனடீ..... ஏன் இப்படிக் கத்தறே?''

அடுத்த நிமிடம் ஜானு, ஒரு பொட்டலத்துடன் அவனை நோக்கிப் புன்முறுவல் பூத்துக் கொண்டே வந்தாள்.

''இந்தாருங்கள். என் அக்காவான சீதாவின் கல்யாணத்தை உத்தேசித்து என் அம்மாவான பாகீரதி அம்மாளின் ஆக்ஞைப்படி வாங்கிய ஒரு ஜோடி வேஷ்டியும், ஒரு டெரிலின் ஷர்ட்டும்! இதை நான் பணிவன்புடன் சமர்ப்பிக்க, தாங்கள் தயைகூர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்!''

''ஜானு, நீ போஸ்டாபீஸை விட்டு விட்டுச் சினிமாவுக்கு டயலாக் எழுதப் போ.....!''

சந்தானம் சிரித்துக் கொண்டே, பொட்டலத்தை வாங்கிக் கட்டை அவிழ்த்தான்.

''என்னுடைய ஷர்ட்டின் அளவு எப்படித் தெரிந்தது?''

''ஏன், உங்க அறை முழுவதும் அது தானே இறைஞ்சு கிடக்கிறது? ஒண்ணைக் கையிலே எடுத்துண்டு போனேன்! கலர் எப்படி? நன்னாயில்லே?''

''பிரமாதம்!'' — சொன்னவன் பிரித்துப் பார்த்துவிட்டு, மீண்டும் மடித்து விட்டு, ''நான் இதையெல்லாம் என்னிக்குப் போட்டுக் கொள்ளணும்?'' என்று கேட்டான்.

''இதென்ன அசட்டுக் கேள்வி!... நாளன்னிக்குத்தான்.''

''முடியாது. நான் இன்னிக்குச் சாயங்காலம் சரியா ஐந்தரை மணிக்குப் போட்டுக் கொள்ளப் போகிறேன். அது சரி, இன்னிக்கு நமக்கு ரொம்ப வேண்டப்பட்டவர்கள் இரண்டு மூணு பேர் வருவார்கள். அவர்கள் வந்தால் காப்பி பலகாரமெல்லாம் கொடுக்கணும்... என்ன?''

''வரப் போகிறவர்கள் யார்?''

''இப்போ மணி நாலே முக்கால். இன்னும் கால் மணி நேரம் பொறு!''

ஐந்து அடிக்க இன்னும் சில நிமிஷங்களே இருந்தன. அப்போது காப்பியைக் குடித்துக் கொண்டிருக்கையில் பாகீரதி அம்மாள் வந்தாள்.

''நீயும் வந்துவிடேன்!'' என்றாள் அவள் சந்தானத்திடம்.

பல நாட்களுக்குப் பிறகு சாந்தமாகப் பேசும் அவளைப் பார்த்து அவன் சிரித்தான். அவளுடைய சாந்தத்துக்குக் காரணம், தன் லட்சியம் பூர்த்தியாகிறது என்கிற எண்ணம் ஒன்றுதான் என்று சந்தானத்துக்குத் தெரியும்.

ஆனால் பாகீரதிக்கு அவனுடைய சிரிப்பின் அர்த்தம் புரியவில்லை.

திடீரென்று ஒரு கார் வரும் சத்தம் கேட்கவே, அவன் சொன்னான்: ''நீங்களே கல்யாணத்துக்குப் போகப்போற தில்லே..... இரண்டாவது தடவையாகச் சீதாவின் கல்யாணம் தடைப்படுகிறது! ஆனால் இது நல்லதற்குத்தான்!''

அவனுடைய குரல் நாராசமாகப் பாகீரதியின் காதில் விழ, அவளுடைய தலை சுற்றியது. அருகே நின்ற சீதா, திடுக்கிட்டுப் போய், சுவரில் சாய்ந்து கொண்டாள். ஜானு ஒன்றும் புரியாமல் விழித்தாலும், அவ்விழிப்பில் ஏதோ ஒரு திருப்தி ஒளி வீசியதைக் கண்டு கொண்டான் சந்தானம். கமலா திறந்த வாய் மூடாமல் நின்றாள்.

பாகீரதி தன்னைத்தானே சமாளிப்பதற்குள் வந்து கொண்டிருந்த கார் வீட்டு வாசலின் முன் நின்றுவிட்டது. அலமேலுதான் அவசரமாக வருகிறாளோ என்று பாகீரதி, உள்ளம் துடிக்க, சந்தானத்தை எரிப்பதுபோலப் பார்த்துக் கொண்டே காத்திருந்தாள்.

சேஷன் முன் ஸீட்டிலிருந்து இறங்க, மாதரசி ஒருத்தியும், பதினாலு வயதுப் பையன் ஒருவனும் பின் ஸீட்டிலிருந்து இறங்கி நின்றார்கள்.

திகைப்பும் ஆச்சரியமும் கலந்த உணர்ச்சிகள் பாகீரதியைக் கட்டிப் போட்டன.

''யார் இவர்கள்?'' என்று அவளுடைய குரல் தீனமாகக் கேட்டது.

''சார்! சேஷன் இப்போது எதற்கு வருகிறார்?'' என்று கேட்ட ஜானு ரேழிப் பக்கம் போனாள்.

''நீ இங்கேயே இரு, ஜானு!'' என்றான் சந்தானம். சிறிது நடந்தவன்

டிரேயான்ஸ் டிரேயோபேன் உறுதியானது
பொருள்களுக்கு கவர்ச்சியளித்து பாதுகாக்கின்றது.
எழுத்துக்கள் தெளிவாகவும்,
மறையாமலும் அச்சடிக்க
உகந்தது.



எல்லா விதத்திலும் சிறந்த
TRAYONS டிரேயான்ஸ்
டிரேயோபேன்
உங்கள் பொருள்களை
பாதுகாக்க தேவையானது.

உங்கள் பொருள்களை பாக் செய்யும் ஒவ்வொரு
பிரச்சினைக்கும் ஒவ்வொரு டிரேயோபேன் உள்ளது.
துணிகள், சோப், பவுடர், பருப்பு வகைகள்
இவைகளுக்கு சாதாரண டிரேயோபேன், மிட்டாய்கள்,
உலர்ந்த கனிகள், மருந்து வகைகள் இவைகளுக்கு
ஈரம் புகாத டிரேயோபேன். வாசனை திரவியங்களுக்கும்
மில் துணிகளுக்கும் பல வண்ணங்களில் கிடைக்கும்
டிரேயோபேன். மிட்டாய்களையும், ரொட்டி போன்ற இதர
பண்டங்களை சுற்றுவதற்கு 'டிவிஸ்ட்-ராப்'
டிரேயோபேன் உள்ளது.

மற்ற விபரங்களுக்கு:
ரேயான் டிரேடர்ஸ் பிரைவேட் லிமிடெட்
61, செம்புதாஸ் தெரு சென்னை-1 Phone 21641
Grams: 'CELYARN' கிளைகள்: P.B.No 253. சேலம்
P.B.No. 154. மதுரை P.B.No. 1372. கோயமுத்தூர்

RT/4066


இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை பாரகன் · அகஸ்தியா (70MM)
மகாலட்சுமி · ஜெயராஜ்
K.V.S. அளிக்கும் அய்யா பிலிம்ஸ்
கதை · அரங்கண்ணல் M.L.A.
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
தயாரிப்பு
அண்ணாமலை · அருணாசலம்

'சட்'டென்று நின்று விட்டு, மெதுவாகத் திரும்பி வந்தான்.

நிதானமாக முன்னேறி வந்த சேஷன் "சாரதா, வா! பயப்படாதே.... இங்கே இருக்கிறவர்கள் தங்கமான மனுஷான்தான். டேய், கோபு வாடா, அப்புறம் தெருவிலே பம்பரம் விளையாடறதைப் பார்க்கலாம்" என்றான்.

எல்லாரும் வாயடைத்து நிற்க, கூடத்தை அடைந்ததும் சேஷன், "முதல்லே அந்த மாமிக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணு!" என்றான்.

சாரதாவும் பாகிரதியை நமஸ்காரம் பண்ணினாள்.

"நீ யாரு தெரியலையே!" என்றாள் பாகிரதி, ஆசிர்வாதம் செய்யவும் தோன்றாமல்.

"மாமி! நான் இந்தச் சமயத்திலே வந்து, இவளையும் அழைச்சுண்டு வந்து நிக்கறதுக்கு மன்னிப்புக் கேட்க மாட்டேன். வராமல் போயிருந்தால்தான் கேட்க வேண்டியிருக்கும்" என்ற பீடிகையுடன் ஆரம்பித்த சேஷன், "இந்தப் பெண் இருக்கிறாளே, இவள் எங்க ஊர்ப் பெண். சிவராம கனபாடிகள் என்பவரின் பெண். அது இவளுடைய பிள்ளை. கோபால கிருஷ்ணன்னு பேரு. இந்தப் பிள்ளையோட தகப்பனார், இவளை நிர்க்கதியாக விட்டு விட்டுப் போய்ப் பதினைலு வருஷங்களாகின்றன. அதாவது இந்தப் பையனோட வயசாகிறது...."

திடீரென்று பாகிரதியின் உள்ளத்தில் ஒரு பயப் கவ்வியது.

ஆனால் அவளுடைய மன எழுச்சிகளையோ சீதாவின் உணர்ச்சிகளையோ லட்சியம் செய்யாமல், சேஷன் தொடர்ந்தான்:

"இந்தப் பிள்ளையின் அப்பாவுக்கு நாளன்னிக்குக் கல்யாணம்னு கேள்விப்பட்டேன். அது நடக்கறதுக்கு முன்னாலே இவளுக்கு ஒரு கதியும் வழியும் வேணும்.... அதுக்குத்தான் நாங்க வந்திருக்கிறோம்."

பாகிரதியின் தலை சுற்றியது. நிற்க முடியாமல் அவள் 'தொப்'பென்று உட்கார்ந்தாள். சீதா திடுக்கிட்டுப் போய் அருகே இருந்த முக்காலியில் அமர்ந்து கொண்டாள்.

"இவர்களுக்குத்தான் காப்பி பலகாரம் வேணும்னு சொன்னீர்களா?" என்று நிலைமையைச் சமாளித்துக் கொண்டே ஜானு கேட்டுவிட்டு, "முதலிலேயே உங்களுக்குத் தெரியும் இல்லையா?" என்று சந்தானத்தைப் பார்த்துக் கேட்டாள்.

"மிஸ் ஜானு! அவருக்கே இன்னிக்குத்தான் தெரியும். நான் வர்றதுக்கு முன்னாடி சொல்ல வேண்டாம்னு கேட்டிண்டிருந்தேன். அதுதான் சொல்லவில்லை."

"அப்பாடி!" என்று பெருமூச்சு விட்ட ஜானு, "பையா, உன் பேரு என்ன?" என்று கேட்டாள்.

"கோபு!"

"உனக்கு லட்டுவும், ஜாங்கிரியும், தரேன். ம. கமலா, கூடையைத் திற. முடிச்சை அவிழ்க்க நேரத்தை வீணாக்காதே. கத்தியாலே கயிற்றைக் 'கட்' பண்ணு...."

"பையனுக்கு மட்டுமா ஸ்வீட்? நாம எல்லாருமே அல்லவா இப்போ ஸ்வீட் சாப்பிட வேணும். எங்கே சந்தானம்!" என்றான் சேஷன்.

ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு சந்தானம் அங்கே வந்தபோது ஜானு கொடுத்த 'டெரிலின்' ஷர்ட் முற்றத்தின் வழியே வந்த மாலை ஒளியில் மின்னிக் கொண்டிருந்தது.

எந்த விதமான உணர்ச்சிகளுக்கும் வசப்படாமல், சீராகக் கோவையுடன் சேஷன் தான் வந்திருக்கும் காரணத்தைச் சொன்ன பிறகும், அந்தக் காரணத்துக்குச் சாட்சியாக, தலை குனிந்து, சோகமும் சாந்தமும் கலந்த ஒரு சிலைபோல் நின்ற சாரதாவைக் கண்ட போதும் பாகிரதி அம்மாள் மெல்ல மெல்லத் தன்னுடைய சுயநினைவுக்கு வந்தாள். ஒரு பிரளயமே அங்கு நடந்து விட்டதாக அவளுக்குத் தோன்றியது. சீதாவுக்கு எப்படி ஆறுதல்



"நான் உன்னைக் கலப்பு மணம் புரிந்து கொண்டது தப்பாப் போச்சே! காலையில் காப்பியிலே மசையக் கலந்திருந்தாய். இப்ப, சாம்பாரில் பாயசத்தைக் கலந்திருக்கிறாய்! சே; சே!"

சொல்லுவது என்றுகூட அவனுக்குத் தெரியவில்லை. அவளுக்கு ஆறுதல் தேவை என்று எண்ணவுமில்லை. சந்தானம் இருக்கும் இடத்தையே பார்க்க அவனுக்கு அவமானமாக இருந்தது. அன்றே சந்தானம் தன்னுடைய அநுபவ ரீதியாக ரகுபதியைத் தராசில் போட்டு எடையைப் பார்த்துச் சொல்லியிருந்தான். அவனே அவன் உதாசீனம் செய்ததன் விளைவுகள், சேஷன் சமயத்தில் வந்து காப்பாற்றியிராவிட்டால் எவ்வளவு விபரீதமாகப் போயிருக்கும் என்பதை எண்ணிப் பார்த்த போது உடலின் சப்த நாடிகளும் ஒடுங்கின.

பாகீரதி மனம் கசிந்து, உடல் குன்றிப் போய் நின்றாலும் மற்றவர்கள் பேசாமல் இருக்கவில்லை. சாரதாவை மனச் சமாதானப்படுத்தி, கோபுவை விசாரித்து, இருவர்களையும் உபசரிப்பதில் முனைந்தாள் ஜானு. கமலா, சீதாவைத் தேற்றிக் கொண்டிருந்தாள். லட்டுவை விண்டு விண்டு, ஒவ்வொரு விள்ளலாகத் தின்று கொண்டே சேஷன்; ரகுபதி, அலமேலு அம்மாள் இருவரின் வருகையையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

நேரம் செல்லச் செல்ல, அவர்களை எதிர்பார்க்கிறது வீண்தானோ என்று சந்தானத்துக்குத் தோன்றியது.

''நீங்கள் கவலைப்படாதீர்கள் ஸார். நான் ஊருக்குப் போய்ப் பெண்டாட்டியையும் பிள்ளையையும் அழைத்து வந்து விடுவேன் என்று ரகுபதி சொப்பனத்திலும் எதிர்பார்த்திருக்க மாட்டார். இன்று காலை வரை, எழும்பூர் ஸ்டேஷனுக்கு ஆறு மணிக்குள் இவர்களெல்லாரும் வந்து விடுவார்கள் என்று தான் அலமேலு அம்மாளும் அவனும் எண்ணியிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணம் மாறும்படியாக ஒன்றும் அவர்களைப் பொறுத்தமட்டில் நடக்கவில்லையே?.... மேலும், இவர்களைக் காணாததற்கு என்ன காரணம், அது உங்களால்தானா என்றெல்லாம் அறிய இருவருக்குமே ஆத்திரம் இருக்கும். அதனாலே கண்டிப்பாக அவர்கள் வந்தே தீருவார்கள்!''

சேஷன் என்றுமில்லாத உற்சாகத்துடன் மழை பொழிவது போல் வார்த்தைகளைக் கொட்டினான்.

திடீரென்று, ''அவர்கள் வர சமயத்திலே சாரதாவும் பிள்ளையும் அந்த அறையில் இருக்கட்டும். வெளியிலிருந்து பார்க்கும்போதே, இவர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்தால் ரகுபதி அந்த வழியிலேயே திரும்பி விடுவான்....'' என்றான். பிறகு தன்னைத் தானே தேற்றிக் கொள்ளுவது போல, ''ஆனால் இப்போ அவனுக்குப் பெண்டாட்டியை அடையாளம்கூடத் தெரியுமோ என்னவோ!'' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

சரியாக ஏழரை மணிக்கு ஒரு டாக்ஸி வந்து நின்றது. அலமேலு மட்டும் இறங்கினாள். அவள் கூடத்தை அடைவதற்குள், ''அம்மா, ரகுபதியிடம் நானே பேசிக் கொள்ளுகிறேன்!'' என்றாள் சீதா திடீரென்று.

அவளுடைய நம்ப முடியாத, எதிர்பாராத மாறுதலைக் கண்டு எல்லாரும் அதிசயித்தார்கள். ஆனால் மற்றவர்கள் ஏதும் பேச முடியவில்லை.

அலமேலு தடதடவென்று நடந்து வந்தாள்.

''ஏண்டீ பாகீரதி... என்னடி இது! நானும் ரகுபதியும் பிளாட்பாரமெல்லாம் தேடினோமே? யாருக்கு இங்கே என்ன ஆச்சு....? யாராவது குடும்பத்தைக் கெடுக்கிறவன் குறுக்கே நின்னு குதறிட்டானா?'' நாலாபக்கமும் பார்த்துக் கத்தியவள் பெட்டி படுக்கைகளின் மீது கண்ணோட்டம் விட்டு விட்டு, எரித்து விடுபவளைப் போல் சந்தானத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

அவன் சிரித்துக் கொண்டிருக்கையிலேயே, ஜானு வாசலுக்குச் சென்று ரகுபதியை அழைத்து வந்தாள். ''ரொம்ப ஸீரியஸ், மிஸ்டர் ரகுபதி! தயைசெய்து வந்து பாருங்கள்!'' என்று அவள் ரேழியில் கூறியது சந்தானத்தின் காதுகளில் விழ, அவன் தன்னுள் சிரித்துக் கொண்டான். ஜானுவின் சாதுரியத்தையும் மனம் புகழ்ந்தது.

அவன் கூடத்தை அடைந்ததும் ஜானு, வாசற் கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டாள்.

எல்லாருக்கும் நடுவே ரகுபதி நின்றான். சேஷனைப் பார்த்த போது ஆச்சரியத்தைவிட ஆத்திரமே எல்லை மீறி வந்தது. இவன்தான் ஏதாவது செய்து, காரியத்தை ஏன், அவன் இட்டத்தை நிர்மூலமாக்கி விட்டானோ?

அலமேலுவின் இரைச்சலுக்கு யாரும் பதிலளிக்காமற் போகவே, ஓர் அமைதி நிலவியது. அந்த அமைதி நேரத்தில், தன்னைத் தானே தயார் செய்து கொண்ட சீதா, ''மிஸ்டர் ரகுபதி!'' என்றாள்.

ரகுபதி அவளைப் பார்த்துத் திருதிருவென்று விழித்தான்.

''எங்க அம்மாவும் நானும் உங்களை நம்பினோம். நீங்கள் கண்ணியமான மனிதர் என்று.... ஆனால் நீங்கள் எப்படிப்பட்டவர் என்று எங்களுக்கு இப்பத்தான் தெரிஞ்சது....''


விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு

வலியை அதி வேகமாக வெளியேற்ற


புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'


இப்பொழுது முதன்முதலாக இந்தியாவில் வழங்கப்படுகிறது





புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதிநவீனமான வலிநிவாரணியாகும்.





புதிய

மைக்ரோஃபைண்ட்

'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக வலியை வெளியே இழுத்துவிடுகிறது

''இந்தச் சந்தானம் பேச்சை நீங்கள் நம்பியிருக்கிறீர்கள்!'' ரகுபதி முனு முனுத்தான். இருந்தாலும் சீதாவின் காதில் அது கேட்டது.

''அவரை நாங்கள் நம்பியிருந்தால், இந்தக் கலியாணம் நிச்சயமே ஆகியிருக்காது. அவரை நம்பாமல்தான் முட்டாள்தனமாக என் அம்மாவும் நானும் இதில் ஒரு முடிவுக்கு வந்தோம். அலமேலு மாமியை நாங்கள் குற்றம் சொல்லவில்லை. நீங்கள் சொல்லிக் கொடுத்த பாட்டை இங்கே வந்து, கிடைக்கிற கூலிக்காகப் பாடினாள்.''

''என்னடி, நாக்கு நீள்கிறது!'' என்று இடைமறித்தாள் அலமேலு.

''நாருக் தொழிலிலே உங்க கை நீண்டால், எங்க நாக்கு நீளக் கூடாதோ?'' என்றாள் ஜானு.

''ஜானு, நீ பேசாமல் இரு!'' என்று அமைதிப்படுத்திவிட்டுச் சீதா மேலே தொடர்ந்தாள்: ''இதோ, இங்கே அந்த அறையிலே இரண்டு பேர் இருக்கிறார்கள். அவர்கள் யார் என்று முதலில் உங்கள் வாயால் எங்களுக்குச் சொல்லுங்கள்!''

அடுத்த கணம், ''கோபு, நீயும் அம்மாவுமாக இங்கே வாருங்கள்!'' என்று அழைத்தாள் ஜானு.

சாரதா தலைகுனிந்து கொண்டு அடிமேல் அடி வைத்து வர, கோபு அவளைத் தாண்டி முன் வந்தான்.

''இவர்கள் யார்?'' — சீதாவின் குரலில் யாருமே இதுவரையில் உணர்ந்தறியாத கடுமையையும், ஆணவத்தையும் கண்ட தாயாரும் தங்கைகளும், சந்தானமும் வியந்தார்கள்.

''இது என்ன நாடகம்?'' என்று ரகுபதி சீறினான்.

''நீங்கள் நடத்தவிருந்த நாடகம் எங்களுக்கு என்னன்னு புரிந்துவிட்டது. இது என்னன்னு உங்களுக்குப் புரியவில்லையா?''

''இவள் யார்? அந்தப் பையன் யார்?''

இப்போது கலகலவென்று சிரிப்பொலி கேட்டது.

சேஷன், ''ஸார், ரகுபதி ஸார்! அந்தக் கேள்வியை நான் இருக்கும் போது கேட்காதீர்கள்!'' என்றான்.

''இதெல்லாம் உன் வேலைதானா?''

''உங்களுக்கு எப்படித் தோன்றுது?''

''இதுக்கு நீ நன்னா வாங்குவாய்!''

''இப்போ யார் யாருகிட்டே வாங்குறீர்கள்.....?''

ஜானுவும் கமலாவும் சிரித்தார்கள். வாய் திறவாமல் பாகீரதியும் சந்தானமும் நின்றார்கள்.



''என்ன! தினமும் வீட்டில் இருந்தபடியே பட்டுறு சம்பாதிக்கிறீர்களா? எப்படி?''

''ரேஷன் அரிசியிலிருந்து பொறுக்கி எடுத்த கற்களை ரேஷன் கடைக்கே விற்று வருகிறேன்!''

சீதா, ''கட்டின பெண்டாட்டியை 'இவள் என் பெண்டாட்டி'ன்னு சொல்லிக்க உங்களுக்கு வெட்கமா, வெறுப்பா, இல்லை பயமா?'' என்று கேட்டாள்.

''நான் இரண்டாம்தாரம்னு சொல்லித்தான் இதற்கு ஏற்பாடு செய்தேன்.''

''அது தெரியும். ஆனால், நீங்களே என் ஆபீஸுக்கு வந்து என்கிட்டே பேசினீர்களே? அப்போது என்ன சொன்னீர்கள்? கலியாணமான உடனேயே மனைவி இறந்து போய் விட்டாள் என்றீர்கள்.....?''

ரகுபதியால் பேச முடியவில்லை.

''வா, அலமேலு, போகலாம்!'' என்றான் ரகுபதி.

''அவ்வளவு சீக்கிரமாகவா? அரிசிக்காரன் தெரு முழுதும் இங்கே வரச் சொல்லியிருக்கேன். போலீஸ் ஸ்டேஷனுக்கும் தகவல் சொல்லி வைச்சிருக்கேன். பழைய கதை ஒவ்வொண்ணா வெளியே வரப் போகிறது!'' என்று கூறிச் சேஷன் சிரித்தான்.

''சேஷன்..... பேசாமலிரு.....'' என்றான் சந்தானம்.

''என்ன ஸார், குழந்தையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுகிறீர்களா?'' என்று கருவினான் ரகுபதி.

அலட்சியமாக அவனைப் பார்த்த சந்தானம், ''நான் கிள்ளறதுன்னு தெரிஞ்சா கழுத்திலேதான் கிள்ளுவேன். அப்புறம் குழந்தை அழத் தொண்டை இருக்காது!'' என்றான். (தொடரும்)



கவர்ச்சி!

நீங்கள் எவ்வளவு அழகாக இருந்தாலும் சரி, எத்தனை இனிமையாகப் பழகுகிறவர்களாக இருப்பினும் சரி, மேலும் பன் மடங்கு கவர்ச்சியாக விளங்கலாம் நீங்கள், புன்முறுவல் செய்தால்!

பரிசு



எவரெஸ்ட் சிகரத்தில் நம் இந்தியகோஷ்டியினர் ஏறி வெற்றிக் கொடி நாட்டியபோது அவர்களுக்கு உற்சாகமூட்டச் சூடான காப்பி தந்தது ஒரு கழுகு. 'ஈகிள் பிளாஸ்க்'தான் அந்தப் பெருமையைச் செய்தது. ஈகிள் பிளாஸ்க் கம்பெனியார் தங்கள் பிளாஸ்கின் மேல் காலட் புலனியின் அற்புதச் சித்திரங்களைத் தந்து மனதைக் கவரும்படி அவற்றை வெளிக் கொணர்ந்திருக்கிறார்கள். ஜுலை 20ந் தேதி தொழில் மந்திரி திரு நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் ஈகிள் பிளாஸ்க் நிறுவனத்தார் நடத்திய வண்ணப் போட்டியில் சென்னை நகரத்தில் பரிசுபெற்றவர்களுக்கு ஸ்ரீமதி நெடுஞ்செழியன் ஸ்காலர்ஷிப்புகளை வழங்குகிறார்.

பல்சுவைப் பக்கம் 1



பாவம், மில்டன்!

ஆங்கில இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றுத் திகழும் 'இழந்த சொர்க்கம்' என்ற நெடுங் கவிதையை ஜான் மில்டன் எழுதி முடித்தது கி.பி. 1662ல். அடுத்த ஆண்டு லண்டனில் தோன்றிய கொடிய பிளேக் நோயும் அதை அடுத்து நிகழ்ந்த பெரும் தீ விபத்தும் 'இழந்த சொர்க்கம்' உடனடியாகப் பிரசுரமாக முடியாமல் செய்து விட்டன. அரசாங்கத் தணிக்கையாளரின் 'லைசென்ஸ்' வழங்கப் பெற்றதும் கி. பி. 1667ல் அது பிரசுரமாயிற்று. அதாவது, இன்றைக்குச் சரியாக மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு 'இழந்த சொர்க்கம்' (முதல் பதிப்பு) பிரதி ஒன்று மூன்று ஷில்லிங் விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. பதிப்பாளருடன் மில்டன் செய்துகொண்ட ஒப்பந்தப் பத்திரம் பிரிட்டிஷ் மியூசியத்தில் இன்னும் இருப்பதாகக் கூறப்படுகிறது. அந்த ஒப்பந்தப்படி, மில்டனுக்கு முதலில் ஐந்து பவுனும், முதல் பதிப்பு (15000 பிரதிகள்) விற்பனையானபின்னர் மேலும் ஐந்து பவுனும் கொடுப்பதாக நிபந்தனை. இரண்டாவது மூன்றாவது பதிப்புகள் விற்பனையானதும் ஐந்து பவுன் வீதம் ஆசிரியருக்குக் கொடுக்கப் பட வேண்டும். அவ்வண்ணமே மில்டன் முதலில் ஐந்து பவுனும், முதல் பதிப்பு முழுதும் விற்பனை ஆனவுடன் ஐந்து பவுனும் ஆக மொத்தம் பத்துப் பவுன் சன்மானம் பெற்றுக்கொண்டார். அவர் இறந்தபின் அவரது மனைவி எட்டுப் பவுன் பெற்றுக்கொண்டு நூலின் உரிமைகள் அனைத்தையும் பதிப்பாளருக்கு விற்றுவிட்டார். உலகப் புகழ்பெற்ற அமர காவியத்துக்குக் கிடைத்த வருமானம் பதினெட்டுப் பவுன்கள்தான்! இன்றைய நாணயமாற்று விகிதப்படி பார்த்தால்கூட இது சுமார் முந்நூறு ரூபாய்தான். ''பாணன்''

உயிரோவியம்



தேபா• பகுதியில் பாலிகாட் என்னுமிடத்தில் அமைந்திருக்கும் திட்டத்தின் கீழ் கிராமக் கைத்தொழில் பயிற்சி பெறும் சிறுவன் ஒருவன் பொம்மை லாரி செய்கிறான் இப்படத்திலே, கடந்தகால சோக வாழ்க்கையைச் சொல்லும் அவன் முகத்தில், இரு கருவிழிகள் காட்டும் ஒளிமயமான எதிர்காலத்தைத் தேடுவதைப் பாருங்கள்.

-வசந்தரா



சப் இன்ஸ்பெக்டர்: என்னய்யா 666! என்னய்யா வேலே செய்இறே நீ! தலைகீழாக நின்றாலும் அந்தக் கான்ஸ்டபிள் 999 போல் உன்னால் ஆக முடியாதய்யா!

-ஆர். ராமானுஜம்

நிறுத்து! நிறுத்து!



ஒரு டாக்ஸியில் ஒரு வாலிபனும் யுவதியும் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். திடீரென்று டிரைவர் டாக்ஸியை நிறுத்தி விட்டார். வாலிபன் கேட்டான்: "ஏன் டிரைவர் டாக்ஸியை நிறுத்திவிட்டாய்?"

டிரைவர்: "அந்த அம்மா 'நிறுத்துங்க'ன்னு சொன்னாங்களே?"

வாலிபன் சொன்னான்: "அது உனக்குச் சொன்னதல்ல!" - ஏ. கே. கந்தசாமி



ஒரு புத்தகத்திற்கு எப்பொழுது வெற்றி ஏற்பட்டு விட்டதாகச் சொல்லலாம்? அதனைப் படிக்காதவர்களும் படித்துவிட்டதாகப் பாவனை செய்யும்போது!

இங்கிலீஷ் டைஜஸ்ட்

தகவல்: ஏ. கே. கந்தசாமி

பலசுவைப் பக்கம் 2

கோமகள்

நேசநிலவு

அட்டைப்படக் கதை





லலிதா இடிந்து விட்டாள். அவள் தன் உயிரின் ஆதாரமாகக் கருதியிருந்த குழந்தை இதோ துவண்ட மலராகக் கண் மூடிக் கிடந்தான். தாய்மையின் கலக்கம் விழியில் உறைந்து கிடந்தது. குழந்தை கண் திறக்காமல் கிடக்கிறான். டாக்டரோ உதட்டைப் பிதுக்கிவிட்டார். ஐயோ! இப்படியா... இப்படியா அந்த உறவு பொட்டென்று போய் விடும்? இத்தனை அன்பையும், இத்தனை பாசத்தையும் மறுத்தொதுக்கி வேண்டாமென்று பெற்றவளிடமிருந்து குழந்தை போயே போய்விடுவதுண்டா? கட்டிக் காத்த ஈரத்தை, கண் மயங்கிய சுகத்தை, அமுதுண்ட இன்பத்தை மறந்து, அன்னை துடிக்க, பாசம் அலற, குழந்தை பிரிந்துவிடுவானா?... இதோ குழந்தை இதோ நினைவற்றுக் கிடக்கிறான். அவளை நம்பி, அவள் நினைவிலேயே வாழ்ந்து வரும் அன்னையின் நினைவு அவனுக்கு இல்லை! பெற்றவள் துடித்தாள்.

"குழந்தை இதோவுக்கு ஆபத்துன்னு பெற்றவளுக்கு மட்டும்தான் துடிப்பிருக்குமா? அவப்பாவுக்குப் பாசமிருக்காதா? அப்பா பாலு! சிவகுமாருக்குத் தந்தி கொடுத்தாச்சா?" —லலிதாவின் தாய் கடமையில் கருத்தூன்றினாள்.

அத்தனை துயரத்திலும் சட்டென லலிதா தாயை நோக்கினாள். அவள் கண்களில் இன்னும் கூடப் பழைய தீவிரம் இருந்தது. "அதுதான் எல்லாம் போய் விட்டதே! இனிமேலா அந்தப் பாசம் பிறக்கப் போகிறது? விடுங்கள், ஒன்றும் வேண்டாம்" என்று அழுத்தமாகக் கூறினாள் அவள்.

"முதலிலேயே அத்தானுக்குத் தந்தி கொடுத்தாச்சு" என்று செய்தியை அறிவித்தான் பாலு.

"லலி! இதென்னடி பிதற்றல்? உனக்கு இருக்கு மனசு அவனுக்கு இருக்காதா என்ன? இந்தச் சமயத்திலேயா வன்மம் பாராட்டுகிறே? உனக்கும் அவனுக்கும் விட்டுப் போய் விட்டதென்று பெயரா?"

"பின்னே இன்னும்கூட பாக்கி என்ன இருக்கிறது? இதோடு, இவனோடு....எனக்கு எல்லாமே போய்விட்டது அம்மா!"

"சீ! சும்மா இருடி! துக்கிரித்தனமாகப் பேசாதே. இதோவுக்குச் சரியாகிவிடும்."

"ஐயோ! இவன் மட்டும் இல்லேன்னு எனக்கு என்ன இருக்கு? தெய்வமே! என் குழந்தையைக் காப்பாத்து!" லலிதா ஓலமிட்டு விசித்தவாறே தன்னிலை இழந்து கிடந்த குழந்தை இதோவைக் கட்டிக் கொண்டாள். "இதோ! என்னை அநாதையாக விட்டுட்டுப் போயிடாதேம்மா! நீ இல்லேன்னு எனக்கு எதுவுமே இல்லேம்மா!"

"என்ன இல்லேயடி உனக்கு? மஞ்சள் இருக்கு, குங்குமம் இருக்கு, பூ இருக்கு. இதையெல்லாம் ஏற்கும் சௌபாக்யம் இருக்கு. ஏன் ஏதுவுமில்லேன்னு ஓலமிடறே? பேசாமல் அமைதியாக இரு. குழந்தைக்கு ஒன்னும் ஆகாது...."

லலிதா கண்களைத் துடைத்தவாறே நெட்டுயிர்த்தாள். நேற்றெல்லாம் முந்தானையைச் சுற்றி வந்த இதோ துவண்ட கொடி போல், அசையாத அழகுச் சித்திரமாகக் கிடந்தான். இனி அவன் மெல்லிய எச்சில் இதழ்கள் அவள் கன்னத்தில் முத்தங்கள் சயாவோ? கன்னத்தோடு கன்னம் இழைய நின்று பிஞ்சு விரல்கள் தலையில் அளையக் கொஞ்சிக் கொஞ்சி மிட்டாய் கேட்காதோ? மார்பை முட்டியதிலிருந்து மடியின் அணைப்பில் வளர்ந்ததெல்லாம் வெறும் கானலாகி, கனவாகி முடிந்து விடுமோ? ஐயோ! இந்தத் துயரம் அடிவயிற்றைப் பிசைகிறதே. நெஞ்சை முட்டும் இந்தச் சோகம் எல்லையற்றதோ? அப்படியானால் இனி வாழ்வு? வாழ்வை உதறிவிட்டு, நம்பி வந்த நல்ல துணை, ஒரே குறிக்கோள் இன்றுப் போனால்?

"கண்ணே, இதோ! என்னை விட்டுப் போய் விட்டாயேடி! உன்னைத் தவிர எனக்கு யாருமே இல்லையடி....." என்று மனம் தாளாமல் அரற்றினாள் லலிதா.

ஏதோ ஒரு சலசலப்பு... எல்லோரது கண்களும் வாசலை நாடுங்கால் லலியின் மலைத்த விழிகளும் வாசலை நாடின. எடுத்த அடியோடு எதிரே நிமிர்ந்த சிவகுமாரின் கண்கள் அவள் விழிகளை சந்தித்தன. அவளைக் கண்டதுமே சஞ்சலமாகப் பொங்கியது மனத் துயரம். அவன் தலை குனிந்து விம்மினான்.

"இதோ!" என்று அழுதவாறே சிவகுமார் பாசத் துடிப்போடு குழந்தை அருகில் வந்தான். "இதோக் கண்ணு! அப்பா வந்திருக்கிறேனம்மா!"

தன்னளவுக்குக் குழந்தையின் உயிர் விளக்கை மீட்டு வரத் துடிக்கும் பாசமிக்க துணை கிடைத்த ஆறுதலோடு அவளும் குழந்தையின் முகத்தை வருடினாள். "இதோம்மா! 'அப்பா எங்கே, அப்பா எங்கே' என்று கேட்பியேம்மா, இதோ பாரம்மா, அப்பா வந்திருக்கிறார்!"

"அப்பா!" குழந்தையின் கண்கள் திறக்கவில்லை; உணர்வுகளுக்கு மட்டும் செவிப்புலன் இருந்ததோ?

"இதோ!" பூச்சருகை அள்ளினாற்போல் அவளை அள்ளித் தன் மடியில் போட்டுக் கொண்டான் சிவகுமார்.

இதற்கே காத்திருந்தாற்போல் குழந்தையின் கைகள் துவண்டு சரிகின்றன.

"ஐயோ இதோ!" பெற்ற வயிற்றின் கலக்கம் கோடி மடங்காகப் பெருகிச் சூழ்கிறது. சிவகுமார் மௌனமாகக் குலுங்கி அழுதான். லலிதாவின் கண்கள் பூத்தன. அவளெதிரே சிவகுமார் சுழன்றான். அம்மாவின் முகம், அப்பாவின் முகம், தம்பி, தங்கைகளின் முகம் எல்லாமே சுழன்றன. அந்த வீடே கிடுகிடுவென்று நடுங்கியது. எங்கோ எங்கோ புகையாகிப் பறப்பது போல் ஒரு பிரம்மை. மூச்சோடு மூச்சாக ஒரு இரைச்சல். எல்லாம் முடிந்துபோன ஏக்கப் பெருமூச்சில் ஒரு விநாடி நேரம் யுகமாக விரிந்து காட்டியது. கறுத்த இமைத் திரைக்குள் கலங்கலான காட்சிகள், ஏக்கமும், ஏமாற்றமுமாகக் கிடைத்துத் துணையின்றி, எங்கோ பேசப்படுவது போல்... சட்டெனக் காதுகளில் தெளிவான ஓசைகள் கேட்டன.

"திறுங்கள்!"

"நகருங்கள், மூச்சு விடக் காற்று இல்லே!"

நெஞ்சில் துக்கத் திரையோடு நினைவு திரும்புகிறது. நிச்சலமான மூச்சிழை நிம்மதியான பாதையூடு சீதளமாகப் புகுந்து வெப்பமாக வெளியேறுகிறது.

லலிதா கண்களைத் திறந்தாள். அவளுக்கு வெகு அருகே குனிந்திருந்த சிவகுமாரின் முகத்தில் கலக்கம் கொஞ்சம் தெளிவடைவதைப் பார்க்கிறாள். மீண்டும் பெற்ற வயிற்றின் கலக்கம் "இதோ" என்று அலறி எழுகிறது.

எல்லாம் முடிந்து விட்டது. பேசும் பொற்சித்திரமாக ஆடி ஓடிக் களித்திருந்த இதோ பேசும் உண்மையாக மட்டும் நினைவில் இருந்தாள்.

துயரத்தின் அடியாழத்தில் சோர்ந்து அடிபட்டுக் கிடந்த லலிதாவின் செவிகளில் சிவகுமாரின் துயரத்தைப் பற்றிய விமரிசனங்கள் விழவே செய்தன. ஓரிரு சமயங்களில் அவனை ஏறெடுத்துப் பார்க்கும்போது அந்த உள்ளத்தின் அதீத சோகம் புரியவே செய்தது. அவளுக்கு மட்டும் இல்லாமல் போகுமா? அம்மா கூறியது உண்மைதான். அந்த இருவரின் இன்பப் பரிணமிப்பில் உயிர்த்தவள்தானே இதோ? இருவருக்குமே பொதுவானவள் அவள். எனவே அவனுக்கும் இந்தத் துயரில் பங்குண்டு. இப்போது இருவரும் சேர்ந்து வாழவில்லை என்றாலும் கூட, முன்பு வாழ்ந்ததின் அடையாளம் அல்லவா அது? தெய்வத்துக்கு அதில்கூட விருப்பம் இல்லை போலும்! அவள் வாழ்ந்ததின் அடையாளமான அடிச்சுவடுகளையும் அவர் அழித்து விட்டார்.

"தலையை இப்படியா சிக்காக விடுவாய்?" என்று கடிந்த அம்மா லலிதாவை இழுத்து உட்கார வைத்துச் சிக்கெடுத்துத் தலையைப் பின்னி விட்டாள்.

பூவை எடுக்கும்போதே தாயின் கைகளிலிருந்து அதைத் தட்டி விடுகிறாள் அவள். "ஏனம்மா என்னைக் கொல்லறே? பத்து நாளாகலையே அவள் போய். அவளுக்கில்லாமல் நான் பூவைத்திருக்கிறேனு, அவள்தான் விடுவாளா? அத்தனையையும் தன் தலையிலேயே வைக்கும்படி அடம் பிடிப்பாளே..." என்று தழுதழுத்த குரலில் கூறினாள்.

அதே நினைவின் தொய்வில் தாயும் அப்படியே உட்கார்ந்திருக்கிறாள். அவள் கண்கள் கலங்குகின்றன. "உன் மனசு எனக்குத் தெரியாதா லலிதா? ஆனாலும் போனதை நெனச்சு வருந்தினால் என்ன நடந்திடும்? உன் வயித்திலேயே அவள் திரும்பி வந்து பிறப்பாள்....! இன்னிக்கு வெள்ளிக்கிழமையும் அதுவுமா நீ பூ வேண்டாம் என்று சொல்லாதே. திரும்பு வெச்சுடறேன்...."

தலைப்பூவை நெருடியவாறே லலிதா வெகு நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள் அப்போதுதான் தெருப்பக்கமிருந்து சிவகுமாரும் அப்பாவும் உள்ளே வந்து கொண்டிருந்தனர். லலிதா சட்டென எழுந்து உள்ளே ஓடினாள். அவன் என்ன நினைப்பானோ என்ற சிந்தையே இல்லை. அவள் ஒரு இமைக்குள் மயங்கி நின்ற காலமெல்லாம்தான் கட்டவிழ்ந்து போய்விட்டதே. வாசலில் நிழலாடினால் இப்படித்தான் அவள் உள்ளே ஓடுகிறாள், வருவது சிவகுமார்தானோ என்று! எப்படியாவது தனியாக இருந்து நெற்றி முட்டு, நேர் முட்டாக ஒரு சந்திப்பு நிகழ்ந்து விடுமோ என்ற கதிகலக்கம் அவளை அலைக்கழித்தது. அவன் ஏதேனும் கேட்டு அவள் பதில் சொல்லும்படி நேர்ந்து விடுமோ!

"அம்மா லலிதா! மாப்பிள்ளைக்குத் தலைவலியாம். இந்தத் தைலத்தைக் கொண்டு போய் நெற்றியிலே நன்றாகத் தேய்த்து விடம்மா...." அப்பா கையில் தர வந்த பாட்டிலை அவள் வாங்கவில்லை.

"பாலு இல்லையாப்பா? அவனிடம் அனுப்புங்களேன்" என்று கூறிவிட்டு இன்னும் பேசத் தொடருமோ என்ற அச்சத்தில் அறைக்குள் வந்து முடங்கிக் கொண்டாள்.


ரோஜாப்
பூப்போட்ட
பழுப்புக்
காவிநிறம்..
ஒரு கேம்ப்ரிக்
தருவது
எஸ்ஆர்எம்
ஒன்றே
ஸ்ரீ ராம் மில்ஸ் லிமிடெட்

"லலி!" என்று அதட்டலாகக் குரல் கொடுத்தவாறே அம்மா அவளைப் பின் தொடர்ந்து வந்தாள். லலிதா 'உம்' கொட்டவுமில்லை, திரும்பவுமில்லை.

"உன்னைத்தான்டி கூப்பிடறேன். காது செவிடா?" அவள் தோள்களை முரட்டுத்தனமாக அழுத்தினாள் அம்மா.

"என்னம்மா வந்தது?"

"என்ன வந்ததா? அது என்ன உனக்கு அத்தனை அலட்சியம்? அப்பா ஒன்று சொல்வது, நீ மீறி உள்ளே வந்து விடுவதா? இப்படித்தான் அப்பாவை அவமானப் படுத்தறதா?"

லலிதாவுக்குக் குரலில் அழுகை ஒட்டிக் கொள்கிறது. "நான் அப்பாவை அவமதிக்கல்லேம்மா..."

"பின்னே ஏன் அப்படி ஓடி வர்றே? வந்தவர் பாவம் தவிக்கிறார். நீயாகவே அவரைக் கவனிக்கணும். உனக்கு இருக்கிற ஆயாசம் அவருக்கு இல்லையா? இதையெல்லாம் உணரலியோ நீ...."

லலிதா விரக்தியாகச் சிரித்தாள். "அப்படி யாரம்மா நான்தான் கவனிக்கவேணுங்கிற நிலையில் இருக்கா? அது போய் ஒரு வாரமாகிவிட்டதேம்மா...!" அழுகையில் பிரிட்டது நெஞ்சம்.

"அதையே பேசவானேன்? போனவளோட உனக்கு எல்லாம் போய்விட்டதா? இருக்கிறவங்களை யாரடி கவனிக்கிறது?"

லலிதா மூக மூசென்று அழுதாள். "என்னைத் தொந்தரவுபடுத்தாதேம்மா!"

அம்மா லலிதாவை அணைத்துக் கொண்டாள். "நீ என்ன ஒன்றும் தெரியாதவளா? எழுந்து வா.... அவர்..... அவர்...என்ன நினைப்பார்? என்ன இருந்தாலும் உன் புருஷனில்லையா? ஒரு பெண் கட்டினவனை இத்தனை அலட்சியப்படுத்தலாமா?"

"உனக்கு என்னம்மா வந்தது? ஏதோ அவருக்கும் ரத்த பாசம் உண்டுதான்... வந்தார்.... இனிமேல் என்ன?" அவள் குரலில் துக்கத்தைச் சமாளித்த கோபம் குமிழியிட்டது.

"இனி மேல் என்னவா? இனிமேல்தானடி எல்லாம். எழுந்திரு. உனக்கு இந்த முரட்டுத்தனம் உதவாது. அவர் ராத்திரி ஊருக்குப் போகிறார்...."

"போகட்டுமே...."

"நீயும் அவரோட புறப்படப் போறே... தெரிஞ்சுக்கோ!"

"நானா?"

"நீதான். போதுமடி போதும். அவரே கூட, வாழாதவன்னு தூற்றினது போதும்.!"

"ஊருக்காகவா அம்மா என்னைப் போகச் சொல்றே?"

"அதற்கு மட்டும் இல்லேடி பாவி! ஒவ்வொரு வேளையும் எனக்குக் கையில் எடுத்த கவளம் வாய்க்குள்ளே போக மாட்டேங்குதடி. எத்தனை நாள் நெஞ்சைக் கரிக்க, வயிறு எரிய, உன்னைக் கண்டு பெருமூச்சு விடுவேன்? வாழ வேண்டிய வயதில் தனி மரமாகக் கண்ணீரே கதியாக் கிடந்தால் நான் நிம்மதியாக இருப்பேன்னு நினைக்கிறியா? உன்னை வரம் வாங்கிப் பெத்த வயிறு நடுங்குதடி நடுங்குது....!"

"அம்மா! நான் இங்கேதானம்மா சந்தோஷமா இருந்தேன்." அவள் குரலில் மன்றாடல் ஒலிக்கிறது.

"என்னிடமா இதைச் சொல்றே? மணமில்லாத பூ மாதிரி நீ மனசுக்குள்ளேயே வாடிக் கிடந்தது தெரியாதா? உனக்கேத்தபடி அவர் வரலேன்னு, அவருக்கேத்தபடி நீ போகிறதுதான் பெருமை! அதுதான் வாழ்வு! அதுதான் அழகு! இப்படி வந்து அம்மா வீட்டிலே உட்கார்ந்துடறதிலே பெருமை இல்லே. எதையும் சகித்துக் கொள்கிறதுதான் பெண்கள் தர்மம். இது வரையும்தான் எதையுமே யோசிக்காமே உன் போக்கில் நடந்தே. இப்போ நான் சொல்றதைத்தான் நீ கேட்டாகணும்.. உனக்கு என்ன நாங்கள் கெடுதலா பண்ணிடுவோம்? முரண்டு பிடிக்காமல் கிளம்பு. நடந்ததை யெல்லாம் மறந்துவிட்டு மேற்கொண்டு நடக்க வேண்டியதைப் பார். உன் துணிமணிகளை யெல்லாம் எடுத்து வை. ஏதோ ஒரு சின்ன மனஸ்தாபம் ஏற்பட்டதற்காக வாழ்வையே வீணடிப்பதா?"

"அம்மா!"

"சொல்றதைக் கேள். எங்கே இருந்தால் உனக்கு நல்லதுன்னு எனக்குத் தெரியும். கிளம்பத் தயார் செய்...."

லலிதா விக்கித்துப் போனாள். ஆயாசங்களைப் பகிர வேண்டிய தாயே போவென்றால் வேறு போக்கிடம் ஏது? ஐயோ! கொடிக்கே காய் பாரமாகி விட்டதா?

இரவு நிலவாக மலர்ந்திருந்தது. சிவகுமார் தெரு வாசற்படியில் நின்றவாறே வீட்டின் இருளூடே எதையோ தேடிக் கொண்டிருந்தான். வந்ததிலிருந்தே லலிதாவோடு அவன் பேசவில்லை. இப்பொழுது அவளிடம் சொல்லிக் கொள்ள வேண்டுமே. பேச முயன்றாலும் அவன் என்ன பேசிவிடப் போகிறான்? அவளும்தான் முகம் கொடுக்கவில்லையே.

அவன் பெட்டி பிரயாணத்துக்குத் தயாராயிருந்தது. இரவு மணி எட்டு. ஒன்பது மணிக்கு வண்டி.

சாப்பாடும் முடிந்துவிட்டது. லலிதாவைக் கண்ணிலே காணோம். உள்ளே போய் லலிதாவிடம் சொல்லிக்கொள்வதா, இல்லை மாமனாரிடமும், மாமியாரிடமும் மட்டும் சொல்லிக் கொண்டால் போதுமா? ஒன்றுமே புரியாமல் ஒருசில விநாடிகள் குழம்பினான் அவன். பிறகு எழுந்து உள்ளே நோக்கினான். அதே வேளை பாலு டாக்ஸியில் வந்து இறங்கினான். நல்லதாயிற்று.

"பாலு, நீ டாக்சிக்குப் போனதே எனக்குத் தெரியாது. நேரமாகிறதேன்று மயங்கிக்கிட்டிருந்தேன். நான் வரட்டுமா? மாமாவையும் மாமியையும் கொஞ்சம் கூப்பிடு. சொல்லிக் கொண்டு கிளம்பறேன்."

"கொஞ்சம் இருங்க அத்தான். இன்னும் நேரம் இருக்கு...." அவன் குரலில் முகிழ்த்த அன்பு அவனை ஓரளவு பரவசமூட்டியது. அந்த வீட்டிலிருந்த எல்லோருமே லலிதா அவனிடம் பேசாததைத் தத்தம் குறையாக உணர்கிறார்கள் என்பதும் புரிந்தது.

பாலு உள்ளே போனதும் கதவருகே மாமியார் தலை தெரிந்தது.

"வருகிறேன்!"

"கொஞ்சம் இருங்கள். உங்கள் கூட லலிதாவும் வருகிறாள்.!"

"வருகிறாளா? வருகிறேன் என்று சொன்னாளா?" — சட்டெனக் கேட்டுவிட்டான் அவன். இதைப் போன்ற ஒரு சந்தோஷ அதிர்ச்சியை ஏற்போம் என்றே அவன் எண்ணவில்லையே!

"ஆமாம்!"

அவன் மனத்தில் சட்டென்று ஓர் எழுச்சி பிறந்தது. வீட்டுக்குள்ளே நோக்கினான். லலிதாவின் இரு பெட்டிகள் தயாராக இருந்தன. தாழ்வாரம் புதுப் புடவையின் மடிப்புக்கள் தெரிய நின்றாள் லலிதா. ஆனால் அவள் தலை நிமிரவில்லை. மங்கிய ஒளியில் அவள் கன்னங்கள் நனைந்திருப்பது தெரிகிறது. அவனது உற்சாகம் தனக்குள் அடங்கிக் கொண்டது.

லலிதா சிலையாக டாக்சியின் பின் சீட்டில் உட்கார்ந்தாள். அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கிவிட்டு, டாக்சியின் முன் கதவைத் திறந்தான். "நீங்கள் பின்பக்கமே உட்காருங்கள் அத்தான்!" என்றான் பாலு.

ஆனாலும் சிவகுமார் முன்பக்கமே உட்கார்ந்து கொண்டான். பாலு லலிதாவின் அருகே உட்கார்ந்தான்.

அந்த இரண்டாம் வகுப்புப் பெட்டியில் அவர்கள் இருவருமே இருந்தனர். பாலு விடைபெற்றபோது லலிதா தலையசைத்தாள். புகை வண்டி புறப்பட்டது. லலிதா வெளியே இருளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தலை சிவகுமாரின் பக்கம் திரும்பவே இல்லை.

தோளில் விரல்கள் குறுகுறுத்தபோது லலிதா திரும்பினாள். நெஞ்சு வெடிக்கும் பொருமல் பீறிட்டது. விம்மும் அவள் முகத்தைத் தன் நெஞ்சில் சாத்திக் கொண்டான் அவன். தன் மனப் பாரத்தை அவனிடம் சரியவிடும் நெகிழ்வோடு அவள் தேம்பினாள். அந்த நேரத்தில் தன் துயரத்தில் ஆறுதல் தரும் ஒரே ஜீவனாக அவனை நினைத்தாளா?

"இதைச் சாப்பிடு லலி!" என்றவாறே பையின் மேலாக இருந்த சாம்பார் சாதம், தயிர் சாதம் பொட்டலங்களை அவளிடம் தந்தான். "சிதம்பரம் ஸ்டேஷனில் வாங்கினேன். சாம்பார் சாதம் சூடாக இருக்கிறது."

"நான் வீட்டிலேயே சாப்பிட்டு விட்டேன்!"

"எனக்குத் தெரியும். நீ சாப்பிட்டிருக்க மாட்டே. உம்! பிரித்துச் சாப்பிடு..."

லலிதா மறுக்க முடியாமல் பொட்டலத்தைப் பிரித்தாள். "நீங்கள் சாப்பிடுங்கள்...."

"உம்! எனக்கும் கொடு. நானும் வீட்டில் சரியாகச் சாப்பிடவில்லை.... சாம்பார் சாதம் உனக்குப் பிடிக்குமே என்றுதான் வாங்கினேன்."

மெல்லிய பூங்கரங்கள் அள்ளித் தர, உணவோடு அவள் கையையும் தொட்டு உண்டான் அவன். இத்தனை அண்மையில் இருவரும் அமர்ந்து சாப்பிட்டு எத்தனை நாட்களாகின்றன! ஆனாலும் இப்போது எத்தனை பழைய காட்சியாகத் தொடருகிறது! அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. இரண்டாண்டுகள் அவர்களைப் பிரித்த உண்மையை இந்த ஒரு சில விநாடிகள் பொய்யாக்கிவிட்டனவே! அவள் கூஜாவிலிருந்து தண்ணீரை ஊற்ற அவன் கையைக் கழுவிக் கொண்டான். 'சட்'டென்று அவள் நினைவில் முன்னாய்த் தைத்தது அந்த ஞாபகம். ஐயோ! அவர்களிடையே கூடை கூடையாகப் பேசிக் கொஞ்சி மகிழ இதோ இல்லையே?

"வீட்டில் சாப்பிட்டேன் என்றாயே, பொய்தானே? ஏன் சாப்பிடாமல் வந்தாய்?" அவள் பதில் பேசவில்லை.

அவனே தொடர்ந்தான். "எனக்கு அப்போது புறப்படப் போகும் குழப்பம். உன்னிடம் எப்படிச் சொல்லிக் கொள்வதென்ற தயக்கம். நீ வரப்போவது அப்போது எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் நிறையச் சாப்பிட்டிருப்பேன்.....!"

லலிதா தலையைக் குனிந்து கொண்டாள்.

"நீ ஏன் சாப்பிடவில்லையென்று நானே சொல்லட்டுமா? நீ என்னோடு வரப் போவது உனக்குத் தெரியும். அதனால் நீ சாப்பிடவில்லை..." சரிதானே லலி!" என்று அவள் முகத்தை நிமிர்த்தியவன் திடுக்கிட்டான். அவள் கண்களில் முத்து முத்தாக உதிரும் நீர்மணிகள் அவன் மடியைச் சரணடைந்தன. "லலி! இதென்ன? ஏன் அழுகிறே?"

அவன் கேவலுக்கிடையே கூறினான்: ''என் செல்வம், 'அப்பா, அப்பா' என்று எந்த நேரமும் உங்கள் கனவிலேயே வாழ்ந்தான். அப்போதெல்லாம் என் சுயநலத்தை விட்டாவது அவனுக்காக உங்கள் கூட வந்திருந்தேனா? அவன் எப்போது போவான் என்று தவம் பண்ணினாற்போல், வாரிக் கொடுத்து விட்டு, வாழ வருகிறேன், நான்...!''

''லலி! இப்படியெல்லாம் ஏன் மனசைப் போட்டுக் குழப்பிக்கிறே? போனதையே நினைச்சா, நடந்தது மாறிடப் போறதா? ஏதோ நாம் கொடுத்து வைத்தது அவ்வளவு தான்னு தேற்றிக்கோ. கோபாலை நினைத்து நான் எத்தனை நாட்கள் துடித்திருக்கிறேன் தெரியுமா? நீயாவது அவனோடு கூடவே இருந்தாய். அந்தப் பாக்கியம் கூட இல்லாதவன் நான்....''

''ஐயோ! நான் எத்தனை பெரிய பாவி! உங்களையும் குழந்தையையும் பிரிச்சது நான்தானே? உங்களை எத்தனை புண்படுத்தி விட்டேன்....''

அவன் சட்டென அவள் வாயைப் பொத்தினான். ''இப்படியெல்லாம் பேசாதே லலி. இழப்பில் நீ நொந்து போயிருக்கிறாய். உன்னைத் தேற்றிப் பாதுகாக்கணும்னு நான் நினைச்சிருக்கேன். நீ இப்படி வருத்தப்படாதே. என்னைப் பொறுத்தவரை நீ மீண்டு வந்ததே எனக்குப் போதும். மயக்கமாக நீ விழுந்த போது நான் என்னமாய்த் துடித்துப் போனேன் தெரியுமா?....''

லலிதா அவனை நேராக நிமிர்ந்து நோக்கினாள். குழந்தையை இழந்த வருத்தத்தில் ஆழ்ந்த முகத்தில் அவன் மீது கொண்ட கனிவும் புலப்படுகிறது. எப்படி நடந்ததைத் தள்ளிவிட்டு அவளை மன்னிக்க முன்வந்து விட்டான் அவன்! இப்போதும் அவள் கண்கள் கலங்கியே இருந்தன. ஆனால் அந்த அளவு மனம் கலங்கவில்லை. விட்டுப் போயிருந்தவை விலகாமலே கூடிய விந்தை இது. இந்த இடைவெளியில் அவனைத் தவிர வேறு பந்தமில்லை என்று உணர்த்திய விநோதம் இது. எந்தக் கணவனின் பந்தம் கூடாது என்றிருந்தாளோ அவன் தொடுமுன் அவன் இச்சைக்கு அடிமையாகிவிடும் பெண்மை இது. அவன் இடையைச் சுற்றிய கரங்களால் இறுகப்பட்டு அவள் அவன் முகத்தருகே நெருங்கினாள்.

அன்பு வாசலின் தாள் திறந்து மனங்கள் ஒன்றுபடுகின்றன. தாய்மைத் துயரம் சமநிலையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. கணவனின் நேச நிழலில்தான் தாய்மை சாந்தியடையும் போலும்!.... அங்கே மறுபடியும் அது கிளைக்க வாய்ப்பு இருப்பதால்....! ஆ! அந்த நினைவே இழந்த தாய்மைக்கு ஒரு தாகசாந்தி போல் உள்ளதே... இனி எதுவுமே இல்லையென்று அரற்றினாளே அவள்? சௌபாக்கியத்தின் குளிர் நிழலில் அல்லவா அவள் ஒதுங்கி விட்டாள்.! அம்மா அவளைப் பிடித்துத் தள்ளாவிட்டால் அந்த நிழலின் அருமையை அவள் உணர்வாளோ, என்னவோ?

''லலிதா! மனத்துக்குப் பிடிக்காமல் தானே புறப்பட்டு வந்தாய்....?''



சாவித்திரியின் நான்கு நூறு!

இதுவரை நூற்றி ஐம்பது படங்களில் நடித்துள்ள சாவித்திரி நான்கு நூறாவது படங்களில் நடித்திருக்கிறார் என்றவுடன் ஆச்சரியப்படுகிறீர்களா?

எப்படி நான்கு நூறாவது படங்கள்?

- 'பாதாள பைரவி' மூலம் திரைக்கு வந்த சாவித்திரிக்கு 'கொஞ்சும் சலங்கை' நூறாவது படமாக அமைந்தது.
- மாடர்ன் தியேட்டர்ஸ் 'வல்லவனுக்கு வல்லவன்' படம் தயாரிப்பாளர்களுக்கு நூறாவது படமாக அமைந்தது. இதிலும் சாவித்திரி நடித்திருக்கிறார்.
- நடிகர் திலகத்தின் நூறாவது படமான 'நவராத்திரி'யிலும் சாவித்திரி நடித்துள்ளார்.
- அது மட்டுமல்ல, காதல் மன்னனும், சாவித்திரியின் வாழ்க்கைத் துணைவருமான ஜெமினி கணேசனின் நூறாவது படமான 'சீதா' படத்திலும் அவர் நடித்திருக்கிறார்.

இப்படியாக அவர் நான்கு நூறாவது படங்களில் நடித்திருக்கிறார்.

— ஆர். சுவாமுல்லா

''ஆமாம்! அப்போது அப்படித்தான்... ஆனால் இப்போது நினைத்தால் என் பிடிவாதம் பைத்தியக்காரத்தனமாகப் படுகிறது....''

''உண்மையாகவா? ஆனால் குழந்தை இருக்கும்போதே அப்படி ஒரு மனமாற்றம் ஏற்பட்டிருந்தால் எத்தனை நன்றாக இருந்திருக்கும்!'' — அவன் பெருமூச்செறிந்தான்.

''வேண்டாம்! அந்த இழப்பை இனி ஞாபகமூட்டாதீர்கள். என்னைக் குத்திக் காட்டாதீர்கள்... குழந்தை கோபு என்னைப் பிரியவே மாட்டான். அவன் மறுபடியும் என்னிடம் வருவான்!'' அவள் குரலின் அழுத்தம் ஆழமான நம்பிக்கையைப் புலப்படுத்தியது.



கரியும் நெருப்பும்

காலை எட்டு மணி இருக்கும். வழக்கத்துக்கு மாறாக அந்த நேரத்துக்குள்ளாகவே குளித்து விட்டு அவசரத்துக்கு உதவும் என்ற நினைப்பில் தனக்கென்று உள்ள ஒரே ஒரு பழைய 'டிரங்க்' பெட்டியில் வைத்திருந்த சலவை வேட்டியையும், சட்டையையும் எடுத்து உடுத்திக் கொண்டு தலைவாரிக் கொள்ளக் கண்ணாடிக்கு முன் வந்து நின்றான் கோவிந்தன்.

''என்ன அண்ணா, கொஞ்சம் பவுடர் தரட்டுமா?'' என்றாள் சரோஜா சிரித்துக் கொண்டே.


''நானே கேட்கலாம் என்று நினைத்தேன்.'' கோவிந்தனும் சிரித்துக் கொண்டே பதில் சொன்னான்.

தனது அறைக்குச் சென்று திரும்பிய சரோஜா பௌடர் டப்பாவை அவனிடம் நீட்டியவாறே, ''அண்ணா, பௌடர் விலை ஏறிப் போச்சு! என் சம்பளம்மட்டும் இன்னும் ஏறல்லே! பௌடரைக் கொஞ்சமாப் போட்டுக்க!'' என்று சொல்லிச் சிரித்தாள்.

சமையல் அறைக்குள்ளிருந்து அங்கு வந்த அவர்களுடைய தாய் சின்னம்மாள் தன் மகனின் கோலத்தைப் பார்த்துவிட்டு, ''என் புள்ளே இன்னைக்கு எங்கே போய் உத்தியோகம் பார்க்கப் போறான்?'' என்றாள்.

''அம்மா, சேதி தெரியுமா உனக்கு! என் நண்பன் நாகராஜன் வந்திருக்கான்! இப்போ அவன் சாதாரண நாகராஜன் அல்ல; சுரங்க முதலாளி அம்மா! என் நண்பன் நிச்சயம் எனக்கு உதவி செய்வான் அம்மா! இப்போது அவனைப் பார்க்கத்தான் போகிறேன்!'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

அவ்வூரிலேயே நாகராஜனும் கோவிந்தராஜனும்தான் நெருங்கிய நண்பர்கள். கோவிந்தன் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முழுமையாய் முடித்துக் கொண்டு வெளி வந்தவன். நாகராஜன் அப்படியல்ல. நாகராஜனுக்கு ஒன்பதாம் வகுப்புக்கு மேல் படிப்பு ஏறவில்லை. 'என் மூளையில் ஏறாத



'காடவன்'

நாகராஜன் கையில் எப்போதும் பணப் புழக்கம் இருந்து கொண்டேயிருக்கும்... கோவிந்தனோ அந்தப் பணப் புழக்கத்தை அறியாதவன். அப்போது அவன் குடும்பத்தி லும் கஷ்டங்கள் இருந்தன. நஞ்சை நிலம் கொஞ்சம் இருக்கது என்றாலும் அதிலிருந்து கிடைக்கும் நெல் சாப்பாட்டுக்கு மட்டுமே போதக்கூடியதா யிருந்தது.

அவன் தங்கை சரோஜாவும் அப்போது படித்துக் கொண்டிருந்தாள். செலவுக் கஷ்டங்களெல்லாம் கோவிந்தனின் தாய் சின்னம்மாள் தலையில்தான் விழுந்திருந்தன.

படிப்பு எனக்கு எதற்கு?' என்று அவன் படிப்பை உதறித் தள்ளிவிட்டு ஊர் சுற்ற ஆரம்பித்து விட்டான்.

நாகராஜன் பள்ளியை உதறித் தள்ளிய இரண்டாண்டுகளுக்குள் கோவிந்தனும் பள்ளியிலிருந்து வெளிவந்து விடவே பள்ளியிலேயே நண்பர்களான அவ்விருவரும் மீண்டும் ஒட்டிக் கொண்டு விட்டனர்.

இப்போது நாகராஜனை மட்டும் தனியாகவோ அல்லது கோவிந்தனை மட்டுமோ எங்கும் பார்க்க முடியாது. அவ்விருவரையும் சேர்ந்தேதான் பார்க்க முடியும்.

ஒரு நாள் காலையில் நாகராஜனும் கோவிந்தனும் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்! பலகாரம் சாப்பிட்டு விட்டு, காப்பியை எடுத்து வாயருகே கொண்டு போன நாகராஜன் காப்பியைப் பருகாமல், கோவிந்தனைப் பார்த்து, ''கோவிந்தா! உனக்கு உடம்பு சரியில்லையா?'' என்றான்.

''உடம்புக்கு ஒன்றுமில்லையே!'' என்றான் கோவிந்தன்.

''உடம்புக்கு ஒன்றுமில்லாத போது முகத்தில் மட்டும் தெளிவு இல்லாமல் போகுமா?''

''நாளைக்கு.... நாளைக்கு... தஞ்சாவூரிலே ஓர் 'இண்டர்வியூ'வுக்குப் போகணும். பேப்பரைப் பார்த்துச் சும்மா எழுதிப் போட்டேன். கார்டு வந்திருக்கு!''

''நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே, நான் இருக்கேன்! நாளைக்கு நீ தைரியமா 'இண்டர்வியூ'வுக்குப் போகலாம்'' என்று சொல்லி விட்டு ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கோவிந்தனிடம் கொடுத்து, ''நாளைக்குத் தஞ்சாவூருக்குப் போக இதை வைச்சுக்க!'' என்றான்.

அதைப் பெற்றுக் கொண்ட கோவிந்தன் ஆழ்ந்த பெருமூச்சு ஒன்று விட்டான்.

மறுநாள் காலையில் கோவிந்தன் ரயிலில் தஞ்சாவூருக்குப் போய்க் கொண்டிருந்தான். அப்போதும் அவன் எண்ணங்கள் நாகராஜனையே வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

"போகும் இடத்தில் எனக்கு வேலை கிடைத்து விட்டால் நான் நாகராஜனை விட்டுப் பிரிய வேண்டி வருமே! இன்டர்வியூவுக்குப் போகாமல் அடுத்த ஸ்டேஷனிலேயே இறங்கி ஊருக்குத் திரும்பி விடலாமா? வேலைக்குப் போகாவிட்டால் வீட்டுக் கஷ்டங்கள் எப்படித் தீரும்? ஆனால், நான் நாகராஜனை விட்டுப் பிரிய வேண்டி வந்தால்...! கடவுளே, அந்தப் போட்டியில் நான் தோல்வியடைய வேண்டும்! ஆமாம், அப்போதுதான் நான் என் நண்பனுடனேயே இருக்க முடியும்!"

கோவிந்தன் 'போட்டி'க்குப் போனான்! அங்கு கடவுள் அவன் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து விட்டார். ஆமாம், அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. தனக்கு வேலை இல்லை என்றதும் சில நிமிஷங்கள் வரை அவனுக்கு என்னவோ போலத்தான் — மனத்துக்குக் கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது. அந்தச் சில நிமிஷங்களுக்குப் பிறகு நாகராஜனின் நினைவு வந்துவிடவே அவன் மகிழ்ச்சியோடு அவசரம் அவசரமாக ஊருக்குக் கிளம்பி விட்டான்.

கோவிந்தன் ஊர் வந்து சேர்ந்ததும் சேராததுமாக முதல் வேலையாய் நாகராஜனைத் தேடிப் போனான். ஆனால் அப்போது நாகராஜன் வீட்டில் இல்லை. நாகராஜனின் தாய் முற்றத்துக் குறட்டில் ஒரு தூணில் சாய்ந்தவாறு தலைவிரிகோலமாய்க் கண்ணீருடன் காட்சியளித்தாள். நாகராஜனின் தந்தையோ வழக்கம் போல் கூடத்துச் சாய்வு நாற்காலியொன்றில் அமர்ந்து கொண்டு கணக்குக் கட்டுக்களில் மூழ்கியிருந்தார். அவர் கோவிந்தனைக் கண்டுவிட்டு கோவிந்தனைப் பார்த்த விழிகளை அப்படியே பெயர்த்துத் தம் மனைவியின் முகத்தில் வைத்தார். அந்தப் பார்வை, 'உன் பிள்ளையின் தோழன் வந்திருக்கிறானடி!' என்பது போல் இருந்தது.

நாகராஜனின் தாய் பரபரப்போடு எழுந்து, "ஏண்டாப்பா, நீ போகலியா அவன் கூட? நீயும் போயிருப்பாய் என்றல்லவோ நினைச்சேன்...!" என்றாள்.

கோவிந்தனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்னம்மா சொல்றீங்க?"

"என்ன சொல்றேனா, உனக்கு ஒண்ணுமே தெரியாதா?"

கோவிந்தன் தெரியாது என்று தலையசைத்தான்.

"இன்னைக்குக் காலையிலே எங்கேயோ வெளியே போயிட்டு வீட்டுக்குள்ளே நுழைஞ்சான் நாகராஜன்! வீட்டுக்குள்ளே வந்ததுமே 'எனக்கு இப்போ அவசரமா நூறு ரூபாய் வேணும்'னு கேட்டான். நூறு ரூபாயை எடுத்துக் கொடுத்துட்டேன். பணத்தை வாங்கிக்கிட்டு, 'நான் பட்டணம் போறேன்; போய்க் கடிதாசு போடுறேன். இன்னும் பணம் தேவைப்பட்டால் எழுதறேன், உடனே அனுப்பி வை'ன்னு சொல்லிட்டுப் போயிட்டான்!" என்றாள் நாகராஜனின் தாயார்.

கோவிந்தனுக்கு அதிர்ச்சியாக இருந்தது! ஆச்சரியமாகவும் இருந்தது. அவன் குழப்பங்களோடு அங்கிருந்து நகர்ந்து விட்டான்.

இரண்டு மாதங்கள் வரை நாகராஜனைப் பற்றிய செய்தி தெரியவில்லை. கோவிந்தனைக் காணும்போதெல்லாம் நாகராஜனின் தாய் தன் மகனைப் பற்றி அதிகமாக நினைத்துக் கொண்டு அவனைப் பற்றியே அதிகமாகப் பேசி அரற்றிக் கொண்டு கண் கலங்குவாள். அப்போதெல்லாம் கோவிந்தனுக்கும் அழ வேண்டும் போல் இருக்கும்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் கோவிந்தன் நாகராஜனின் வீட்டுக்குப் போனான். வாசலிலேயே அவனைக் கண்டு விட்டு உள்ளிருந்து மகிழ்ச்சி பொங்க ஓடி வந்த நாகராஜனின் தாயார், "ஏண்டாப்பா! உனக்குச் சேதி தெரியுமா? என் பிள்ளை கடிதாசு போட்டிருக்கானே!" என்றாள்.

"அவன் இப்போ எங்கேம்மா இருக்கான்?" என்று கோவிந்தன் ஆசைத் துடிப்போடு கேட்டான்.

"அவனுக்கு வேலை கிடைச்சுட்டுதாம். ஆந்திரப் பிரதேசத்திலே இருக்கானாம். இங்கிருந்து போனவன் பட்டணத்திலே தெரிஞ்சவன் ஒருத்தன்கிட்டே ஒரு வாரம்தான் தங்கியிருந்தானாம். அப்போ புதுசா ஒரு சிநேகிதன் கிடைச்சானாம். அவன்தான் என் பிள்ளைக்கு வேலை தேடிக் கொடுத்திருக்கான். பூமியிலேயிருந்து 'மைக்கா' வெட்டி எடுக்கிற ஒரு கம்பெனியிலேதான் வேலை பார்க்கிறான்! எல்லாம் அவனே எழுதியிருக்கிறான்!"

என்றாவது ஒரு நாள் தனக்கும் அங்கேயே ஒரு வேலை பார்த்து வைத்துக் கொண்டு தன்னையும் அவனிடமே அழைத்துக் கொள்வான். தன்னிடம் பழகியது போல் வேறு யாரிடம் அவனால் பழக முடியும் என்ற நம்பிக்கை மட்டும் ஏனோ கோவிந்தனுக்குத் திடமாயிருந்தது.

நாள், வாரம், மாதங்கள் என்று வளர்ந்து காலம் ஓராண்டாய் உருப்பெற்று விட்டது! இப்போதெல்லாம் கோவிந்தன் முன்பு போல் நாகராஜன் வீட்டுக்கு அவனைப் பற்றி விசாரித்துக் கொண்டு அடிக்கடி செல்லுவதில்லை.

சரோஜா சம்பாதித்தும்கூட அந்தக் குடும்பத்தின் பொருளாதாரக் கஷ்டங்கள் தீர்ந்தபாடில்லை!

ஒருநாள் மாலை நாகராஜன் கோவிந்தனைத் தேடி வந்தான்.

உபாசகனின் ஸ்தூலப் பார்வைக்கே தெய்வம் காட்சியளித்து விட்டால், அந்த உபாசகனின் நிலை எப்படி இருக்கும்?

கோவிந்தன் நாகராஜனைக் கண்டுவிட்டு நிலை தடுமாறித்தான் போனான்.

நண்பர்கள் இருவரும் முன்பு அவர்கள் வழக்கமாய்ச் செல்லும் ரயில் நிலையத்துக்கு அப்பாலிருந்த அந்தத் திறந்தவெளிக்கே சென்று உட்கார்ந்து கொண்டனர். கோவிந்


Pond's
Dreamflower talc
Dreamflower talc


Kleertone
நேர்த்திக்கும்
சிக்கனத்திற்கும்
கிளியர்டோன்
இஸ்திரிப் பெட்டிகள்:
"எலகெண்ட்" இஸ்திரிப் பெட்டி.
"இம்பீரியல்" ஆட்டோமேடிக் இஸ்திரிப் பெட்டிகள்.
கெட்டில்கள்:
சூடெதிர்க்கும் கைப் பிடியும், குமிழ் மூடியும், பாதமும் பொருத்தியது "இம்பீரியல்" கெட்டில்.
சாஸ்-பேன் கெட்டிலும் கிடைக்கிறது.
டோஸ்ட்டர்:
முறுகலான பொன்னிற டோஸ்ட்டுகள் தயாரிக்க.
ரேடியண்ட் ஹாட் பிளேட்:
ஒரு தொல்லையில்லை, பரபரப்பு இல்லை— உங்கள் சமையல் வேலையே இலகுவாகிவிடும்.
மடக்கக்கூடிய எஃகு பர்னிச்சர்:
கனமும் சிக்கனமும் பொருந்தியவை. சோபிக்கும் வர்ணங்களிலே நாகரீக வடிவழகு வாய்ந்தவை.
கிளியர்டோன் தயாரிப்புகள் என்றுமே உறுதியான பாதுகாப்பும் நிலையான மதிப்பும் உங்களுக்குக் கிடைப்பது நிச்சயம். செப்பம் செய்வதிலே யாதொரு தொல்லையும் இராது. ஏனெனில், நம் நாடெங்கும் இவ் வசதிகள் கிடைக்கின்றன. தவிர இத் தயாரிப்புகள் எல்லாவற்றுக்கும் 1 வருட கால உத்தரவாதம் தரப்படுகின்றன.
நல்வாழ்வுக்கே கிளியர்டோன் தயாரிப்புகள்
முக்கியமான எல்லா எலக்ட்ரிகல் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
GRA
ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிட்.
பம்பாய், கல்கத்தா, சென்னை, டெல்லி, பெங்களூர், செகந்திராபாத், பாட்னா.

தன் தன்னுடைய அவலத்தை யெல்லாம் நாகராஜனிடம் சொல்லிக் கொண்டே இருந்தான். குனிந்து கீழே பார்த்தவாறு அங்கு கிடந்த ஒரு தென்னை ஈர்க்கால் தரையில் தன் பெயரையே கிறுக்கிக் கொண்டிருந்த நாகராஜன் சட்டென்று நிமிர்ந்து கோவிந்தனைப் பார்த்து, "அதெல்லாம் இருக்கட்டும்,—கோவிந்த்! நீ முதலில் என்னை மன்னிக்க வேண்டும். நான் உனக்குச் சொல்லாமல் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறேன்.... அதற்குத்தான்!" என்றான்.

"என்ன! உனக்குக் கல்யாணமாகி விட்டதா!"

"ஆமாம்பா! திடீர்னு பட்டணத்திலே ஒரு நல்ல இடமாக் கிடைச்சது! உடனே அம்மா அப்பாவுக்குத் தெரியப்படுத்திச் சீக்கிரமாவே முடிச்சுக்கிட்டேன். கல்யாணமெல்லாம் பட்டணத்திலேதான் நடந்தது. இங்கே வராமல் அங்கிருந்தபடியே நேரா ஊருக்குப் போயிட்டோம். நீதான் இப்போதெல்லாம் வீட்டுப் பக்கமே வரதில்லையாமே."

கோவிந்தனுக்கு ஏமாற்றமாக இருந்தது. அதைப் புரிந்து கொண்ட நாகராஜன் கோவிந்தனைப் பார்த்து, "நீ வருத்தப்படுவேன்னுதான், உனக்கு என் மனைவியை அறிமுகப்படுத்தி வைக்க அவளையும் அழைச்சுக்கிட்டு வந்திருக்கிறேன். பார்க்கப்போனால் அவள் இங்கு வரவேண்டிய அவசியமே இல்லே. இன்னைக்கே நான் அவசரமா ஊருக்குப் போகணுமே. உனக்காகத்தான் அவளையும் அழைச்சுக்கிட்டு வந்தேன்!" என்றான்.

கோவிந்தனின் முகம் மலர்ந்து விட்டது. நாகராஜனும் உற்சாகமாக, "என் மனைவிக்கு 'விஜயா' கபி'ன்னு பேரு! அது நல்ல பெயராயிருந்துங்கூட நான் அவளைப் பாப்பான்னுதான் கூப்பிடுவேன்" என்றான் சிரித்தவாறே.

கோவிந்தனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவ்வாச்சரியத்தோடேயே அவன் நாகராஜனை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.


"இதோ பாருப்பா! எனக்கு ஓர் ஆசை இருக்கு. அது சீக்கிரமே நடந்தாகணும். அப்புறம் நீ கவலைப்பட வேண்டியதே இல்லே. உனக்கு மட்டுமில்லே, இன்னும் எத்தனையோ பேருக்கு நான் வேலை கொடுப்பேன்."

"என்ன ஆசை அது?"

"இப்போது நான் 'மைக்கா' தோண்டி எடுக்கிற ஒரு கம்பெனியிலேதானே சுரங்க மேற்பார்வையாளனாக வேலை பார்க்கிறேன். நானே ஒரு 'பிளாட்' எடுத்துட்டா அப்புறம் முதலாளிதானே!"

கோவிந்தனுக்கு உடம்பு சிலிர்த்தது.

அவ்விருவரும் அங்கிருந்து புறப்பட்டு நாகராஜனின் வீட்டுக்குச் சென்றனர். அங்கு நாகராஜன் கோவிந்தனுக்குத் தன் மனைவியை அறிமுகப்படுத்தி வைத்தான். நாகராஜனுடைய மனைவியைப் பார்த்து அவளோடு இரண்டு வார்த்தைகள் பேசுவதில் கோவிந்தனுக்கு அப்போது கூச்சமே ஏற்பட்டது. என்றாலும் அவள் அப்பெண் உள்ளே போக முற்பட்டதும் அவளைத் திரும்பி ஜாடையாக ஒரு முறை பார்த்துவிட்டு, 'நானும் இப்படி



வீட்டுச் சொந்தக்காரர்: மாடிப் படியிலே ரிப்பேர் வேலை நடந்து முடிகிறவரை, இந்த ஏணி வழியாக நீங்க மாடிக்குப் போய் வரலாம்!

ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டால்...... அது என்றால் முடியுமா?' என்று மனத்துக்குள் ஏக்கத்தோடேயே எண்ணிக் கொண்டான். அவன் நெஞ்சின் அசைவுகளைப் புரிந்து கொண்டு விட்டாற்போல் நாகராஜன் கலகலவென்று சிரித்தவாறே, கோவிந்தனுக்கு முன் நேருக்கு நேராய் வந்து நின்று கொண்டு அவன் இரு தோள் பட்டைகளையும் தன் இரு கைகளாலும் பற்றி இழுத்தபடியே "நடக்கும், நடக்கும்!" என்றான்.

அன்று போனவன்தான் நாகராஜன். மறுபடியும் இரண்டாண்டுகள் கழிந்து விட்டன. இப்போதுதான் அவன் வந்திருக்கிறான்.

பத்து நாட்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை கோவிந்தன் கடை வீதியில் யதேச்சையாக நாகராஜனுடைய தாயாரைச் சந்தித்தான்.

"அடே, கோவிந்தா! உனக்குச் சேதி தெரியுமோ? இப்போது என் பிள்ளை ஒரு சுரங்க முதலாளிடா! ஒரு வருஷம் ஆகப் போகிறதாம் அவனுக்கு அனுமதி கிடைச்சு. வேலைகளை யெல்லாம் தொடங்கிக் கனிப் பொருளையும் வெட்டி எடுக்க ஆரம்பிச்சதும் தான் எங்களுக்குக் கடிதாக எழுதியிருக்கிறான். அவன் வைச்ச குறி தவறிப்போகலே!" என்றாள் நாகராஜனுடைய தாய்.

அவள் முகத்தில் பெருமிதம் குடிகொண்டிருந்தது. கோவிந்தனை வீட்டுக்கு வரச் சொல்லி விட்டுப் போய் விட்டாள்.

கோவிந்தன் அன்று நாகராஜன் வீட்டுக்குப் போனதும், "வாடாப்பா, கோவிந்தா!" என்று வரவேற்றுக் கொண்டு உள்ளேயிருந்து நாகராஜனுடைய தாய் மரகதத்தம்மாள் வந்தாள்.

"நாகராஜன் எங்கே அம்மா?" என்றான் கோவிந்தன்.

"நீ இந்த அறையிலேயே உட்காரு. நாகராஜன் வருவான். இப்போது அவன் குளிச்

சிக்கிட்டு இருக்கிறான்......!'' என்று சொல்லி விட்டு அந்த அம்மாள் தெருவில் இறங்கி எங்கோ நடந்தாள்.

கோவிந்தன் அவ்வறையினுள் நுழைந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டவுடனேயே சற்று அண்ணாந்து எதிர்ச் சுவரில் மாட்டப்பட்டிருந்த நாகராஜனின் புகைப் படத்தைப் பார்த்தான். அவன் கண்கள் அகலமாய் விரிந்தன. அப்போது அந்தக் கண்கள் பெண் பிள்ளை ஒருத்தியின் கண்களாய் ஆச்சரியத்தைக் காட்டின. அங்கு முதன் முதலாய் அவன் கவனத்தைக் கவர்ந்ததே அப்புகைப்படம்தானே! சூட்டும் கோட்டும் அணிந்து நாகராஜன் வெகு கம்பீரமாய்க் காணப்பட்டான்.

அன்று காலையில்தான் அங்கு புதிதாய் மாட்டப் பட்டிருக்கும் அப்புகைப் படத்தினின்றும் தன் கண்களைப் பெயர்த்து, பார்வையைத் தாழ்த்தித் தனக்கு முன்னும் மேசை மேல் இருக்கும் சாய்வுப் பலகையைப் பார்த்தான் கோவிந்தன்.

பச்சை வண்ணம் கொண்ட அப் பலகையில் எடுப்பாய்த் தெரியுமாறு சிவப்பு எழுத்துக்களில் சில வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன! கோவிந்தன் அவைகளைப் படித்தான்:

''நெருப்புக்கு இருக்கும் சக்தி கரித்துண்டுக்கு இருக்க முடியாது! சின்னஞ் சிறிய நெருப்புத் துண்டுதான் என்றாலும், அது தன் மீது வந்து கவியும் இருளைச் சுட்டுப் பொசுக்கி விட்டு இருளிலும் ஒளியாய்ப் பொலியவில்லையா? அன்றும் இன்றும், ஏன் இனி என்றுமே நான் அந்த நெருப்புத் துண்டுதான். அப்படி யிருப்பதுதானே என் இலட்சியமும்கூட!'' —நாகராஜன்.

கோவிந்தனுக்கு வியப்பாக இருந்தது. 'நாகராஜனா இப்படி எழுதி வைத்திருக்கிறான்!' என்று எண்ணிக் கொண்டு அவன் திரும்பத் திரும்ப இரண்டு மூன்று முறைகள் அவ்வாசகங்களைப் படித்தான்!

''நெருப்பு — கரி, நெருப்பு — கரி!'' என்று அவன் மனம் முணுமுணுத்துக் கொண்டது.

நெருப்புக்கும் கரிக்கும் உள்ள வித்தியாசத்தைக் கோவிந்தன் இப்போது தெரிந்து கொண்டு விட்டான். நெருப்பு சுடும், கரி சுடாது என்ற வித்தியாசத்தை யல்ல அவன் இப்போது தெரிந்து கொண்டது. அதற்கு சிந்தனையும் தேவையில்லையே! நெருப்புக்கு உள்ள ஆற்றலையும் — அதாவது நாகராஜன் எழுதி வைத்திருந்தது போல் தன் திறனுக்குள்ள அளவுக்காவது இருளைச் சுட்டுப் பொசுக்கிவிட்டு ஒளியா பொளிரும் சக்தியையும், கரிக்கு அந்தச் சக்தி இல்லாமையையும் — அதாவது இருளோடு இருளாய் அவ்விருளிலேயே பட்டுப் புதைந்து போகும் தன்மையையும்தான் அவன் இப்போது புரிந்து கொண்டான்!

கோவிந்தனுக்குத் தன்னை விஷம் தீண்டி விட்டாற் போல் ஒரு பீதி ஏற்பட்டது. அவன் பரபரப்போடு அண்ணாந்து சுவரில் மாட்டியிருந்த நாகராஜனின் புகைப்படத்தைப் பார்த்தான். ''''நான் வெறும் கரிக் கட்டையாய்க் கிடந்தே எத்தனை ஆண்டுகளை இழந்து விட்டிருக்கிறேன்!''என்ற எண்ணம் அவனுள் வலிமை பெற்றது.

கோவிந்தன் தன் கையிலிருந்த புத்தகத்தை மேஜை மீது விரித்தபடியே வைத்து விட்டுத் தனக்கு முன்னால் அம்மேசையிலிருக்கும் அப்பச்சை வண்ணச் சாய்வுப் பலகையைப் பார்த்தான். பிறகு திரும்பவும் அந்தக் கனத்த புத்தகத்தைப் பார்த்தான். இப்போது அவனுக்குள்ளேயே அச்சம் மறைந்து போய்ச் சிரிப்பு ஏற்பட்டது. உதடுகள் இலேசாகப் பிரியும் அளவுக்கு ஒரு முறை சிரித்துக் கொண்டான் அவன்.

நோக்கம் ஏதுமற்று நிலை கொள்ளாது, அசையும் விழிகளால் இப்போது கோவிந்தன் அந்தப் பச்சை வண்ணப் பலகையையும், அங்கு கனத்துக் கிடக்கும் புத்தகத்தையும் மாறி மாறிப் பார்த்தான். நடுக்கமான அவன் மனத்திலும் அப்போது சில எண்ணங்கள் எழத்தான் செய்தன!

''நாகராஜன் தன்னை நெருப்பு என்று சொல்லிக் கொள்ளுகிறானே, அவன் வேலை வெட்டி என்று ஏதுமில்லாது என்னோடு சுற்றிக் கொண்டிருந்தானே அப்போதும் அவன் நெருப்புதானா? அப்படித்தான் என்றால் அவனோடு ஒன்றிக் கிடந்த நானும் ஏன் நெருப்பாகி விடவில்லை?''

நெருப்பிற் பட்ட கரியும் கனிந்து கனலாகிப் போவதை அவன் பார்த்திருக்கிறானே!

அவன் தொடர்ந்து சிந்தித்தான்.

உண்மை அதுவல்ல! அவனும் அப்போது என்னைப் போலத்தான் இருந்திருக்கிறான். ஆனால் அவன் என்னைப் போலவே வெறும் கரிக் கட்டையாய்க் கிடந்திருக்கவில்லை. இல்லையே என்று ஏங்காது, அதை எப்படிப் பெற்று வாழ்க்கையில் உயர்வது என்பதைப் பற்றி அவன் ஓயாது சிந்தித்துக் கொண்டிருந்திருக்கிறான். கரி கனலாய் மாறிவிட்ட பிறகு, அக்கனல் துண்டு அடுத்துக் கிடக்கும் ஒரு கரியை விட்டுப் பறந்தோடி விட்டது! விசை கொண்டுவிட்ட ஓர் இயந்திரம் வெறும் இயந்திரத்திடம் அநுதாபம் கொண்டு சுழலாது சும்மா கிடப்பதில்லையே!...

கோவிந்தன் இப்போது நிமிர்ந்து சற்றே சிந்தனையோடு நாகராஜனின் படத்தைப் பார்த்தான். அதே நேரத்தில் ''பாப்பா'' என்ற கம்பீரக் குரல் அடுத்த அறையிலிருந்து ஒலித்தது. மிடுக்கும் வேகமும் கொண்ட அக்குரல் நாகராஜனுக்கே உரியது! குளித்துவிட்டு, உடை மாற்றிக் கொள்ள அவ்வறைக்கு அவன் வந்திருக்க வேண்டும்! மேசைமீதிருந்த தாள்களுள் ஒன்றில் கோவிந்தன் ஏதோ எழுதினான். எழுதியதைப் படித்து விட்டு அவன் மறுபடியும் மறுபடியும் ஏதேதோ கிறுக்கினான். நண்பனுக்குப் பரிசளிக்கவென்று வார்த்தைகளைத் தேடித் தேடி அவசரமாய் ஓர் இலக்கியத்தையே படைத்து விட்டான் அவன்.

இப்போது அவன் முகத்தில் வெற்றிப் பெருமிதம் குடி கொண்டிருந்தது.

புதிதாய்க் கோலம் போட்டுப் பழகும் ஒரு பெண், வைத்த புள்ளி தவறு என்பதை அறிந்து கொண்டு அதை அழித்து விட்டு மறுபடியும் சரியாய்ப் புள்ளி வைத்துக் கோலம் போட்டு வெற்றி காண்பதைப் போன்று, கோவிந்தனின் முகம் பெருமிதம் காட்டியது.



அடுத்த அறையில் இப்போது நாகராஜன் கலகலவென்று சிரிப்பது கேட்டது. கோவிந்தன் பரபரப்போடு நாற்காலியிலிருந்து எழுந்து தான் இருந்த அறையின் நிலைப் படியோரம் வந்தான். பாப்பாவின் குரலும் அடுத்த அறையிலிருந்து சன்னமாய் ஒலித்தது. கோவிந்தன் அங்கேயே தயங்கி நின்று திரும்பி, மறுபடியும் அவ்வறையிலிருந்த நாகராஜனின் புகைப் படத்தைப் பார்த்தான்.

அவன் மெல்லத் தன் கண்களை மூடித் திறந்து திரும்பவும் ஒரு முறை அப்படத்தைப் பார்த்தான். கனவின் தவிப்பு அப்படத்திலிருந்தும் பாய்ந்து வந்து தன்னைத் தாக்குவதாக ஒரு பிரமை அவனுக்கு ஏற்பட்டது. சில்லிட்டுப் போன உடம்பினுள் திடீரென்று சூடு பரவுவதுபோல் ஓர் இதமும் அசாத்தியத் தைரியமும் அப்போது அவனுக்கு உண்டாயின. இதுதான் நிலையான தைரியமோ!

"இதோ வந்துவிட்டேன், கோவிந்த்! ஒரு நிமிஷம்!"

நாகராஜன் அடுத்த அறையிலிருந்தவாறே உற்சாகமாய்க் கூறினான். அவனுடைய அவ்வார்த்தைகளைக் கேட்டுக் கொண்ட கோவிந்தன், சுறுசுறுப்பும், பரபரப்பும் கொண்டு அவ்வறையிலிருந்து, அவ்வீட்டிலிருந்தே 'விருட்' டென்று வெளியேறினான்!

கோவிந்தன் தன் வீட்டின் படியேறிய போது அவனை வரவேற்றவள் அவன் தங்கை சரோஜாதான்! சரோஜாவுக்கு அன்று அலுவலக விடுமுறையாதலால் அவள் வீட்டில் இருந்தாள். தன் சகோதரன் இவ்வளவு சீக்கிரமாகவே திரும்பிவிடுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அதனால் அவள், "என்ன, அண்ணா, உன் நண்பரை விட்டுப் பிரிந்து இவ்வளவு சீக்கிரமாக வந்துவிட்டாய்! உன் நண்பர் உனக்கு வேலை யில்லை என்று சொல்லி விட்டாரா?" என்றாள் வழக்கமான குறும்போடே!

கோவிந்தன் சிரித்துக் கொண்டே, "நான் அவனைப் பார்க்கவே யில்லையே" என்று சொல்ல நினைத்தவன், அப்படிச் சொல்லாது, "நான் அவனை வேலை கேட்கவேயில்லையே!" என்றான்.

சரோஜாவுக்கு வியப்பாக இருந்தது. நிலைப்படியோரம் நின்று கொண்டு தன் மகளின் கேள்வியையும், அதற்குத் தன் மகன் சொன்ன பதிலையும் கேட்டுக் கொண்டிருந்த சின்னம்மாள் இப்போது விலகிக் கொண்டு கோவிந்தன் வீட்டினுள்ளே செல்ல வழி விட்டாள். கோவிந்தனைப் பின் தொடர்ந்து சரோஜாவும் உள்ளே சென்றாள்.

கோவிந்தன் நேராகச் சுவரில் பொருத்தப் பட்டிருந்த நிலைக்கண்ணாடி முன்பாகப் போய் நின்று கொண்டு தன் முகத்தை அக்கண்ணாடியில் பார்த்துக் கொண்டான்.

"உன் அழகு அதற்குள் குலைந்து போய் விடவில்லை, அண்ணா!" என்று கூறிய சரோ, அதனைத் தொடர்ந்து அவனை ஒரு கேள்விக் குறியாகப் பார்த்தாள். கோவிந்தன் கலகலப்பாய்ச்சிரித்தான். அப்படிச்சிரித்துக்கொண்டே திரும்பித் தன் தங்கையைப் பார்த்தான்.

"சரோஜா, நீண்ட காலமாகப் பழகிய நெருங்கிய நண்பன் ஒருவன்தான் எனக்கு வேலை கொடுக்க வேண்டும், உதவ வேண்டும் என்பதில்லை. நேற்றுப் பழக வந்தவன், அல்லது நாளை அறிமுகமாகும் ஒருவன்கூட எனக்கு வேலை கொடுக்கலாம், உதவலாம்! என் மனத்தில்தான் உற்சாகமும் உறுதியும் இருக்க வேண்டும். வாழ்க்கையில் உயர்வு பெற வெறும் எண்ணங்கள் மட்டும் போதா. அவ்வெண்ணங்கள் சரியானவையாகவும் இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக எழுச்சி வேண்டும்" என்று கூறும்போது அவன் வார்த்தைகளில் ஏதோ ஒரு தீர்மானம் கலந்திருப்பதாகத் தோன்றியது.

> சக்திக்கு மீறிய வரிகளை விதித்து மக்களைத் துன்புறுத்தக் கூடாது. அது விபரீத பலனை அளிக்கும். பாற்கடலைக் கடைந்த பொழுது அது உச்சை சிரவம் என்னும் வெள்ளைக் குதிரையைத் தந்தது; கௌஸ்துப மணியைத் தந்தது; மீண்டும் மீண்டும் தொந்தரவு தந்த பொழுது 'ஆலகாலம்' என்னும் விஷத்தையே கக்கியது.
>
> —ஒரு வடமொழி சுலோகம்

"அண்ணா! இப்போதுதான் உன்னை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது!" என்றாள் சரோஜா சிரித்துக் கொண்டே.

அவள் வார்த்தைகளைக் கேட்ட கோவிந்தனுக்கு ஏனோ நாகராஜனின் நினைவு வந்தது. தன் நெஞ்சத் தளத்திலேயே இஷ்ட தேவதையைத் தியானிக்கும் ஓர் உபாசகனைப் போல் அவனும் நாகராஜனின் கம்பீரத்தைத் தன்னுள்ளேயே கண்டான். அப்போதே அவனுக்குத் தான் நாகராஜனின் வீட்டில் நாகராஜனுக்கு என்று எழுதி வைத்துவிட்டு வந்த அக்கடிதத்தின் நினைவும் எழுந்தது.

"நாகராஜ்! இப்போது நீ என்னைப் பார்த்திருந்தால், முதன் முதலாக உனக்கு என் மீது ஓர் அநுதாபம்தான் எழுந்திருக்கும். அறிவு கொண்டு விட்ட என்னால் இனிமேல் அதையெல்லாம் விரும்ப முடியுமா?

நண்பா, நீ எனக்கு வேலை கொடுக்கலாம். அல்லது பொருளை அள்ளிக் கொடுத்துப் 'பிழைத்துக் கொள்' என்றும் சொல்லலாம். ஆனால், இவற்றையெல்லாம் நான் காலம் தள்ளலாமே யொழிய உன்னைப் போல் ஒரு மனிதனாக வாழ முடியுமா?

நண்பா! நீ இவற்றுக்கெல்லாம் மேலாக உன்னையுமறியாது என்னுள் எழுச்சியையல்லவா ஏற்படுத்திவிட்டாய்! உன்னைத் தவிர வேறு யாரால் எனக்கு இவ்வுதவியைச் செய்ய முடியும்? நாகராஜ், நீ என்னைத் தேடி என் வீட்டுக்கு வரவேண்டாம். இதையொரு கோரிக்கையாக மதிப்பாய் என்று நினைக்கிறேன். நானே முயன்று உன்னைப் போல் கனிந்த கனவாக மாறி விரைந்து வந்து உன்னைச் சந்தித்து மகிழ்கிறேன். இதை நீ நிச்சயமாய் நம்பலாம்! — கோவிந்தன்."

கோவிந்தனுக்கு உடம்பு சிலிர்த்தது. அவன் மறுபடியும் திரும்பிக் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டான்.

வாழ்க்கையின் தவம்

ஆர். சந்திராபாய்



ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து நாற்காலியில் உட்கார்ந்ததுமே வேகமாக ஓடி வந்தார் டாக்டர் வெங்கடேஷ்.

''என்ன வெங்கடேசப் பெருமாள்? சேவல் கூவும்போதே சுப்பிரபாத தரிசனம்?'' என்றேன்.

''சேகர்! கேவலம், இந்தச் சேவல் தரிசனம் கிடக்கட்டும்! இந்த விசுவரூப தரிசனத்தைப் பார்!'' என்று ஒரு தினச் செய்தித்தாளைப் பிரித்துப் போட்டார் வெங்கடேஷ்.

''அட! நம்ம சீனு! அமெரிக்காவுக்குப் போகிறானா? பலே!''

''நம்ம சீனு என்று சொல்லாதேடா! நீயும் நானும் இந்த நாற்பது வயதுக்குள் முழுக் கிழமாகக் குண்டு சட்டிக்குள்ளேயே குதிரை ஓட்டுகிறோம். அதே வயதான இந்த டாக்டர் ஸ்ரீநிவாஸனின் முகத்திலே வீசுகிற தேஜஸைப் பாரேன்! அதிர்ஷ்டத்துக்கு மறுபெயர் ஸ்ரீநிவாஸன்!''

''அதுவும் உண்மைதானே!''

''இவனுக்குப் பகவான் சதாசர்வதா துணை இருக்கிறாரடா!''

பகவான்!



இந்த வார்த்தை விஞ்ஞான சாஸ்திரத்தை நம்பும் ஒரு சஸ்திர நிபுணரின் வார்த்தை! இது அஞ்ஞானமா? மெய்ஞ்ஞானமா?

என் அருகிலிருந்த ஸ்டூலில் வந்து உட்கார்ந்து விட்டார் ஒரு நோயாளி.

எங்கள் இருவரின் பேச்சைத் தொடர விடவோ, ஸ்டெதாஸ்கோப்பை எடுத்துக் கழுத்தில் மாட்டிக் கொள்ளவோகூட அவகாசம் தரத் தயாராயில்லை நோயாளிகள்.

காலையிலிருந்து காத்துக் கொண்டிருக்கும் தாபம் அவர்களுக்கு, டாக்டரை மனுஷனாகவே நினைக்க இடம் தரவில்லை.

பொது மருத்துவ மனையில் தொழில் புரியும் டாக்டர்கள் வெறும் யந்திரங்கள் என்று நினைக்கிறார்கள். நோயாளிகள்தான் அவர்களை யந்திரங்களாக்குகிறார்கள். பிறகு, "டாக்டர்களுக்கு இதயமே இல்லை, இரும்பாகப் பார்ப்பதுபோல் கவனிக்கிறார்கள். நமக்கு வைத்தியம் பார்ப்பதற்குத்தானே சர்க்காரில் இவர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள்!" என்று கரிக்கிறார்கள்.

டாக்டர்களும், தசை நரம்பால் ஆன மனிதப் பிண்டங்கள்தான்; அவர்களுக்கும் ஆசை, நிராசை, பந்தம், துயரம் எல்லாம் உண்டு என்பது தெரியவில்லை.

பிரைவேட் நர்ஸிங் ஹோமில் ஈஸிசேரில் உட்கார்ந்தால் நேரம் போவது தெரிவதில்லை. அதோடு டாக்டரின் 'மூடு' கலைந்து விடப் போகிறதென்று சத்தமிடாமல் கிசுகிசுவென்று பேசவும் தெரிகிறது இவர்களுக்கு.

என் சிந்தனைச் செடி முளைத்து இலை விடத் தொடங்குவதற்குள் கிள்ளி எறிந்து விட்டு, நோயாளியைக் கவனிப்பதில் ஈடுபட்டேன். கூட்டம் கரைந்துபோனதும் கண்கள் சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தன. மணி ஒன்று. தினமும் இதே கதைதான்.

சாப்பாட்டு மேஜையில் உட்கார்ந்ததும் சிந்தனை மீண்டும் துளிர் விட ஆரம்பித்தது. கிள்ளிய இடத்திலிருந்து. எத்தனை வெட்டினாலும் மீண்டும் புசுபுசுவென்று கிளம்பியது.

டாக்டர் ஸ்ரீநிவாஸன்!

இந்தப் பெயரைச் சுற்றியது என் மனம். பதினைந்து வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி மனத்தில் பசுமையாக நின்றது.

சதா கலகலவென்றிருக்கும் டாக்டர் ரேவதியின் முகத்திலே, அன்று துயரம் வழிந்து கொண்டிருந்தது.


நோயாளிகள் தாங்களாகவே தங்களுக்குள்ள நோயைச் சொன்னார்கள். அவள் பேனா தானாகவே மருந்தைக் கிறுக்கியது!

அலங்காரப் பிரியையான ரேவதியின் மேக்கப்புக்குப் பின்னால் அவள் விழிகள் ஒளியிழந்து கிடந்தன.

என் உடன்பிறந்தோர் ஐவரும் பெண்கள். அதனால் எப்பொழுதும் என் மனம் பெண்கள் என்றால் நெகிழும்.

வண்ணத்துப் பூச்சி போல் தினத்துக்கு ஒரு புடவையும் ஓர் அலங்காரமுமாக, டைனமோ லைட் சிரிப்புமாக இருப்பவள் இப்படி இருளடைந்து மௌனமாக இருந்தது, என் மனதைக் கசக்கியது. கேட்கலாம் என்றாலோ பயமாயிருந்தது. டாக்டர் ரேவதி மகா துடுக்குக்காரி. அவள் வாய்க்கு யாரும் தப்ப முடியாது.

அவள் பொறுமையாக யாருக்காவது பதில் சொல்கிறாள் என்றால் அது இந்தச் சிறுவுக்குத்தான்.



இதற்குள் நாலு தடவை வந்து போவானே தன் நோயாளிகளைக்கூடப் பொருட்படுத்தாமல்! அவனை ஏனோ இன்று இதுவரை காணோம்! அவன் வரவில்லை என்றுதான் இவளுக்கு வருத்தமோ?

எதற்குமே அசையாத மனம் அவளுடையது என்பது அவள் சக ஹௌஸ் ஸர்ஜன்களான எங்கள் எல்லாருக்குமே தெரிந்த ஒரு விஷயம்.

ஆபரேஷன் தியேட்டருக்கு ஆயத்தமாகக் கையுறையை மாட்டிக் கொண்டிருந்தாள் ரேவதி.

இனியும் பேசாமல் இருப்பது மனிதத் தன்மையல்ல. "என்ன ரேவதி?" என்றேன்.

முக உறைக்குள்ளிருந்து திடுக்கிட்டு என்னை நிமிர்ந்து பார்த்தன, இரு நீலோத்பல விழிகள். மறுவிநாடி குளமாகத் தாழ்ந்து கொண்டன.

"உனக்கு உடம்பு சரியில்லை என்றால் அறைக்குப் போய் ஓய்வு எடுத்துக் கொள். 'சீஃப்' வந்தால் நான் சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு எல்லாம் மைனர் கேஸ்கள்தான்!"

மௌனமாக ஆபரேஷன் உடைகளைக் கழற்றிவிட்டு வெளியேறி விட்டாள் ரேவதி.

மாலை வேலை முடிந்ததும் அறைக்குப் போய் உடை மாற்றியதும் நேரே அவள் அறைக்குப் போனேன். அந்தப் பட்டாம்பூச்சி இத்தனை நிலைகுலைந்து போய் நான் கண்டதே இல்லையே!

உள்ளே போய் உட்கார்ந்து கொண்டேன். எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது?

"எனக்கு ஐந்து சகோதரிகள் இருக்கிறார்கள். நீ ஆறாவது" என்றேன் நான். என் குரல் தழுதழுத்து விட்டது.

ரேவதியோ குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்து விட்டாள். "உண்மையிலேயே எனக்கு அண்ணனோ தம்பியோ இருந்திருந்தால் நான் இந்த நிலைக்கு ஆளாகியிருக்க மாட்டேன்!"

எனக்குக் கபீரென்றது.

'அமேஜான் (பிடாரி) என்று நாங்கள் பெயர் சூட்டியிருந்த இந்த அல்லியையும் ஒரு அர்ஜுனன் வீழ்த்தி விட்டானா?'

"அது யார்?" என் குரல் கரகரத்தது.

"டாக்டர் ஸ்ரீநிவாஸ்! உங்கள் உயிர் நண்பன்!"

கலிகால அர்ஜுனன்! வரிசைப் பற்கள்! சுழலும் விழிகள்! கட்டுமஸ்தான உடல்! தந்த நிறம்! கருண்ட கிராப்பு! இந்த ரதிக்கேற்ற மன்மதன்தான்.

"நீங்கள் அவரிடம் சொல்கிறீர்களா அண்ணா? என் அப்பா எனக்குப் பூரண சுதந்திரம் கொடுத்திருக்கிறார்."

'அந்தப் பூரண சுதந்திரத்தினால் வந்த வினைதானே இது?' என்று சொல்ல நினைத்து அடக்கிக் கொண்டேன்.

தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்ட பின் அணை போட முயலுவதுபோல, அறிவுரை கூற இதுவா தருணம்? தோணி, படகு, எதையாவதுதான் தரணும். என்னை ராம தூதனாக நினைத்துக் கொண்டு நேரே சீனுவின் அறைக்குள் போய் நின்றேன்.

"எப்பொழுதடா கல்யாணம்?" என்றேன் எடுத்த எடுப்பில்.

"யார் கல்யாணம்?" என்றான் திகைத்து.

நான் ரேவதியைப் பற்றிப் பேச்சு எடுத்ததும் அவன் கோபப்படவில்லை.

"என்ன சேகர், உனக்குத் தெரியாதா? எனக்குப் பின் நிற்கும் இரு சகோதரிகளுக்கும் என் வரதட்சிணைப் பணத்திலிருந்துதானே கல்யாணம் செய்யணும். இந்த ரேவதியே ஸ்காலர்ஷிப்பில்தானே படிக்கிறாள்! இதெல்லாம் ஒரு விளையாட்டுத்தானே?"

"சீனு! இது எத்தனை விபரீதமானது என்பதை உணராதவன் போல் விளையாடாதே!" என்றேன் சற்றுக் கடுமையாக.

சீனுவின் முகம் மாறியது.

"சேகர், எழுத்தறிவில்லாத பெண்ணுக்குக் கூட இந்த அளவுக்குப் போகக் கூடாது என்று தெரியுமே! டாக்டர் பட்டம் பெற்றிருப்பவளுக்குக் காரண காரியத்தின் விளைவுகள் தெரியாதா? சரி, ஏதோ உணர்ச்சி வேகம். போகட்டும். நமக்குத் தெரியாத மருந்து வகைகளா?"

அடுத்த தடவை நான் ரேவதியைச் சந்தித்தது, அவள் தன்னைக் காலனின் கைகளிலே ஒப்படைத்துக் கொண்டபோதுதான்.

"அண்ணா! எனக்கு உடன் பிறந்தவரில்லை என்று சில நாட்கள் வருத்தப்பட்டேன். ஆனால் இருந்தாலும் நான் அவர்கள் பேச்சை மதித்திருக்க மாட்டேன். நான் என்ற அகங்காரத்தில் — அல்ல, அந்தகாரத்தில் — நான் துள்ளிக் கொண்டிருந்தேன். என்னைப் போன்றோர் படித்துத் தெரிந்து கொள்ள முடியாது; பட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். நல்லவேளை எனக்கு யாரும் இல்லாமற் போனது.

"டாக்டர் சீனு கொடுத்த மருந்துகளை நான் விரும்பித்தான் ஏற்றேன். ஆனால் பிரபஞ்சத்தைச் சுற்றாமல் நிறுத்தி வைப்பது யார் கையிலும் இல்லை என்பது இப்போது— காலம் கடந்து— புரிகிறது. நடந்தது, நடப்பது நடக்கப்போவது, எல்லாவற்றுக்கும் நானும் கூட்டாளிதான். விட்டில் பூச்சி தெரிந்தேதான் விளக்கை நெருங்குகிறது. அதற்கேற்ற தண்டனையை அது அடையத்தான் வேண்டும்."

ரேவதி மறைந்த பின் நானும் சீனுவும் அதிகம் பார்த்துக் கொள்ளவில்லை.

ஓரிரு வருடங்களில் குடும்பக் கட்டுப்பாட்டு அதிகாரி என்ற பட்டமும், ஒரு லட்சாதிபதியின் மருமகன் என்ற பெயரும் அவனுக்கு ஒருசேரக் கிடைத்தன. ஒன்றாகப் பணி புரிந்து கொண்டிருந்த நாங்கள் இருவரும் இரு வேறு துருவங்களுக்குப் பிரிந்துவிட்டோம்.

பதினைந்து வருடங்களுக்குப் பிறகு மீண்டும் அவன் முகத்தைப் பத்திரிகையில் பார்த்தேன். அதுவும் வேறு யாரோ கொண்டு வந்து காட்ட வேண்டியிருக்கிறது.

என் கால்கள் தாமாக அவன் விலாசத்துக்கு நடந்தன. பழைய சிநேகம் அல்லவா!

என்னைப் பார்த்ததும் ஒரு விநாடி திகைத்து விழித்தவன், "சேகர்!" என்று ஓடி வந்து கட்டிக் கொண்டான்.

இந்த மாதிரி வரவேற்பை நான் உண்மையில் எதிர்பார்க்கவில்லை; திணறிவிட்டேன்.

''என் அறைக்குப் போகலாம் வா.''

ஏர் கண்டிஷன் அறையின் கதவு எங்கள் பின்னால் பூனைபோல் சத்தமிடாமல் சாத்திக் கொண்டது. பிரிஜ்டயரிலிருந்து மேலுட்டுப் பலகாரங்களும், பானங்களும் எடுத்து வந்து என் எதிரே விருந்த டீப்பாயின் மேல் வைத்தான். என் நாவை சுற்றியது.

அந்த மதுக் குப்பிகளை நான் விழித்துப் பார்ப்பதைக் கண்டதும், ''என்ன சேகர்?'' என்று கேட்டான்.

எனக்கு ஒன்றும் பதில் சொல்லத் தெரிய வில்லை. ''ஓ! உனக்குப் பழக்கம் இல்லையா? நீ எல்லாம் கொடுத்து வைத்தவன். உனக்கு இதன் உதவி யெல்லாம் தேவையில்லை!'' என்று கூறிக்கொண்டே எலுமிச்சம்பழ சர்பத் கொண்டு வந்தான்.

''உதவி என்று சொல்வதைவிட 'போதை' என்று சொல்லலாம்!'' என்று திருத்தினேன்.

என் பழைய 'குருநாதர் தோரணை' என்னை விட்டு இன்னும் போகக் காணோம்!

''இரண்டு சொல்லும் ஒன்றுதான்!'' என் முன் சீனு. ''என் நிலையில் இருக்கும் ஜீவன்களுக்குப் போதையின் உதவி ஒரு தேவை! முதன் முதலில் தோழமைக்காகத்தான் குடிக்கிறோம். பிறகு வாழ்க்கையில் ஏற்படும் சிறு சிறு தோல்விகளையும் மறைக்க இதன் துணை தேவை. வாழ்க்கைப் படியில் முன்னேற, முன்னேற, உடலைச் சுற்றிக் கூட்டம் ஏற ஏற உள்ளம் தனிமையில் துடிக்கத் தொடங்குகிறது. எவரையும் நம்ப மறுக்கிறது. உள்ளத்தில் நிரந்தரமாகக் குடியேறி விட்ட இந்தத் தனிமையை விரட்டியடிக்க இந்தக் குடியால் — இந்த மதுவரக்களால் தான் முடியும்!''

தக்காளிப் பழம் போல் ஜீவனுடன் தளும்பிக்கொண்டிருந்த சீனு, ஒரு விநாடியில் சத்தெல்லாம் வற்றிப் போன சருகு மனிதனும் மாறி, மிகுந்த ஆயாசத்துடன் சோபாவில் சாய்ந்து கண்ணை மூடிக் கொண்டான்.

செய்தித் தாளின் போட்டோ படத்தில் கண்ட அந்த உருவத்துக்கும் இதோ எனக்கு மிகச் சமீபத்தில் தளர்ந்து விழுந்து கிடக்கும் இந்த உருவத்துக்கும்தான் எத்தனை வித்தியாசம்! மேக்கப் கலைந்துவிட்ட நடிகனின் முகம் போல் நெற்றியிலும் கன்னங்களிலும் சுருக்கங்கள் தெளிவாகத் தெரிந்தன.

முன் நெற்றிக்கு மேலே இரண்டொன்று நரைகள், நெஞ்சுக் குழியெல்லாம் ஐம்பது வயதுக் கிழவனைப் போல.

கண்ணை விழித்தான் சீனு.

''என்ன பார்க்கிறாய் சேகர்? மனத்துக்குள் தனிமை என்றால் என்னவென்று தெரிய வில்லை இல்லையா? அதை உணர்ந்தவர்களுக்குத்தான் தெரியும். உனக்கெல்லாம் தெரியாது. உன்னைப் போல் வேலையோடு கல்யாணம் செய்து, ஒழுங்கான வாழ்க்கை அமைத்துக் கொண்டு பூரண சுதந்திரத்தைப் பூரணமாய், உடலை ரணமாக்காமல் அநுபவித்து, தன் சுதந்திரத்துக்குத் தானே வேலி யிட்டுக் கொண்டு — அது சரி, உனக்கு எத்தனை குழந்தைகள்?'' என்றான் சீனு இடையே.

''இரண்டு பெண்கள், மூன்று பிள்ளைகள். உனக்கு?''



:''வேலை வெட்டி எதும் இல்லாமல் சும்மா ஊரைச் சுற்றிக்கிட்டிருக்கியே!''

''சும்மா சுற்றலேப்பா! உங்களுக்கு நல்ல மருமகனாகக் கிடைக்கணுமே என்றுதான் இளமும் மெரீனா, ஓட்டல், தியேட்டர் என்று அலைஞ்சிட்டிருக்கேன்.''

''எனக்கா?'' அவன் முகம் வெளிறியது. ''எனக்கு அந்தப் பாக்கியம் இல்லை!''

'பாக்கியம்' என்ற வார்த்தையில் எத்தனை அழுத்தம்! எவ்வளவு உணர்ச்சி! சீனு தொடர்ந்தான்:

''என் மனைவிக்கு ஆறு குழந்தைகள் பிறந்தன. ஆணும் பெண்ணுமாக. அந்த ஆறும் 'ஸ்டில்பார்ன்!' உயிரற்றவை!''

முகத்தை மூடிக் கொண்டான் சீனு. மூச்சு வேகமாக வந்தது.

என் நண்பனைக் கண்டு என் உடலே ஆடியது. கூரையின் வண்ண விளக்கைப் பார்த்தபடி பேசினான் சீனு.

''உன்னைப் பார்க்கும் வரையில் உன் நினைவே இல்லை சேகர். என் பழைய வாழ்க்கை முழுவதையும் அறிந்த நீ ஒருவன் இருக்கிறாய் என்ற நினைவே இல்லை. என்னுள்ளேயே குமுறிக் கிடந்த எரிமலையை உன்னிடம் கொட்டப் போகிறேன். எவரிடமும் மனம் திறந்து பேச முடியாமல், நான் பட்ட, படும் அவஸ்தைகள் அப்பப்பா!....

''உயிரை அழித்துவிட ரேவதிக்கு மருந்து கொடுத்தேன். உயிர் உண்டாக்க என் மனைவிக்கு மருந்து கொடுக்கிறேன். இரண்டிலும் தோல்விதான்.

''இத்தனை செல்வம் கொட்டும் இந்தத் தொழிலிலிருந்து நிரந்தரமாகப் பிய்த்துக் கொண்டு, நான் எதற்கு மேல் நாடு போகிறேன் தெரியுமா? குழந்தைகளின் ஆலோசகனாக ஆவதற்குப் படிக்கப் போகிறேன்.

''அழிப்பதிலும் ஆக்குவதிலும் செலவழித்த என் ஞானத்தை இனி காப்பதில் செலவழிக்கப் போகிறேன்.''

டாக்டர் சீனுவின் முன் நெற்றி மயிர்கள் மெல்ல மெல்லக் கருமையடையும் விந்தையைக் கண்டு அதிசயித்து நின்றேன் நான்.

வட்ட மேஜை

- கொங்குவஞ்சி இங்கு உள்ளது!
- நெஞ்சிருக்கும் வரை!
- கடுமையை எளிமையாக்கியார்!
- திருகாணிகள் கழன்றன!

நண்பர் சோமுவின் சரித்திர நவீனத்தைப் படித்து மகிழ்ந்த பலரில் நானும் ஒருவன். அவர் கதையில் கூறிய சேரரின் தலை நகராகிய கொங்குவஞ்சி இன்று திருச்சி மாவட்டத்தில் உள்ள கருவூராகும். இவ்விஷயத்தை முதலில் தமிழுலகுக்கு அறிமுகப் படுத்தியவர்கள் மகாவித்துவான் ரா. ராகவய்யங்காரும், முதுபெரும் புலவர் மு. ராகவய்யங்காரும் ஆவர். 'வஞ்சிமாநகர்', 'சேரன் செங்குட்டுவன்' எனப்படும் இரு ஆராய்ச்சி நூல்களால் இவ்விஷயத்தைச் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே தெரியப்படுத்தினார்கள். சமீபத்தில் திரு ஐராவதம் மகாதேவன் கண்ட புகழூர் பிராமி சாஸன எழுத்துக்களும் இதையே வலியுறுத்தும். இவ்வரிய சரித்திரச் செய்தியைத் தமிழுலகுக்குக் கதை மூலம் தெரிவித்த திரு மீ. ப. சோமசுந்தரம் அவர்களுக்கு நம் பாராட்டுக்கள்.

பம்பாய்—5 டாக்டர், ரா. விஜயராகவன்
28-7-67 ரீடர், டாடா ஆராய்ச்சிக் கழகம்

"நாட்டின் நலனுக்காகத் தனநாட்டின் இளவரசியை அழுவாடி திருமணம் செய்து கொண்டு தானைத் தலைவனாகப் பதவி ஏற்பது தான் சரியான முடிவு" எனக் கூறும் பொன்மணி, தன் உள்ளத்தை அமரத்துவ நெருப்பிலே இட்டுப் புடமிட்ட பொன்னாகத் திகழச் செய்கிறாள்.

பழனூர்
28—7—67 சரோசா மீனாட்சிநாதன்

சங்க காலத்துக்கும் முற்பட்ட ஒரு காலத்தினைத் துணிவுடன் அடித்தளமாகக் கொண்டு, அன்றைய தமிழ் சமுதாயத்தைத் தமக்கே உரிய பாணியில் தெள்ளிய நீரோடையை ஒத்த அழகு மிளிரும் அமுத நடையில் படம் பிடித்துக் காட்டியிருப்பது நெஞ்சுள்ள அளவும் நினைவில் நிற்பதற்கு உரியது.

மஞ்சக்கொல்லை
28—7—67 அ. செக்அலாவுதீன் பி.ஏ.

'சிவனருட் செல்வர்' என்ற வரலாற்றினைத் தொண்ணூற்றி எட்டு அத்தியாயங்களில் எழுதி முடித்து விட்டார். பிரமாதமாக அமைந்திருந்தது. ஒவ்வொரு வாரமும் படிக்கச் சுவையாக இருந்தது. கடுமையான பாடலைக்கூட எளிமைப்படுத்தி விடுகிறார், புரியும்படி செய்து விடுகிறார்.

கொடியாலம்
28—7—67 கே. வி. எம். சுக்கூர்

சிவனருட் செல்வர் தங்கள்
சீரிய வாழ்க்கைப் பாங்கை
நலந்தரு முறையிற் கூறி
நமையெலாம் மகிழச் செய்து
பவமெலாம் போக்கும் எங்கள்
பண்புறு வாரி யாராம்
தவந்திகழ் முருகன் செல்வர்
தரணியிற் பன்னாள் வாழி.

பல்விதச் சுவையி னோடு
பைந்தமிழ்ச் சுவையும் பண்பும்
மல்கிய சமயப் பற்றும்
மாநிலத்தினர்கள் மேத்த.
நல்லிடச் சிறப்பார்ந் தின்பம்
நாடிட வளரு கின்ற
கல்கியாம் இதழிப் பாரிற்
கனிவுடன் என்றும் வாழி

விழுப்புரம்
28—7—67 வித்வான் இ.மு. சங்கரலிங்கம்

சிதறல்கள் படித்துச் சொக்கிப் போனேன். இப்படி ஒரு சிந்தனைச் சுடர் இது வரை தமிழில் வெளி வந்ததே கிடையாது.

பாராவுக்குப் பாரா என் மூளையிலிருந்து ஒவ்வொரு திருகாணியாகக் கழன்று கொண்டே வந்தது போன்ற பிரமை ஏற்பட்டது. படித்தபின் எப்பேர்ப்பட்ட மன ஓய்வு? Regimentation இல்லாமல், இஷ்டப்படி மூளையை இயங்க விடுவதில் ஒரு எளிய நிம்மதி இருக்கிறது.

அதை நான் பரிபூரணமாகப் பெற்றேன். உங்களுக்குத் தேவலை, மேம்பாக்கத்திலேயே வாசம் செய்கிறீர்கள்!

புதுதில்லி
17—7—67 சுப்புடு

சிறிது தாமதித்துத்தான் ம. ராஜாராமின் 'சிதறல்கள்' படிக்க நேர்ந்தது. தமிழ்ச் சிறுகதையில் நல்லதொரு புது முயற்சி. அம்மாதிரிப் புதுமையான, நயமான ஒரு சிருஷ்டிக்கு இடமளித்ததற்கு என் பாராட்டுக்களை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

'கல்கி'யின் தொடக்கத்திலிருந்து அதன் வளர்ச்சியைக் கவனித்து வருபவன் நான். நம் நாடு பெருமைப்பட்டுக் கொள்ளக் கூடிய சிலவற்றில் 'கல்கி'யும் ஒன்று.

சென்னை—17 ஜ. தியாகராஜன்
26—7—67 (அசோக மித்திரன்)

Printed & published by K. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras 10
Managing Editor: T. Sadasivam.


REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சத
தபால் செலவு தனி

ஸிம்ஸன் கம்பெனியின்

பெர்கின்ஸ் P6V டீசல்

ரீபில்ட் என்ஜின் திட்ட



ஸிம்ஸன் பாக்டரியிலேயே உருவா ரீபில்ட் என்ஜின் பழைய என் னுக்கு பதிலாக கொடுக்கப்படு இந்த திட்டத்தின் கீழ் பெர்கின் என்ஜின்களை உபயோகிப்பவர்க அனைவரும் அவர்களுடைய பழை என்ஜின்களை எத்தனை தடவை வேண்டுமானாலும் எப்பொழு வேண்டுமானாலும் மாற்றிக் கொள் லாம்

மேற்படி ரீபில்ட் திட்டத்தின் அனுகூலங்கள் பின் வருமாறு:

1. ரீபில்ட் என்ஜின்களுக்கு புது என்ஜினுக்குள் எல்லாவிதமான உத்தரவாதமும் உண்டு.
2. ரீபில்ட் என்ஜினை குறைவான விலையில் பெற உதவுகிறது.
3. எப்பொழுது வேண்டுமானாலும் விரும்பிய சமயத்தி கால தாமதமில்லாமல் பழைய என்ஜினை மாற்றி கொள்ளலாம்.
4. இந்த திட்டத்தின் பிரத்தியேக அனுகூலம் என் வென்றால் பெர்கின்ஸ் என்ஜின்களை உபயோகிப்ப களுக்கு அவர்களுடைய என்ஜின்களை அகற் ஸ்பேர் பாகங்களுக்காகவோ ரிப்பேருக்காகவே காத்திருக்கும் கால நஷ்டமில்லாமல் உடனே ரீபில்ட் செய்த என்ஜினை பொருத்திக் கொள் வசதி கிடைக்கிறது.
5. ரீபில்ட் என்ஜின் புது என்ஜினைப்போல் பரிசீல செய்யப்பட்டு பூர்ணமான திருப்தி அடைந்த பிறகே வழங்கப்படுகிறது.

பெர்கின்ஸ் ரீபில்ட் என்ஜின் திட்டத்தைப் பற்றிய முழு விவரங்களுக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு தயவுசெய்து எழுதவும்

For PERKINS Engines
Simplex Genuine Spare Parts
Regd. Trade Mark

ஸிம்ஸன் அண்டு கம்பெனி லிமிடெட்
(பிளாண்ட் 11)

தபால் பெட்டி No. 856, செம்பியம், சென்னை 11
கிளைகள் பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, சிகந்தராபாத

5-359